DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
25வது வெள்ளி விழா
2021
UTHAYAN
உதயன்
கிழக்கும் மேற்கும் தமிழ் உலகின் உலகில்
$1.00
416-752-1524
www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
முதல் தரம் வீடு வாங்குபவர்களுக்கான அரசாங்க சலுகைகள் பற்றி அறிய என்னை அழையுங்கள்
Selva Karthigesu B.com (Hons)
Sales Representative
416-648-9757
CENTURY 21

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1327 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday September 10, 2021

# 600 Million Dollars invested to improve Ventilation System in each and every Classroom in Ontario Schools - *Education Minister Stephen Lecce*

# ஒன்றாரியோ பாடசாலைகளின் ஒவ்வொரு வகுப்பறையிலும் காற்றோட்டத்தை சுத்திகரிக்க $600 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளன

***– கல்வி அமைச்சர் ஸ்ரிபன் லெட்சே***



- ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்

‘விடுமுறை நாட்கள் கழிந்து இன்று மீண்டும் திறக்கப்பட்டுள்ள ஒன்றாரியோ பாடசாலைகளின் ஒவ்வொரு வகுப்பறையிலும் காற்றோட்டத்தை சுத்திகரிக்க 600 மில்லியன் டாலர்கள் ஒதுக்கப்பட்டு அதற்குரிய பொறியியல் தொழில் நுட்பம் சார்ந்த திருத்த வேலைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும். எமது மாகாணத்தின் ஒவ்வொரு பாடசாலையிலும் வகுப்பறைகளில் கல்வியை மேற்கொள்ள மீண்டும் இணைந்துள்ள மாணவர்கள் அனைவரதும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. பாடசாலைகளுக்கு வந்துள்ள அனைத்து மாணவர்களின் உடல் நலத்தைக் கவனிக்க மருத்துவத் தாதிகளும் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது’

*(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)*

# கோவிட்-19நோய்த் தொற்றானது அரச இயந்திரத்தின் அனைத்து கூறுகளையும் ஆக்கிரமித்துக்கொள்ள, மார்ச் 2020 தொடக்கம் எமது அரசாங்கத்திற்கு ஒரு பெரும் சவாலாவே அமைந்தது

***- மார்க்கம் ஸ்ரோவில் தொகுதியின் லிபரல் வேட்பாளர் ஹெலெனா ஜேசேக்***



“கடந்த மார்ச் 2020 தொடக்கம் கனடாவின் அரச இயந்திரத்தின் பெரும் கூறுகளை கோவிட்-19 தொற்றானது ஆக்கிரமித்துக்கொள்ளவே, அது எமது அரசாங்கத்திற்கு பெரும் சவாலாகவே இருந்தது. அவ்வாறு இருந்தும், எமது பிரமரும் ஏனைய அமைச்சர்களும் இரவு பகலாக கடுமையாக பணியாற்றியதால் அனைத்துக் கனேடிய மக்களும் நோய்த் தொற்றின் தாக்கத்திலிருந்து மீண்டு வருவதற்கு உதவியாக இருந்தது. அந்த வகையில் ஒரு மருத்துவர் என்ற வகையில் எனக்கும் கனடாவின் பிரதான மருத்துவக் குழுவில் இணையும் படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

*(உள்ளே விபரமான செய்தி 10ம் பக்கத்தில்)*

DAWN TRANSPORTS & SERVICES
FREE ESTIMATES
மூவிங் & டெலிவெறிஸ்
26 FEET | CARGO VAN
உங்கள் DELIVERY தேவைகளுக்கு
இலவச மதிப்பீடு Tel: 416-452-2251
We do packaging, wrapping, Moving to storage, Junk removal Express Services Available

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

வாகன மற்றும் வீடுகளுக்கான காப்புறுதித் தேவைகளுக்கு என்னை அழையுங்கள்
Home Auto Commercial & Liability
We do all types of insurance and work with over 20 different companies.
High risk, Uber, Landlord, etc...
PLEASE CALL:
(647) 338-6916
(416) 520-6916
EMAIL: INSURANCEHELPER@OUTLOOK.COM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line | Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 | 905 272 1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 | 905 794 4404

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

## திரிகரண சுத்தி – நோக்கு மர்மம்

அற்புதமான பயிற்சி முறை

சுத்த வெளி சபை சார்பாக 10 நாட்கள்



Yoga Guruji

**A N Dhanasekaran ayya**

அவர்களால்

**குருவின் திருவருளால்**
**இலவசமாக நடத்தப்படுகின்றது**

**தேதி: 15-09-2021-24-09-2021**

**கனடா நேரப்படி:**

காலை 8:30 மணி தொடக்கம் 10:00 மணி வரை
மாலை 7:30 மணி தொடக்கம் 9:00 மணி வரை
15-09-2021 இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது

**Zoom Id : 669 750 5000 Pwd : 223 138**

For more information call: **(647) 705-5455**

அன்பர்கள் ஏதேனும் ஒரு வேளையில் கலந்து கொள்ளலாம். முடிந்தவர்கள் இருவேளையிலும் கலந்து கொணடு பயன் பெறலாம்.

## TAMIL CANADIAN WALK 2021

IN SUPPORT OF

GORD DOWNIE & CHANIE WENJACK FUND

**13th ANNUAL TAMIL CANADIAN WALK-A-THON**

SEPTEMBER 12 2021, 9AM

THOMSON MEMORIAL PARK

HOSTED BY: BENEFICIARY:

DOWNIE & WENJACK FUND

# சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### OFFICE HELP WANTED

**Scarborough** வில் உள்ள **Trucking Company** ஒன்றிற்கு **Receptionist / General Office Help** வேலைக்கு ஆள் தேவை.
Applicant must have computer & communication skills.
Salary negotiable.

CALL: JAY

**(416) 771-8041**

### காரைக்குடி செட்டிநாடு உணவகத்தில் வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் கென்னடி - லோறன்ஸ் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள காரைக்குடி செட்டிநாடு உணவகத்திற்கு தோசை மற்றும் பரோட்டா தயாரிக்க நல்ல சமையல் வல்லுனர்கள் உடனடியாகத் தேவை.
சிறிது அனுபவம் விரும்பத்தக்கது.
தகுந்த சம்ளம் வழங்கப்படும்.
அத்துடன் **Kitchen Helper, Dishwasher** தேவை.

**Call: (416) 701-0003**

### BASEMENT FOR RENT

**Morningside / Sheppard** சந்திப்பிக்கு அருகில் **1 bedroom basement with separate entrance** வாடகைக்கு உண்டு. **Close to all amentities.**

**CALL: (416) 464-1853**

### DISH WASHERS வேலை வாய்ப்பு

மிசிசாகா நகரில் உள்ள **Indian Restaurant** க்கு முழு நேரம் மற்றும் பகுதி நேரம் **dish washers** தேவை.
நல்ல சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:

**kumargurunala@gmail.com**

அல்லது

**416-319-4921**

### உணவகத்தில் வேலை வாய்ப்புக்கள்

**Etobicoke, Mississauga** ஆகிய நகரங்களில் உள்ள கனடிய உணவகங்களில் பின்வரும் வேலை வாய்ப்புக்கள் உடடியாக உண்டு.
**Cooks** (சம்பளம் $ 20.00), **Kitchen Helpers** (சம்பளம் $ 20.00), **Waiters** ஆகிய வேலைகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு தேவைப்படின் தங்குமிட வசதியும் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: (416) 825-7785
அல்லது (416) 827-4426

### CLEANERS WANTED

(subcontract)

**Weston / Hwy 7** சந்திப்புக்கு அருகில்.

**Please Contact us @**

**(416) 412-3223**

### வேலை வாய்ப்பு

**Scarborough** நகரில் **Markham / Ellesmere** சந்திப்புக்கு அருகில் **Manufacturing Workers** மற்றும் **Forklift Driver** வேலைகளுக்கு ஆட்கள் தேவை. **Full-time, Morning Shifts.**

**Looking for Workers and Forklift Driver to add to our team.**
**We are looking for hard-working and dedicated people for a long-term position.**

தொடர்புகளுக்கு: **ESSAN**

**(647) 993-2872**

### திருமண ஏற்பாடுகள் MARRIAGE BROKER

கனடாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள மணமக்களை இணைத்து திருமணம் வரையும் அவர்களை அழைத்துச் சென்று இல்லற வாழ்க்கையில் இணைத்திடும் வகையில் நாம் ஏற்பாடுகள் செய்வோம்.
சகல விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்:

**(416) 505-2764**

### CLEANING SUPERINTENDENT & CLEANERS WANTED

**Etobicoke, Scarborough** ஆகிய நகரங்களில் **Cleaning Superintendent & Cleaners** வேலை வாய்ப்புக்கள் உடடியாக உண்டு.
அனுபவம் தேவையில்லை.

**CALL:**

**(647) 864-3016**

அல்லது

**(647) 936-3806**

### HELP WANTED

**Furniture Finishing Company** ஒன்றிற்கு **Full-Time / Part-Time Sprayer & Sander** வேலைக்கு ஆள் தேவை.

**PLEASE CALL:**

**(416) 636-3655**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் உதயன் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# சாதாரண மக்கள் வாழ்வதற்குப் போராடும் நெருக்கடியான நிலையில் இலங்கை

இலங்கையில் பணம் படைத்தவர்கள் எவ்வித சிரமங்களும் இன்றி வாழ்ந்து வருகையில். சாதாரண மக்கள் உண்ண உணவின்றியும் கையில் பணமின்றியும் தங்கள் வாழ்க்கையை தொடர்ந்து நடத்த நெருக்கடியான நிலை தோன்றியுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிப்பதை நாம் சாதாரணமான ஒரு செய்தியாக வாசித்துவிட்டு போய்விட முடியாது. மேலும் அங்கு பாரிய உணவு தட்டுப்பாடு ஏற்படும் ஆபத்துக்கள் தோன்றியுள்ளதாகவும் பணம் படைத்தவர்கள் உணவுப் பொருட்களை மொத்தமாக கொள்வனவு செய்து இலங்கையில் ஏழை மக்களுக்கு மத்தியில் ஒரு 'செயற்கையான' உணவுப் பஞ்சத்தை ஏற்படுத்த அரசியல்வாதிகள் சிலரும் பெரும் வர்த்தகர்கள் சிலரும் திட்டமிட்டு செயற்படுவதாக இந்தியாவில் பம்பாயிலிருந்து வெளியாகும் பிரபல சஞ்சிகை தெரிவித்துள்ளது.

அத்துடன் கொவிட் தொற்றினால் ஏற்பட்டுள்ள ஆபத்தான பொருளாதார நெருக்கடியின் பிடியில் இலங்கை சிக்கியுள்ளதாகவும் இதனால் ஏழை மக்களும் வருமானம் குன்றியுள்ள குடும்பத்தினரும் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உணவு மாத்திரமின்றி மருந்து தட்டுப்பாடும் இலங்கையில் ஏற்பட்டுள்ளதாகவும், சீனி, அரிசி உட்பட பொருட்களை கொள்வனவு செய்வதற்காக மக்கள் கடைகளுக்கு முன்னால் வரிசைகளில் நிற்பதனை அவதானிக்க முடிவதாக குறிப்பிடப்படுகின்றது.

சிலர் உணவு பற்றாக்குறைக்கு தயாராகியுள்ள நிலையில் பாரிய அளவில் விலையிலும் உணவு பொருட்களை கொள்வனவு செய்வதாக அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் அனைத்து பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளதாகவும் சாதாரண மக்களால் அந்த நிலைமையை தாங்கிக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருட்களின் விலை பாரிய அளவு அதிகரித்துள்ளதனை தொடர்ந்து இலங்கை அதிகாரிகள் பொருளாதாரம் நடவடிக்கை தொடர்பில் அவசர நிலைமையை அறிவித்துள்ளனர்.

வெளிநாட்டு இருப்பு குறைந்து வருவதால் நாணய மாற்று விகிதங்கள் பலவீனமடைந்துள்ளதாகவும், இறக்குமதி மற்றும் கடன் தவணைகளை செலுத்த இலங்கை சிரமப்படுவதாகவும், மற்ற நாடுகளில் இருந்து உணவு மற்றும் மருந்து வாங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான செய்திகளைப் பார்க்கும் போது உலகெங்கும் முதலாளித்துவத்தை பாதுகாக்கும் ஆட்சியாளர்களே நிறைந்திருப்பதால் சாதாரண மக்கள் உலகின் எப்பாகத்திலும் வாழ்க்கையின் அடி மட்டத்திற்கு பலவந்தமாக அழைத்துச் செல்லப்படுவார்கள் என்ற கூற்றே எமக்கு முன்பாக தோன்றி எம்மை அச்சுறுத்துகின்றது.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA

3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# 'சர்வ வல்லமை பொருந்தியவரும் 'இரும்புப் பெண்மணி' கௌரிசங்கரி தவராஜா இழப்பு ஈழத்தமிழர்களால் ஈடு செய்ய முடியாதது'

***சட்டத்தரணி கௌரிசங்கரி தவராஜா அவர்களின் நினைவான கனடா அஞ்சலி நிகழ்வில் புகழாரம்***



அண்மையில் கொழும்பில் காலமான சட்டத்தரணி கௌரிசங்கரி தவராஜா அவர்களின் மறைவையொட்டி கனடாவில் இயங்கிவரும் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினர் திங்கட்கிழமை மாலை கனடா ஸ்காபுறோவில் அஞ்சலி நிகழ்வொன்றை நடத்தினர்.

மேற்படி அஞ்சலி நிகழ்ச்சியை சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் திரு பகீதரன் தொகுத்து வழங்கினார்.

புங்கிடுதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்ட சிவாச்சாரியப் பெருமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள்மற்றும் ஜனாதிபதிச் சட்டத்தரணி திரு தவராஜாவின் உறவினர்கள் நண்பர்கள் என பலரும் அங்கு அஞ்சலி உரையாற்றினார்கள். அவர்களுடன் ஊடகவியலாளர்கள் சார்பில் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கமும் உரையாற்றினார்.

அங்கு உரையாற்றிய அனைவரும் மறைந்த சட்டத்தரணி திருமதி கௌரிசங்கரி தவராஜாவின் ஆற்றலையும் மனித நேய உணர்வையும். மற்றும் இன உணர்வையும் பாராட்டியும் வியந்தும் குறிப்பிட்டுச் சொல்லியும் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள்.

சிவாச்சாரியார்கள் சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஸ்ணராஜக் குருக்கள், சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் மற்றும் இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கம் உட்பட அங்கு உரையாற்றிய அனைவரும் மறைந்த சட்டத்தரணியான சௌரிசங்கரி பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக உடனே-யே நீதி மன்றங்களில் ஆஜராகும் துணிவு மிகக் கொண்டவர் என்றும் தங்கள் உரைகளில் தெரிவித்தனர்.

# இலங்கைப் பிரதமர் மகிந்த ராஜபக்ச இத்தாலி பயணமானார்



இத்தாலிக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான தூதுக் குழுவினர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து இன்று 10ம் திகதி அதிகாலை புறப்பட்டனர்.

இவ் விஜயத்தின் போது பிரதமர் ஜி 20 சர்வ மத மற்றும் கலாச்சார மாநாடு – 2021 இன் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு தலைமை உரை ஆற்றவுள்ளவுடன், இராஜதந்திர சந்திப்புகளிலும் கலந்து கொள்ளவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜிஉல்பீரிஸ், பிரதமரின் செய்லாளர் காமினி செனரத் உள்ளிட்ட தூதுக் குழுவினர் பிரதமருடன் இவ் விஜயத்தில் இணைந்து கொண்டுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

RE-ELECT **JEAN YIP**

**DELIVERING FOR SCARBOROUGH -- AGINCOURT**

- 26.7 மில்லியன் டாலர்கள் நிதி ஒதுக்கீடு
  Bridletowne Neighbourhood Centre
- 6 இலட்சம் டாலர்களுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு
  New Horizons for Seniors Program and increased GIS and OAS Payments
- 2.17 மில்லியன் டாலர்களுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு
  Canada Summer Jobs for Youths and Students
- 943,991 டாலர்கள் நிதி ஒதுக்கீடு
  தேசிய வீட்டு வசதிகளுக்காக முதலீடு
- 2.26 பில்லியன் டாலர்களுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு
  Scarborough Subway Expansion
- 10090 Scarborough-Agincourt குடும்பங்கள் Canada Child Benefit திட்டத்தால் பயன் பெற்றார்கள்
- நோய்த் தொற்றுத் தடைக்காகவும் இன்னும் பல விசேட திட்டங்களுக்காகவும் அதிகமான நிதி ஒதுக்கீடு

READ OUR FULL PLATFORM HERE: ---> HTTPS://LIBERAL.CA/OUR-PLATFORM/

FORWARD. FOR EVERYONE.



ஜீன் யிப் ஸ்கார்பரோ எஜின்கோர்ட்டில் வாழும் பல் கலாச்சார சமூகங்கத்தின் நம்பிக்கை உடையவராகவும் தோழமை மிக்கவராகவும் இருக்கிறார். அவர் தனது தொகுதி மக்களுக்கிடையேயான ஐயப்பாடுகளை மாதாந்தம் நடைபெறுகின்ற வட்ட மேசை விவாதங்கள் மற்றும் சமூகக் கூட்டங்கள் மூலம் அறிந்து, அனைவர்சார்பிலும் குரல் கொடுத்து வருகின்றார். தொற்றுநோய்காலத்தில் லிபரல் அரசாங்கமும் ஜீன் யிப்பும் வழங்கிய ஆதரவு கனேடிய வரலாற்றில் தங்க எழுத்துக்களில் எழுதப்பட வேண்டியவையாகும். ஸ்கார்பரோ-எஜின்கோர்ட் மக்களை தொடர்ந்து பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக ஜீன் யிப்பின் மறுதேர்தலை அங்கீகரிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். -- சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயக்குமாரக் சமூகத் தலைவர் ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம். Dr. Panchadchara Vijayakumara Kurukkal, local Hindu community leader



Campaign Office:
11 Ivy Bush Ave.
Scarborough, ON M1V 2W7

Email: info@jeanyip.ca
Phone: (647) 428-1876
Website: www.jeanyip.ca

Authorized by the Official Agent for Jean Yip

**BE A VOTER**

ADVANCE POLLS

| SEPTEMBER | | | |
|---|---|---|---|
| 10 FRIDAY | 11 SATURDAY | 12 SUNDAY | 13 MONDAY |

9:00 AM – 9:00 PM

SCAN HERE TO VISIT WWW.HOW2VOTE.CA

One piece of valid government-issued I.D. with your photo, name, and current address

For more voter information visit: elections.ca

QUESTIONS? NEED A RIDE?



# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

கனடிய செய்திகள்
Canadian News

# 600 Million Dollars invested to improve Ventilation System in each and every Classroom in Ontario Schools - *Education Minister Stephen Lecce*

# ஒன்றாரியோ பாடசாலைகளின் ஒவ்வொரு வகுப்பறையிலும் காற்றோட்டத்தை சுத்திகரிக்க 600 மில்லியன் டாலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது — *கல்வி அமைச்சர் ஸ்ரிபன் லெட்சே*

**- ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்**



"விடுமுறை நாட்கள் கழிந்து இன்று மீண்டும் திறக்கப்பட்டுள்ள ஒன்றாரியோ பாடசாலைகளின் ஒவ்வொரு வகுப்பறையிலும் காற்றோட்டத்தை சுத்திகரிக்க 600 மில்லியன் டாலர்கள் ஒதுக்கப்பட்டு அதற்குரிய பொறி-யியல் தொழில் நுட்பம் சார்ந்த திருத்த வேலைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும். எமது மாகாணத்தின் ஒவ்வொரு பாடசாலையிலும் வகுப்பறைகளில் கல்வியை மேற்கொள்ள மீண்டும் இணைந்துள்ள மாணவர்கள் அனைவரதும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. எனவே பெற்றோர்கள் எவரும் கவலைப் படத் தேவை எதுவுமே இல்லை. பாடசாலைகளுக்கு வந்துள்ள அனைத்து மாணவர்களின் உடல் நலத்தைக் கவனிக்க மருத்துவத் தாதிகளும் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது".

இவ்வாறு தெரிவித்தார், கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் திரு. ஸ்ரிபன் லெட்சே அவர்கள். இன்று பிற்பகல் ரொரன்ரொ பெரும்பாகத்தில் உள்ள பல்லின பத்திரிகையாளர்களை இணைய வழி கலந்துரையாடல் ஒன்றில் சந்தித்து அவர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார். அவரோடு மேற்படி கலந்துரையாடலில், ஒன்றாரியோ மாகாணத்தின் குடிவரவு அமைச்சர் பாம் ஹில் அவர்களும் கலந்து கொண்டு கலந்துரையாடலை நெறிப்படுத்தினார்.

மேற்படி பல்லின ஊடகவியலாளர்களின் கலந்துரையாடலில் உதயன் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டு தங்கள் கேள்விகளை முன்வைத்தனர். அங்கு உரையாற்றிய கல்வி அமைச்சர் முதலில் அனைத்து மொழி சார்ந்த பத்திரிகையாளர்களுக்கும் நன்றி தெரிவிததார். பின்னர் அவர் தனது உரையைத் தொடர்ந்தார்.

"நாம் பல்வேறு சவால்களைக் கடந்து சென்றுதான் இன்று எமது மாகாணத்தின் பாடசாலைகள் அனைத்தையும் மீண்டும் திறந்துள்ளோம். எமது மாணவர்களை பாதுகாத்த வண்ணம் அவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்க வேண்டிய கடமையையும் பொறுப்பும் எமக்கு உண்டு என்பதை நாம் உணருகின்றோம். மாகாணத்தில் பாட-சாலைகளை மீண்டும் திறப்பதற்கு நாம் சிறந்த ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். அதில் ஆசியர்கள் மற்றும் பாடசாலைகளில் பணியாற்றும் பொதுப் பணியாளர்கள் அனைவரும் தேவையான தடுப்பூசிகளை பெற்றவர்களாக இருக்க வேண்டும். அததுடன் பாடசாலைகளில் கடமைக்கு வரும் போதும் வாரத்திற்கு இரண்டு தடவைகள் தங்கள் நோய்த் தொற்று பரிசோதனைகளை மேற்கொண்டவர்களாக இருக்க வேண்டும்.இதைக் கண்காணிப்பதற்கு மருத்துவத்துறை சார்ந்தவர்கள் பணியாற்றுகின்றார்கள்." என்றார்.

பின்னர் பாடசாலைகளில் வகுப்பறைக் கல்வியைத் தொடர விரும்பாதவர்களுக்கு எந்த வகையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்ற கேள்வியை ஒரு சீன மொழிப் பத்திரிகை ஆசிரியர் முன் வைத்த போது பதிலளித்த அமைச்சர் "பாடசாலைகளில் வகுப்பறைக் கல்வி முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் தற்போது, ரிவிஓ மற்றும் பெயர் சைல்ட் ரிவி ஆகிய தொலைக்காட்சி நிறுவனங்கள் ஊடாக இணையவழிக் கல்வி பயிலும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அதற்குரிய விபரங்களை பாடசாலைகளிலிருந்து பெற்று அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தொலைக் காட்சி கல்வி கற்பிக்கும் ஏற்பாட்டின் படி ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட பாடங்கள் அங்கு ஓளிபரப்பாகின்றன" என்றார்.

மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாக என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்ற கேள்வியை முன்வைத்த ஒரு பத்திரிகையாளருக்கு அமைச்சர் பதிலளிக்கும் போது, "பாடசாலைகளில் கல்வி கற்க வரும் மாணவர்களின் உடல் நலம் பற்றி முன்னேற்பாடுகள் பல செய்யப்பட்டுள்ளன. அவர்களுக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு அல்லது அவர்களுக்கு உடல் வெப்பநிலை மாற்றம் ஏதாவது ஏற்பட்டால் அவர்களைக் கவனிக்க தாதியர்கள் உடனடியாக பணிக்கு அழைக்கப்படுவார்கள். அவ்வாறு இருந்தும் மாணவர் எவராவது மோசமான வகையில் உடல் நலம் குன்றியிருந்தால் பெற்றோர்கள் தொடர்பு கொள்ளப்பட்டு தொடர்ந்து அவர்களின் பொறுப்பில் கையளிக்கப்படுவார்கள்" என்றார்.






இன்றைய தினம் பாடசாலைகளின் மாணவர்கள் வருகை தொடர்பாக அமைச்சர் என்ற வகையில் கனடா உதயன் பத்திரிகையின் சார்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போது அமைச்சர் தெரிவிக்கையில் "இன்று சில பாடசாலைக்கு நானும் என அமைச்சின் அதிகாரிகளும் சென்றிருந்தோம். அங்கு மாணவர்களோடு உரையாடுகையில் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியோடு காணப்பட்டார்கள். ஆசிரியர்களின் வேண்டுகோளின் படி அவர்கள் எப்போதும் முகக்கவசம் அணிந்திருந்தார்கள். எங்கள் முயற்சி வீணாகவில்லை என்றே கருதுகின்றேன்" என்றார் அமைச்சர்.

# General Election in Canada – September 20th

## Conservative Candidate Mohsin puts his name forward to represent us in Scarborough Southwest

## கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் வேட்பாளர் மொஹ்சின் புய்யன் அவர்கள் பற்றிய குறிப்புக்கள்

ஸ்காபுறோ தென் மேற்கு தொகுதியின் கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் வேட்பாளர் மொஹ்சின் புயான் அவர்கள் ஒரு கனடிய சமூக அமைப்பாளர், வெற்றிகரமான வர்த்தகப் பெருமகன் மற்றும் அனுபவம் வாய்ந்த தலைவர்.

பங்களாதேசில் பிறந்த மொஹ்சின் டாக்காவின் ஜகன்னாத் பல்கலைக்கழகத்தில் இளங்கலை பட்டப்படிப்பை முடித்தார். மொஹ்சின் 1991 இல் கனடாவில் குடியேறினார். பின்னர் ஜார்ஜ் பிரவுன் கல்லூரி மற்றும் சென்றானியல் கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்களில் கற்று பல டிப்ளோமாக்களைப் பெற்றார்.

மொஹ்சின் 1994 இல் ஸ்கார்பரோவில் குடியேறினார். மற்றும் அவரது மனைவி டோலியுடன் ஸ்கார்பரோ தென்மேற்கில் 17 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வருகின்றார். ஒன்றாக, அவர்கள் தங்கள் மூன்று புதல்விகளை வளர்த்து, வெற்றிகரமான சிறு வணிக நிறுவனத்தையும் இங்கு வளர்த்துள்ளனர்.

இவரது மூன்று புதல்விகளும் உள்ளூர் பள்ளிகளில் படித்தனர் - ஜான் ஏ. லெஸ்லி பப்ளிக் ஸ்கூல், ஃபேர்மவுண்ட் பப்ளிக் ஸ்கூல், ஆர்.ஹெச். கிங் அகா-டமி மற்றும் சாடெக் ஞ டபிள்யூ.ஏ. போர்ட்டர் சி.ஐ. ஆகியவற்றில் கல்வி கற்று தற்போது இருவர் பல்கலைககழகம் சென்றுள்ளனர்.

சமூகத்தின் தீவிர உறுப்பினராக, மொஹ்சின் லயன்ஸ் கழக அங்கத்தவர் ஆவார். அத்துடன், கனடா வங்காளதேச வர்த்தக சபையின் உறுப்பினராக உள்ளார், மேலும் கோவிட்-19 சமூக ஆதரவு திட்டத்தையும் நண்பர்களோடு சேர்ந்து தொடங்கினார்.

ஸ்காபுறோ தென் மேற்கு தேர்தல் தொகுதியில் பல வருடங்களாக மக்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள். மற்றும் எங்கள் மின்னஞ்சல்கள், தொலைபேசி அழைப்புகள் மற்றும் விண்ணப்பங்கள் ஆகியவற்றை லிபரல் கட்சி உறுப்பினர் நிராகரித்தும் புறக்கணித்தும் வந்துள்ளார்.

ஸ்கார்பரோ தென்மேற்கு தொகுதியானது மிகவும் சிறந்தது. அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களின் ஊக்கத்துடன், மொஹ்சின் ஸ்கார்பரோ தென்மேற்கில் நமக்குத் தேவையான பிரதிநிதியாக தற்போது போட்டியிடுகிறார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் வெளிப்படையான மற்றும் பொறுப்புள்ளவர்களாக இருக்க வேண்டும், வரி செலுத்துவோரை மதிக்க வேண்டும், எங்கள் சமூகங்களில் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு உதவ வேண்டும், மேலும் உங்களை மனதில் கொண்டு பிரச்சினைகளை அணுக வேண்டும் என்று கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் வேட்பாளர் எமது நண்பர் மொஹ்சின் நிச்சயமாக நம்புகிறார்.

மொஹ்சின் இந்த தொகுதியில் வசிக்கிறார், இங்கே வேலை செய்கிறார், இங்கேயே சுறுசுறுப்பாக சமூகப் பணி-யில் இருக்கிறார். அவர் உங்கள் மதிப்புகளையும் உங்கள் கவலைக-ளையும் பகிர்ந்து கொள்கிறார், மேலும் அவர் ஸ்கார்பரோ தென்மேற்கில் வசிப்பவர்களின் பல்வேறு தேவைக-ளைக் கவனிக்கும் வகையில் சேவை செய்யத் தயாராக இருக்கிறார்.



Conservative

**416-901-VOTE (8683)**
**F02- 101 Lebovic Ave**
**Scarborough, ON. M1L 0J2**
**www.mohsinbhuiyan.ca**
**vote@mohsinbhuiyan.ca**


ON SEPTEMBER 20
VOTE
LIBERAL
For $10 a day child care
For housing affordability
For a permanent increase to GIS payments for seniors
Authorized by the registered agent for the Liberal Party of Canada.


chatr
AUTHORIZED DEALER
NATION-WIDE TALK, TEXT & DATA PLAN
$25/mo.
Scarborough Town Centre | 300 Borough Drive | Toronto, ON | 647-847-3634
Offer subject to change without notice. Get up to 500MB of data on the Talk, Text and Data Plan. Once you reach your 3G speed data allotment, your data speed will be reduced until your next anniversary date. Taxes extra. ™ Trademarks used under license ©2021

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# டயர் வெடித்ததால் தடம் புரண்ட லொறி

## வீதியில் உருண்டோடிய தார்பூசணிகள்

கல்முனை பாண்டிருப்பு பிரதேசத்தில் செவ்வாய்கிழமை (7) இரவு 07:30 மணியளவில் இடம் பெற்ற விபத்தில் வாகனத்தில் பயணித்த இருவரும் அதிஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட ஓட்டமாவடி பிரதேசத்திலிருந்து அக்கரைப்பற்றை நோக்கி ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள 1720 கிலோ கிராம் நீர் பூசணிக்காயை ஏற்றிக்கொண்டு வந்த லொறியே இந்த விபத்தில் சிக்கியது. பின்பக்க டயர் வெடித்தமையே விபத்துக்கான காரணம் என அறியப்பட்டுள்ளது.







ஸ்தலத்திற்கு விரைந்த கல்முனை போக்குவரத்து பொலிஸார் வாகனப் போக்குவரத்தை நிறுத்தி பிரதேச மக்கள் மற்றும் வீதிப்பயணிகளின் உதவியுடன் கவிழ்ந்து கிடந்த லொறியே நிமிர்த்தினர். சுமார் 20 நிமிடம் அளவில் வேகமாக செயற்பட்ட பிரதேசவாசிகள் குறித்த லொரியையும், வீதியில் விழுந்து கிடந்த நீர் பூசணியையும் மீட்டனர்.

இருந்த போதிலும் சுமார் 200 கிலோ அளவில் சேதமாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி மண்ணை பெருமைப்படுத்திய வகையில் அந்த பிரதேசத்தைச் சேர்ந்த தேனுஜா, நிதுசா மற்றும் தனுசா ஆகிய மூன்று வீராங்கனைகள்

கிளிநொச்சி மண்ணை பெருமைப்படுத்தும் வகையில் இலங்கையின் தேசிய கபடி அணியில் முதற்கட்ட தெரிவில் அந்த பிரதேசத்தைச் சேர்ந்த தேனுஜா, நிதுசா மற்றும் தனுசா ஆகிய மூன்று வீராங்கனைகளுக்கும் எமது இனிய வாழ்த்துக்களை தெரிவித்து பல ஊடகங்களில் செய்திகள் வெளியாகி வருகின்றன.

என்றும் இல்லாத வகையில் இலங்கையின் தேசிய கபடி அணியில் முதற்கட்ட தெரிவில் கிளிநொச்சி உருத்திரபுரம் சிவநகர் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தின் மூன்று வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற தேசிய கபடி அணிக்கான முதற்கட்ட தெரிவில் நாடாளவிய ரீதியில் 25 பேர் கலந்துகொண்டனர். இதில் 18 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த 18 பேரில் கிளிநொச்சி வீராங்கனைகள் மூவரும் அடங்குகின்றனர்.

கிளிநொச்சி சிவநகர் பாடசாலையின் பழைய மாணவிகளான இவர்கள் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தின் நிரந்தர உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப கட்ட பயிற்சியை ஆசிரியர் இராமநாதன் பரஞ்சோதி அவர்களிடம் பெற்ற இவர்கள் கடந்த காலங்களில் தேசிய மட்ட போட்டிகளிலும் பங்குபற்றியிருந்தார்கள். எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இடம்பெறவுள்ள ஆசிய மட்ட கபடி போட்டிக்கான இலங்கை அணியின் முதற்கட்டத்தில் தெரிவில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.








# மன்னார் உப்புக்குளம் பகுதியில் சரிந்து விழ கூடிய நிலையில் காணப்படும் தண்ணீர் தாங்கியை அகற்ற கோரிக்கை



மன்னார் உப்புக்குளம் கடற்கரை பகுதி (பீச் ரோட்டில்) கடந்த 20 வருடங்களுக்கு மேல் பாவனை இன்றி கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் சுமார் 70 அடி உயரமான தண்ணீர் தாங்கி சரிந்து விழ கூடிய நிலை காணப்படுவதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.


இதனால் அதன் சுற்றுச் சூழலில் வசித்து வரும் மக்கள் தினமும் அச்சத்துடன் வாழ்ந்து வருவதுடன் அதன் அருகே உள்ள பீச் ரோட்டில் மக்கள் அச்சத்துடன் பயன்படுத்தியும் வருகின்றதாக மன்னார் மக்கள் நல்லாட்சி மன்றத்தின் பொதுச் செயலாளர் எம். யூனூஸ் கனூன் தெரிவித்தார்.

தற்போது அபாய நிலையில் காணப்படும் தண்ணீர் தாங்கிக்கு முன்பு காணப்படும் பாதையை அப்பகுதி மக்களும் ஏனைய மக்களும் அதிகம் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே இவ்விடயம் தொடர்பில் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு எதிர் வரும் காலங்களில் அனர்த்தம் ஏற்பட்டு உயிர்ச்சேதங்கள் ஏற்படுவதற்கு முன் விரைந்து செயல்பட்டு தண்ணீர் தாங்கியை உடன் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இப்பிரதேச மக்கள் சார்பாக பணிவன்புடன் வேண்டி நிற்கின்றேன். என அவர் மேலும் தெரிவித்தார்.

- மன்னார் நிருபர் (5-09-2021)






# திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 6 நாட்களுக்குள் 28 பேர் மரணம் – 846 தொற்றாளர்கள்!

திருகோணமலை மாவட்டத்தில் செப்டம்பர் முதலாம் திகதி தொடக்கம் ஆறாம் திகதி வரை 28 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளதாகவும் 846 தொற்றாளர்கள் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தினால் கடந்த வெளியிடப்பட்ட (06) நாளாந்தம் புதுப்பிக்கப்பட்ட அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் இதுவரைக்கும் 10 ஆயிரத்து 661 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 276 மரணங்கள் சம்பவித்துள்ளதாகவும், 156 கர்ப்பிணி தாய்மார்கள் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ஒரு வயது தொடக்கம் ஐந்து வயது வரை 164 சிறார்களும், 65 வயதுக்கு மேற்பட்ட 427 பேர் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், உளநலம் பாதிக்கப்பட்டவர்கள் 9 பேர் இனங் காணப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு பகுதியில் 2419 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் பதவிசிறிபுர பகுதியில் 209 பேரும், கோமரங்கடவல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 359 பேரும், குச்சவெளியில் 1141 பேரும், உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியில் 1794 தொற்றாளர்களும், மூதூரில் 1439 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் கிண்ணியாவில் 645 பேரும்,குறிஞ்சாங்கேணியில் 441 ஒரு பேரும், கந்தளாயில் 1263 பேரும், தம்பலகாமத்தில் 647 பேரும், சேறுவில பிரதேசத்தில் 242 பேரும், ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் 62 பேரும் இதுவரை தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

# கூட்டமைப்பு உடையுமா?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



**ஜெ**னிவாவை நோக்கி தமிழ் கட்சிகள் கடிதங்களை எழுதுவது புதியது அல்ல. தாயகத்திலிருந்தும் புலம் பெயர்ந்த தமிழ் சமூகத்தில் இருந்தும் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அதில் கட்சித் தலைவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்துப் போடுவதும் புதியதுஅல்ல. அவ்வாறு தாங்கள் வைத்த கையெழுத்துக்களை தாங்களே மறுதலிப்பதும் அல்லது ஒரே நாடாளுமன்ற உறுப்பினர் வெவ்வேறு அமைப்புகளின் கடிதங்களில் கையெழுத்துப் போடுவதும் புதியது அல்ல. கடந்த 12 ஆண்டுகளில் இதுபோன்ற பல கடிதங்கள் அல்லது அறிக்கைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக சில ஆண்டுகளுக்கு முன் நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி காலத்தில் ஜெனிவாவில் அரசாங்கத்துக்கு கால அவகாசத்தை வழங்கக்கூடாது என்று கேட்டு கிளம்பு எந்த தமிழ் தரப்புக்கள் சில ஓர் அறிக்கையைத் தயாரித்த அந்த அறிக்கைக்கு நாட்டில் உள்ள சுமார் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்மதத்தையும் பெற்றன. ஆனால் கட்சித் தலைவர் சம்பந்தர் ஒரு கூட்டத்தை கூட்டி உரமாகப் பேசியதும் அத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சிக்கு கட்டுப்பட்டு விட்டார்கள். அதன்படி ஜெனிவாக் கூட்டத்தொடரில் ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்தை மறைமுகமாக பாதுகாத்தார்கள்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது தமிழ் கட்சிகளை ஒருங்கிணைக்கும் வேலைகளை யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்தார்கள். அதில் எல்லா கட்சிகளும் ஒத்துழைத்தன. ஒரு கட்டத்தில் 13 அம்ச கோரிக்கைகள் அடங்கிய ஓர் ஆவணம் தயாரிக்கப்பட்டது. தமிழ் தேசிய மக்கள் முன்னணி இறுதிக்கட்டத்தில் அதிலிருந்து விலகி விட்டது. அதை தவிர்த்து ஏனைய கட்சிகள் அந்த ஆவணத்தில் கையெழுத்திட்டன. ஆனால் கையெழுத்திட்ட சிறிது காலத்திலேயே கூட்டமைப்பு வவுனியாவில் வைத்து அந்த ஆவணத்தை மறுதலித்தது.

கடந்த ஜெனிவா கூட்டத்தொடரின்போதும் மூன்று பெரும் கட்சிகளும் குடிமக்கள் சமூகங்களும் இணைந்து ஒரு கூட்டு கடிதத்தை கடந்த ஜனவரி மாதம் 21ஆம் திகதி அனுப்பின. அந்த கடிதத்தில் இலங்கை இனப் பிரச்சினையை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போகவேண்டும் என்று மூன்று கட்சிகளும் ஒன்றாக கேட்டிருந்தன. கடந்த 12 ஆண்டுகால தமிழ் அரசியலில் அது ஒரு மகத்தான அடைவு. ஆனால் கடிதம் அனுப்பிய குறுகிய காலத்துக்குள்ளேயே கூட்டமைப்பு குத்துக்கரணம் அடித்தது. ஜெனிவாவில் ஐநா தீர்மானத்துக்கான பூச்சிய வரைவு வெளியிடப்பட்டபோது கூட்டமைப்பு நசிந்து நசிந்து அந்த பூச்சிய வரைபை ஆதரிக்க தொடங்கியது. பூச்சிய வரை பூக்கும் எதிராக ஒரு கடிதத்தை அனுப்ப வேண்டுமென்று குடிமக்கள் சமூகத்தின் பிரதிநிதிகள் கேட்டபொழுது தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் விக்னேஸ்வரனின் கூட்டணியும் சம்மதித்தன. ஆனால் கூட்டமைப்பு பின்வாங்கியது. ஏன் என்றால் ஜெனிவா தீர்மானத்தை இறுதியாக்கும் நடவடிக்கைகளில் கூட்டமைப்பிற்கும் மறைமுகப் பங்களிப்பு இருந்த காரணத்தால் ஒரே நேரத்தில் இரட்டை வேடம் போட முடியாத ஒரு நிலை கூட்டமைப்புக்கு ஏற்பட்டது. அதன்பின் கஜேந்திரகுமாரும் விக்னேஸ்வரனும் 13வது திருத்தம் தொடர்பில் ஒரு பொது உடன்பாட்டுக்கு வரத்தவறிய காரணத்தால் அந்த இரண்டாவது கடிதம் அனுப்பப்படவில்லை.

இப்படித்தான் இருக்கிறது தமிழ் கட்சிகள் சேர்ந்து எழுதும் கடிதங்களும் கூட்டறிக்கைகளும். இப்படிப்பட்ட துர்ப்பாக்கியமான சுமார் 12 ஆண்டுகளின் பின்னணியில் மீண்டும் ஐநாவுக்கு கடிதம் எழுதுவதில் கட்சிகளுக்கிடையே குழப்பங்கள் மோதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த மாதம் 14 ஆம் திகதி ஐநா கூட்டத்தொடர் தொடங்குகிறது. கூட்டத்தொடரில் மனித உரிமைகள் ஆணையர் வாய்மூல அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பார். இது தவிர கடந்த தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டபடி சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஓர் செயலகத்தை நிறுவுவது குறித்து நடவடிக்கைகள் எடுக்கப்படக் கூடும்.

இக்கூட்டத் தொடரையொட்டி ஐநா வை நோக்கி ஒரு கடிதத்தை கூட்டாக எழுதவேண்டும் என்ற முயற்சியை டெலோ இயக்கம் முன்னெடுத்தது. இந்த முயற்சியை ஐநா வை நோக்கி முன்னெடுத்தது என்பதை விடவும் ஏனைய தமிழ் கட்சிகளை ஒருங்கிணைக்கும் அதன் முன்முயற்சிகளின் ஒரு கட்டமாக அவ்வாறு ஒரு கடிதத்தை தயாரித்தது என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும். தமிழ் கட்சிகளை ஒருங்கிணைக்கும் ஏற்பாடுகளை முதலில் தொடங்கியது சிவில் சமூகங்கள்தான். கடந்த ஐநாக்கூட்டத் தொடரையொட்டி சிவில் சமூகங்களைச் சேர்ந்த சில அனுசரணையாளர்கள் அதில் முயற்சி செய்து ஒரு கட்டம் வரையிலும் வெற்றி பெற்றார்கள். அதன்பின் மாவை சேனாதிராஜா சுமார் 10 கட்சிகளின் தலைவர்களை ஒருங்கிணைத்து தமிழ் தேசிய பேரவை என்ற பெயரில் ஒரு கட்டமைப்பை உருவாக்க போவதாக அறிவித்தார்.

அதற்குரிய சந்திப்புகளும் நடைபெற்றன. அதில் மதத் தலைவர்களையும் அவர் இணைத்திருந்தார். ஆனால் தமிழ் தேசிய பேரவை ஒரு கட்டத்துக்கு மேல் நகர முடியவில்லை. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் அதை ரசிக்கவில்லை என்று தெரிகிறது.அப்படி ஒரு பேரவையை உருவாக்குவதற்கான மாவை சேனாதிராஜாவின் முயற்சிகளில் சுமந்திரனும் பங்குபற்றினார். எனினும் சம்பந்தர் மாவை சேனாதிராஜாவின் 10 கட்சிக்கூட்டுக்கு ஒத்துழைக்கவில்லை.

மாவை சேனாதிராஜாவின் முயற்சிகள் ஒரு கட்டத்துக்கு மேல் நகராத ஒரு பின்னணியில்தான் டெலோ இயக்கம் அதை கையில் எடுத்தது. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் அவ்வியக்கத்துக்கு 3 ஆசனங்கள் கிடைத்தன. இந்த மூன்று ஆசனங்கள் காரணமாக அந்த இயக்கத்தின் பேரம் பேசும் தகுதி அதிகரித்திருப்பதாக அந்த இயக்கம் கருதுகிறது. அதன் உத்தியோகபூர்வ பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் அண்மை மாதங்களாக ஊடகங்களில் அதிகம் வெளித்தெரிகிறார். அவர் தெரிவிக்கும் கருத்துக்கள் சில கூட்டமைப்பின் தலைவர்கள் தெரிவிக்கும் கருத்துக்களோடு ஒத்துப்போகவில்லை.

மாவை சேனாதிராஜாவின் ஒருங்கிணைப்பு முயற்சிகள் தடைப்பட்டிருந்த ஒரு பின்னணியில் டெலோ இயக்கம் அம்முயற்சிகளை கையில் எடுத்தது. அதன் விளைவாக கடந்த மாதம் 21ஆம் திகதி ஒரு மெய்நிகர் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. இச்சந்திப்பில் கட்சித் தலைவர்கள் பங்குபற்றினார்கள் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் புளொட் இயக்கமும் சம்பந்தரும் அதில் பங்குபற்றவில்லை. சுமந்திரனும் பங்குபற்றவில்லை. ஏனென்றால் அவர் கட்சித் தலைவர் அல்ல. எனினும் உரையாடலில் ஒரு கட்டத்தில் ஸ்ரீகாந்தா ஒரு விடயத்தை சுட்டிக் காட்டியிருக்கிறார். அதாவது இதில் மாவை எடுக்கும் முடிவுகளை சம்பந்தரும் சுமந்திரனும் ஏற்றுக்கொள்வார்களா என்ற தொனிப்பட அவர் கேள்வி எழுப்பினார். அதைத்தொடர்ந்து இச்சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு சுமந்திரன் அழைக்கப்பட்டார். வழமை போல அவரும் அங்கு இருந்தவர்கள் மத்தியில் முரண்படாமல் தானும் அதற்கு ஒத்துழைப்பது போல ஒரு தோற்றத்தை காட்டியிருகிரார்.

அதேசமயம் தான் ஓர் அறிக்கையை தயாரித்திருப்பதாகவும் ஒரு சிங்கள சிந்தனைக் குளாத்துடன் இணைந்து அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கையை தான் அச்சந்திப்பில் பங்குபற்றிய கட்சித் தலைவர்களுக்கு அனுப்பி வைப்பதாகவும் உறுதி கூறியுள்ளார். ஆனால் கடந்த இரண்டு வாரங்களாக அவர் அதைச் செய்யவில்லை என்று ஏனைய கட்சிகள் கூறுகின்றன. அவரிடம் இருந்து அறிக்கை வராத ஒரு பின்னணியில் 5 கட்சித் தலைவர்களும் தங்களுடைய கடிதத்தை இறுதியாக்கி அனுப்புவது என்று முடிவெடுத்தார்கள். இச்சந்திப்புக்களில் பங்குபற்றிய மாவை சேனாதிராஜா வெள்ளிக்கிழமை பிற்பகல்வரையிலும் அதில் கையொப்பம் இடவில்லை. சம்பந்தரையும் சுமந்திரனையும் மீறி கையெழுத்துப் போடும் துணிச்சல் அவருக்கு இருக்கவில்லை என்று ஏனைய கட்சிகள் நம்புகின்றன. அதேசமயம் சுமந்திரன் தான் ஒப்புக் கொண்ட ஆவணத்தை வெள்ளி இரவுதான் அனுப்பியிருக்கிறார்.

அதிலிருந்த ஒரு சில பகுதிகளை ஏனைய கட்சித் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறிவிட்டார்கள். குறிப்பாக அதில் முன்னாள் ஐநா மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கையில் இருந்து சில பகுதிகள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளனவாம். அதில் இருதரப்பும் இழைத்த போர்க் குற்றங்கள் என்று கூறப்பட்டுள்ளது. அதை ஐநா கூறுவது வேறு. தமிழ்த் தரப்பு கூறுவது வேறு என்று கூறி 5 கட்சித் தலைவர்களும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. முடிவில் தாங்கள் ஏற்கனவே தயாரித்த கடிதத்தில் கையெழுத்திட்டு அதை கடந்த சனிக்கிழமை பகல் ஐநாவுக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

இவ்வாறு கூட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கும் பங்காளி கட்சிகள் தனியாக ஒரு கடிதத்தை கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய கட்சிகளோடு இணைந்து அனுப்பியமை என்பது கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்பட்டிருப்பதாக ஊடகங்கள் எழுதக் காரணமாக அமைந்தது. ஆனாலும் சம்பந்தர் இதுவிடயத்தில் பக்குவமாக நடந்து கொண்டதாக தெரிகிறது. அந்தக் கடிதத்தை காரணமாக வைத்து கூட்டமைப்பு பிளவுபடுவதை அவர் விரும்பவில்லை என்று தெரிகிறது. இந்நிலையில் சுமந்திரன் தயாரித்த கடிதத்தை சம்பந்தர் கூட்டமைப்பின் பெயராலேயே அனுப்பியுள்ளார். ஆனால் பிரயோக அர்த்தத்தில் அது தமிழரசுக்கட்சியின் கடிதம்தான். அதில் ஏனைய பங்காளிக் கட்சிகள் பங்குபற்றவில்லை. எனினும் சம்பந்தர் கூட்டமைப்பு உடையக் கூடாது என்று முன்னெச்சரிக்கையோடு அதை கூட்டமைப்பின் கடிதமாக அனுப்ப வேண்டும் என்று கேட்டதாக தகவல்.

இது விடயத்தில் சம்பந்தருக்கு தெரியும் பங்காளிக் கட்சிகள் அவ்வளவு இலகுவாக கூட்டமைப்பு உடைத்துக் கொண்டு வெளியே வரமாட்டார்கள் என்று. ஏனென்றால் அப்படி வெளியேறினால் தோற்கக்கூடும் என்ற பயம் அவர்களுக்கு இருக்கும் என்று அவர் நம்புகிறார். அதேசமயம் கட்சிகளும் கூட்டமைப்பை உடைத்துக் கொண்டு வெளிவரத் தயார் இல்லை என்றே தோன்றுகிறது. ஆனால் கூட்டமைப்புக்குள் இருந்து வெளியேறியவர்கள் வெல்ல முடியாது என்ற மாயை கடந்த பொதுத்தேர்தலின்போது உடைக்கப்பட்டுவிட்டது. மட்டக்களப்பில் வியாழேந்திரனும் யாழ்ப்பாணத்தில் கஜேந்திரகுமாரும் கஜேந்திரனும் விக்னேஸ்வரனும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். எனவே கூட்டமைப்பை ஒரு ஐக்கிய முன்னணியாக பேண வேண்டிய தேவை சம்பந்தருக்கும் உண்டு.பங்காளிக் கட்சிகளுக்கும் உண்டு. அந்த அடிப்படையில்தான் கூட்டமைப்பு உடைவது தடுக்கப்பட்டிருக்கிறதா?

இருக்கலாம். ஆனால் இந்தக்கடிதங்கள் விவகாரத்தில் அதிகம் பலவீனமடைந்தது மாவை சேனாதிராஜாதான். தமிழ்மக்கள் மத்தியில் தோன்றிய நீண்ட பாரம்பரியத்தை கொண்ட மூத்த கட்சி ஆகிய தமிழரசுக்கட்சி ஒரு பொருத்தமான தலைவர் இன்றி தடுமாறுவதை அது காட்டுகிறதா? துணிந்து முடிவெடுக்க முடியாத ஒரு தலைவராக மாவை காணப்படுகிறார். அதேசமயம் சம்பந்தரும் பங்காளிக் கட்சிகளை அரவணைத்து தலைமைத்துவத்தை உறுதியாக நிலைநாட்ட முடியாதவராகக் காணப்படுகிறார். இரண்டு கடிதங்கள் வெளிவந்தமை என்பது சம்பந்தரின் தோல்விதான். இதுவிடயத்தில் சம்பந்தரின் தலைமைத்துவமும் கேள்விக்குள்ளாகிறது மாவையின் தலைமைத்துவமும் கேள்விக்குள்ளாகிறது. ஆனால் தமிழ் மக்களோ அவிழ்த்த பாக்கு மூட்டை போல தொடர்ந்தும் சிதறிக் கொண்டே போகிறார்கள்?

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் மாவட்டத்தில் மின் தகன நிலையம் அமைக்க நல் உள்ளங்களிடம் இருந்து நிதி உதவி கோரப்படுகின்றது

மன்னார் மாவட்டத்தில் கொவிட்-19 மரணங்கள் தற்போது அதிகரித்துச் செல்லும் நிலையில் சடலங்கள் வவுனியாவில் உள்ள மின் தகன நிலையத்திற்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உடனடியாக மின் தகன நிலையத்தை அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ள மையினால் மாவட்டத்தில் உள்ள அனைவரது ஒத்துழைப்பும் எதிர் பார்க்கப்பட்டுள்ளது.

எதிர் வரும் வாரம் மன்னார் மாவட்டத்தில் மின் தகன நிலையம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடந்த 31 ஆம் திகதி மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம் பெற்ற விசேட கலந்து ரையாடலில் குறித்த தீர்மானம் முன் வைக்கப்பட்டது.

இடம் பெற்ற கலந்துரையாடலுக்கு அமைவாக மின் தகன நிலையத்தை மன்னார் நகரசபை பிரிவில் உள்ள மன்னார் பொது மயான பகுதியில் அமைக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மின் தகன நிலையத்தை அமைப்பதற்கும், வாகனத்திற்கு பணம் கொடுத்து சடலங்களை அனைவராலும் ஏற்றி வர முடியாது என்பதினால் வாகனம் ஒன்றை கொள்வனவு செய்யவும் சுமார் 30 மில்லியன் ரூபாய் நிதி தேவைப்படுகிறது.

நிதி போதாமை காரணமாக அரச சார்பற்ற அமைப்புக்கள், வெளிநாட்டில் உள்ள நண்பர்கள், தனவந்தர்கள் முன் வந்து உதவி செய்ய முன்வர வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

நிதி உதவியை செய்ய விரும்பும் நல் உள்ளங்கள் கீழ் குறிப்பிடும் வங்கி கணக்கிற்கு நிதியை வைப்புச் செய்ய முடியும்.

வங்கி விபரம்:
வங்கி - இலங்கை வங்கி (BOC)
கணக்கு இலக்கம் - 939526
பயனாளி - Officers Welfare Society Kachcheri
விபரம் - தகனம் (Crematorium)

- மன்னார் நிருபர்


Proposed Cremitorium Building 50' X 30' and Nerd Developed Semi Automatic LPG Cremator at Mannar District

| | | |
|---|---|---|
| Floor Area | - | 1500 Sqft |
| Construction Rate Per 1 Sqft | - | 6500 |
| Civil Cost | - | 9,750,000.00 |
| *Add :* | | |
| VAT 8% | - | 780,000.00 |
| * Total Building Construction Cost | | 10,530,000.00 |
| * Construction and Installation of a steel Chimney ( Hight 60 ft) | | 3,000,000.00 |
| * LPGas Burning Cremator system | | 6,500,000.00 |
| * Purchasing of Vehicle for funaral service | | 4,970,000.00 |
| Total Estimate Cost for Cremitorium | | 25,000,000.00 |

Note:
Urban Council Mannar has confirmed today (01.09.2021 ) to provide 05Mn (Five million) and 02 Nos. of Toilets also under construction by Urban Council Mannar at that place.

A.Stanley Demel
District Secretary
District Secretariat
Mannar.

Mrs. A. Stanley De Mel
District Secretary / Government Agent
Mannar District

# அனைத்துவகை தடுப்பூசிகளை வழங்குங்கள்!!

## ஜனாதிபதியிடம் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் கோரிக்கை!!



வடகிழக்கு மக்களின் எதிர்பார்புக்களின் அடிப்படையில் அனைத்துவகை தடுப்பூசிகளையும் வழங்குமாறு முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன் ஜனாதிபதிக்கு சனிக்கிழமை (4) அன்று கடிதம் அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; வடகிழக்கு பகுதிகளில் வசிக்கும் மக்களின் நன்மை கருதி அனைத்துவகை கொரோனா தடுப்பூசிகளையும் இந்தப்பிராந்தியத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக வடகிழக்கில் வசிக்கும் மக்கள் அல்லது இளைஞர்களில் அனேகமானவர்கள் ஐரோப்பா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகளுடன் தொடர்புகளை பேணுபவர்களாக உள்ளனர். குறிப்பாக தொழில் நோக்கத்திற்காகவோ அல்லது பல்வேறு காரணங்களிற்காகவோ வெளிநாடுகளிற்கு செல்லும் நோக்கம் அவர்களிடம் இருக்கின்றது. நாட்டின் தலைவர் என்றவகையில் அதனை நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள் என நம்புகின்றேன்.

இந்நிலையில் ஐரோப்பா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகளிற்கு செல்லும் இலங்கையை சேர்ந்த பயணிகள் பைசர், அஸ்ராசெனேகா, மொடேர்னா போன்ற கொரோனா தடுப்பூசிகளின் இரண்டு செலுத்துகைகளையும் பெற்றிருக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் வடகிழக்கு பகுதியில் இதுவரையான காலப்பகுதியில் சீனா நாட்டினால் வழங்கப்பட்ட சினோபார்ம் தடுப்பூசிகளே அதிகம் ஏற்றப்பட்டுவருகின்றது.

இதனால் வெளிநாடு செல்லும் நோக்கத்துடன் இருக்கும் அனேகமான பொதுமக்கள் சீனநாட்டு தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ளாத அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது தொடரும் பட்சத்தில் கொரோனா தொற்றுப்பரவலடைந்து, உயிரிழப்புக்களும் மென்மேலும் அதிகரிக்கும் அபாயநிலமை காணப்படுகின்றது.

வெளிநாடு செல்லும் பயணிகள் கொழும்பில் தமக்கு தேவையான தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியும் என்று அரசாங்கம் அறிவித்திருந்தாலும் தற்போதைய நெருக்கடியான காலப்பகுதி மற்றும் மேல்மாகாணத்தில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் முடக்கல் நடவடிக்கைகளால் அனேகமான பொதுமக்கள் அங்கு சென்று தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதில் பல்வேறு அசௌகரியங்களை சந்திக்கின்றனர்.

எனவே இதனை கருத்தில் கொண்டு நாட்டின் தலைவர் என்ற வகையில் வடகிழக்கு பிராந்தியத்திற்கு பைசர், அஸ்ராசெனேகா (கொவிசீல்ட்), ஸ்புட்னிக் போன்ற கொரோனா தடுப்பூசிகளை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேனும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்களின் பிரதிநிதி என்றவகையில் கேட்டுக்கொள்கின்றேன் என்றுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் மேலும் 5 கோவிட் உயிரிழப்புகள்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் 5 பேர் கொவிட்-19 தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற வேலணையைச் சேர்ந்த 80 வயதுடைய பெண் ஒருவரும் நீர்வேலி யைச் சேர்ந்த 56 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

தெல்லிப்பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட கீரி மலையைச் சேர்ந்த 78 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வல்வெட்டித்துறையை சேர்ந்த 99 வயதுடைய பெண் ஒருவர் மந்திகை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்ததாக மருத்துவச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

அவரது சடலத்தில் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கோவிட்-19 தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது.

மந்திகை ஆதார மருத்துவமனை கொவிட்-19 விடுதியில் சிகிச்சை பெற்ற பருத்தித்துறையை சேர்ந்த 77 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.



# தமிழக வழியாக கனடாவிற்கு செல்ல முயன்ற இலங்கை தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுத்தமை தொடர்பாக விசாரணை



தமிழக கடல் வழியாக கனடாவிற்கு தப்பிச் செல்ல முயன்ற இலங்கை தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் தொடர்பாக தேசிய புலனாய்வு அமைப்பு சனிக்கிழமை (4) மாலை ராமநாதபுரத்தில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கை புத்தளம் பகுதியைச் சேர்ந்த 24 ஆண்கள், 2 பெண்கள், ஒரு குழந்தை என 27 பேர் படகு ஒன்றின் மூலம் கடல் வழியாக கடந்த ஜுன் மாதம் 11 ஆம் திகதி தூத்துக்குடி வந்தனர்.

கேரளா வழியாக கனடா செல்ல திட்டமிட்டு மதுரையில் தங்கியிருந்த 27 பேரையும் ராமநாதபுரம், மதுரை கியூ பிரிவு பொலிஸார் கைது செய்தனர்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர். இதற்கிடையில் இலங்கையில் இருந்து கனடா தப்பிச் செல்ல மங்களூருவில் பதுங்கியிருந்த இலங்கை தமிழர் 32 பேரை மங்களூர் கியூ பிரிவு பொலிஸார் ஜுன் மாதம் 11ஆம் திகதி மாலை கைது செய்தனர்.

இவர்களுக்கு ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே மரைக்காயர் பட்டணத்தில் சிலர் அடைக்கலம் கொடுத்து வேதாளை கடற்கரையில் இருந்து மர்மப் படகில் இலங்கைக்கு தப்பிச் செல்ல உதவியதாக விசாரணையில் தெரிய வந்தது.

அதன்படி இலங்கை தமிழர்கள் சிலரை மங்களூரு தனிப்படையினர் ஜுன் மாதம் 20ஆம் திகதி அழைத்து வந்து வேதாளை கடல் பகுதியில் நேரடி விசாரணை மேற்கொண்டனர்.

பல்வேறு கோணங்களில் தொடர்ந்து நடைபெற்று வந்த இந்த விசாரணை தேசிய புலனாய்வு அமைப்பிற்கு சமீபத்தில் மாற்றப்பட்டது.

இதை தொடர்ந்து அதிகாரி சண்முகம் தலைமையில் ஒரு குழுவினர் சனிக்கிழமை (4) ராமநாதபுரம் வந்தனர்.

மண்டபம் அருகே வேதாளை, சீனியப்பா தர்கா உள்ளிட்ட கடற்கரை பகுதிகளை பார்வையிட்டனர். இலங்கை தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததாக சந்தேகிக்கப்பட்ட ஒருவரை பிடித்து ராமநாதபுரத்தில் வைத்து விசாரனைகளை மேற்கொண்டனர்.

- மன்னார் நிருபர்

# The Pandemic has taken over all the Governing Elements and it has been a big challenge for our Government since March 2020 - *Markham Stouffville Liberal Candidate Helena Jaczek*

# கோவிட் — 19 நோய்த் தொற்றானது அரச இயந்திரத்தின் அனைத்து கூறுகளையும் ஆக்கிரமித்துக்கொள்ள, மார்ச் 2020 தொடக்கம் எமது அரசாங்கத்திற்கு ஒரு பெரும் சவாலாவே அமைந்தது

***— மார்க்கம் ஸ்ரோவில் தொகுதியின் லிபரல் வேட்பாளர் ஹெலெனா ஜேசேக்***

**(ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)**

கடந்த மார்ச் 2020 தொடக்கம் கனடாவின் அரச இயந்திரத்தின் பெரும் கூறுகளை கோவிட்-19 தொற்றானது ஆக்கிரமித்துக்கொள்ளவே, அது எமது அரசாங்கத்திற்கு பெரும் சவாலாகவே இருந்தது. அவ்வாறு இருந்தும், எமது பிரமரும் ஏனைய அமைச்சர்களும் இரவு பகலாக கடுமையாக பணியாற்றியதால் அனைத்துக் கனேடிய மக்களும் நோய்த் தொற்றின் தாக்கத்திலிருந்து மீண்டு வருவதற்கு உதவியாக இருந்தது. அந்த வகையில் ஒரு மருத்துவர் என்ற வகையில் எனக்கும் கனடாவின் பிரதான மருத்துவக் குழுவில் இணையும் படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது. மேற்படி குழு கனடாவின் சுகாதார அமைச்சருக்கும் ஏனைய மருத்துவ அதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கும் பொறுப்பில் பணியாற்றியது.

இதுபோன்று நான் எதிர்வரும் செப்டம்பர் 20ம் திகதிய தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் எனது சேவைகளை எனது தொகுதி மக்களுக்கும் ஒட்டு மொத்த கனடியர்களுக்கும் வழங்க விரும்புகின்றேன்."

இவ்வாறு தெரிவித்தார் மார்க்கம் ஸ்ரோவில் தொகுதியின் லிபரல் வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் கனடாவின் மருத்துவக் குழுவின் முன்னாள் உறுப்பினருமான திருமதி ஹெலெனா ஜேசேக்.

நேற்று முன்தினம் அவரது தேர்தல் பிரச்சார அலுவலகத்தில் அவரைப் பேட்டி கண்ட உதயன் பிரதம ஆசிரியரின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.







ஒரு மருத்துவரான திருமதி ஹெலெனா ஜேசேக் அவர்கள் முன்னர் ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினராகவும் பின்னர் கனடிய மத்திய பாராளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றுவதற்கு முன்பாக யோர்க் பிராந்திய பிரதான மருத்துவ அதிகாரியாக பணியாற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கனடா உதயன் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியின்போது மிகவும் உற்சாகமாக பதில்களை அளித்த மருத்துவர் திருமதி ஹெலெனா ஜேசேக் அவர்கள் தனது தொகுதியில் வாழும் தமிழ் மக்களோடு நெருங்கிய தொடர்புகளை வைத்து சேவையாற்றும் வழக்கத்தைக் கொண்டவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த பதவிக் காலத்தின் அனுபவங்களையும் ஆற்றிய சேவைகளைப்பற்றியும் எமது வாசகர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள் என்று 'உதயன்' சார்பில் கேட்கப்பட்டபோது அவர் எவ்வித தயக்கமும் இன்றி உரையாடினார்.

கடந்த 2020 மார்ச் மாதம் உலகை ஆக்கிரமித்துக் கொண்ட கோவிட்-19 தொற்றினால் அனைத்துக் கனடிய மக்களும் பாதிக்கப்பட்டார்கள். அச்சமுற்றார்கள். எதிர்காலம் எவ்வாறு இருக்கப்போகின்றது என்ற கேள்விகளை தங்களுக்குள் கேட்டுக்கொண்டார்கள். அப்போது எமது பிரதமர் மற்றும் சிரேஸ்ட அமைச்சர்கள் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளோடு இணைந்து இரவு பகலாக பணியாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக எமது அரசாங்கம் ஆக்கபூர்வமான திட்டங்களை அறிவித்தது. பொது மக்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் ஆகியவை பாதிக்கப்படாமல் மத்திய அரசின் உதவிகள் அவர்களைத் தேடி வந்தன.

அதற்கு அடுத்த நடவடிக்கையாக இந்த கொடிய நோயிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக தடுப்பூசிகள் மற்றும் தொற்று தொடர்பான பரிசோதனைகள் என அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் என்ற வகையில் நாம் எடுக்க வேண்டியிருந்தது. எம்மால் ஆன நடவடிக்கைகளை நாம் எடுத்தோம்' இவ்வாறு தெரிவித்தார் திருமதி ஜேசேக் அவர்கள்.

தொடர்ந்து 'உதயன்' சார்பில் மற்றுமொரு கேள்வி முன்வைக்கப்பட்டது.

(தொடர்ச்சி 16ம் பக்கம்)



# எந்தவொரு வெளிநாட்டின் தலையீட்டையும் அனுமதிக்க மாட்டோம்! இஸ்லாமிய சட்டங்களின்படி நாட்டை வழிநடத்து வோம்!

- கனடா நக்கீரன்

காக்கையை கங்கையில் குளிப்பாட்டினாலும் அதன் கருமை நிறத்தை மாற்ற முடியாது. அது போலவே இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கமான தலிபான்களும் தாங்கள் திருந்தி விட்டதாகவும் முன்னைய பிழைகளை விடமாட்டோம் என்று சொன்னாலும் அவர்களது நடவடிக்கைகள் எதிர்மாறாக இருகின்றன.

தலிபான்கள் முன்னர் ஆப்கனிஸ்தானை ஆண்ட (1996 - 2001) போது இஸ்லாமிய அடிப்படைவாதக் கோட்பாடுகளை எந்த விட்டுக் கொடுப்பும் இல்லாமல் பின்பற்றினார்கள். இஸ்லாமிய ஷாரியா சட்டதிட்டங்களை நூறு விழுக்காடு நடைமுறைப்படுத்தினார்கள்.

அப்போது குற்றவாளிகள் விளையாட்டு மைதானத்தில் நிறுத்திவைக்கப்பட்டு கற்களால் எறிந்து கொல்லப்பட்டார்கள். பெண்கள் வேலை செய்வது முற்றாக தடை செய்யப்பட்டது. பெண்கள் பள்ளிக்கூடங்களில் படிப்பது தடைசெய்யப்பட்டது. தொலைக்காட்சி, காணொளி மற்றும் இசை, நடனம் தடை செய்யப்பட்டன. ஒரு நாளில் அய்ந்து தரம் தொழுகை செய்யாத ஆண்கள் சவுக்கால் அடிக்கப்பட்டார்கள். அதேபோல் தாடி வைத்திராத ஆண்களுக்கு சவுக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

பயங்கரவாத அமைப்புக்களான அல் கொய்தா மற்றும் ஐஎஸ்ஐஎஸ் தடை செய்யப்படும் என்று தலிபான்கள் அறிவித்தார்கள். ஆனால் தலிபான்கள் அல் கொய்தா மற்றும் ஐஎஸ்ஐஎஸ் அமைப்புகளோடான தொடர்பை இன்னமும் துண்டிக்கவில்லை.

தலிபான்களின் மீள ஆட்சியைப் பிடித்திருப்பது உலகெங்கிலும் உள்ள தீவிரவாதிகளை ஊக்குவிக்கும் என மேற்குலக நாடுகள் அஞ்சுகின்றன. அண்மையில் மத்திய கிழக்கில் ஐஎஸ்ஐஎஸ் மின்னல் வேகத்தில் இராக், சிரியா நாடுகளைத் தாக்கி இஸ்லாமிய அரசை நிறுவியது நினைவிருக்கலாம். அப்படியான பயங்கரவாத அமைப்புக்களுக்கு அமெரிக்க வல்லரசைத் தோற்கடித்த தலிபான்கள் புதிய உத்வேகத்தையும் உந்துசக்தியையும் கொடுக்க வாய்ப்புண்டு.

தலிபான் இயக்கத்தின் பேச்சாளர் தங்களது இயக்கம் ஜம்மு கஷ்மீர் மக்களுக்கு உதவப் போவதாக அறிவித்துள்ளார். அவர்கள் தங்கள் சகோதரர்கள் எனச் சொந்தம் கொண்டாடியுள்ளார்கள். இதன் காரணமாக இந்தியாவிற்குத் தீவிரவாத இயக்கங்களால் அச்சுறுத்தல் அதிகரித்து வருவதாக உளவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளது. குறிப்பாக ஜெய்ஷ்-இ-முகமது பயங்கரவாத இயக்கத்தின் மசூத் அசார், தலிபான் இணை நிறுவனர் முல்லா அப்துல் கனி பராதர் உள்ளிட்ட தலிபான் இயக்கத் தலைவர்களைச் சந்தித்து, ஜம்மு காஷ்மீரில் தங்களது நடவடிக்கைகளுக்கு உதவி கோரியதாகவும் தகவல் வெளியாகியிருக்கிறது.



மேலும், இந்திய வெளியுறவு அதிகாரி இதுகுறித்துக் கூறுகையில், "லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-முகமது, ஹிஸ்புல் முஜாஹிதீன் மற்றும் காஷ்மீர் பள்ளத்தாக்கில் உள்ள மற்ற பயங்கரவாதிகளின் இயக்கத்தை உளவு அமைப்புகள் இடைமறித்துள்ளன. கையெறிக் குண்டுத் தாக்குதல், ஸ்ரீநகரின் பொது இடங்களில் தாக்குதல் நடத்துவது உட்பட தீவிரவாதிகளின் பல்வேறு வகையான தாக்குதல் திட்டம் குறித்து பாதுகாப்பு அமைப்புகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தலிபான்களுக்கு எதிரான போரில் இந்தியா அமெரிக்கா போன்று ஆப்கனிஸ்தான் படைகளுக்கு இராணுவப் பயிற்சி அளித்தது குறிப்பிடத்தக்கது. அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளைவிட தலிபான்களால் அண்டை நாடான இந்தியாவுக்கே பாதுகாப்பு அச்சுறுத்தல் அதிகமாக இருக்கும்.

இரண்டு நாட்களுக்கு முன்னர் உருசிய கூட்டமைப்பின் பாதுகாப்பு சபையின் செயலாளர் நிகோலாய் பத்ருஷேவ் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலால் அவர்களைச் சந்திக்க இரண்டு நாள் பயணமாக செவ்வாய்க்கிழமை புதுடெல்லி வந்தார்.

ஆப்கானிஸ்தானில் இருந்து வரும் பயங்கரவாதக் குழுக்களின் அதிகரிப்பு, போதைப்பொருள் கடத்தல் அதிகரிப்பு, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் அகதிகளின் வருகை போன்ற பொதுவான சவால்களை இந்தியாவும் உருசியாவும் எதிர்கொள்கின்றன.

மேலும், அதி நவீன அமெரிக்க இராணுவ உபகரணங்கள் இப்போது தலிபான் கைகளில் உள்ளது, எனவே இரு நாடுகளும் இந்தச் சிக்கல் பற்றி விவாதித்திருக்கின்றன.

இந்த ஆலோசனை இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் உருசிய கூட்டமைப்பின் தலைவர் விளாடிமிர் புட்டினுக்கும் இடையே ஓகஸ்ட் 24 அன்று நடைபெற்ற தொலைபேசி உரையாடலின் தொடர்ச்சியாகும்.

மோடிக்கும் புடினுக்கும் இடையிலான உரையாடலைத் தொடர்ந்து, 'பயங்கரவாத சித்தாந்தம்' மற்றும் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளிவரும் போதைப்பொருள் அச்சுறுத்தலை எதிர்கொள்ள ஒத்துழைப்பை மேம்படுத்த இரு தலைவர்களும் விருப்பம் தெரிவித்ததாக உருசிய கூறியது. இந்த விடயத்தில் ஆலோசனைகளுக்கு ஒரு நிரந்தர இருதரப்பு தொடர்பை நிறுவவும் அவர்கள் ஒப்புக்கொண்டனர்.



தலிபான்கள் தாங்கள் முன்னர் விட்ட பிழைகளை மீண்டும் செய்யப் போவதில்லை என்று சொன்னாலும் அவர்கள் நிறுவியுள்ள இடைக்கால அமைச்சரையில் முன்னைய கடும்போக்கு இஸ்லாமிய அடிப்படைவாதிகள் இடம்பெற்றிருப்பது அதனைப் பொய்யாக்கியுள்ளது.

முல்லா மொகமது ஹசன் அக்குந்த் - இடைக்காலப் பிரதமர்

முல்லா அப்துல் சானி பறாடார் - இடைக்கால துணைப் பிரதமர்

முல்லா அகமத்துல்லா நஜீப் - இடைக்கால துணை இயக்குநர் பாதுகாப்பு செயலகம்

சிராசுடின் ஹக்கானி - இடைக்கால உட்துறை அமைச்சர்

காலில் உர் ரெகமான் ஹக்கானி - இடைக்கால அகதிகள் அமைச்சர்

முல்லா அப்துல் ஹக் வாசிக் - இடைக்காலத் தலைவர் என்டிஎஸ்

முல்லா ஹேடயத்துல்லா பட்றி - இடைக்கால நிதி அமைச்சர்

முல்லா மொகமது வகூப் - இடைக்கால பாதுகாப்பு அமைச்சர்

மவுலாவி ராஜ் யாவாட் - இடைக்கால துணை புலனாய்வு அதிகாரி

ஷேக் மவுலாவி நூர்துல்லா முனீர் - இடைக்கால கல்வி அமைச்சர்

இந்த அமைச்சர் பட்டியலில் இடம்பெற்ற பலர் பஷ்தூன் (பட்டாணியர்) இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆப்கானிஸ்தான் மக்கள் தொகையில் பஷ்தூன் மக்களே பெரும்பான்மையாக (42 விழுக்காடு) இருக்கிறார்கள். அவர்களுக்கு அடுத்து டாஜியர்கள் 27 விழுக்காடு, ஹஜாராஸ் 8 விழுக்காடு, உஸ்பெக்ஸ் 9 விழுக்காடு, ஏமக்ஸ் 4 விழுக்காடு, டர்க்மென்ட் 3 விழுக்காடு மற்றும் பலுசி 2 விழுக்காடு. மீதமுள்ள 13 விழுக்காடு சிறுபான்மையினரானவர். மதத்தைப் பொறுத்தளவில் 99 விழுக்காடு மக்கள் சன்னி முஸ்லிம்கள் ஆவர்.

இடைக்காலப் பிரமராக நியமிக்கப்பட்டுள்ள முல்லா மொகமது ஹசன் அகுந்த் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் பயங்கரவாத கருப்புப் பட்டியலில் இடம் பெற்றுள்ளார். தலிபான் அமைப்பை முல்லா ஓமருடன் சேர்ந்து உருவாக்கியவர்களில் முல்லா மொகமது ஹசன் அகுந்த் ஒருவர். தலிபான்களின் ஆட்சியில் 2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற பார்மியன் புத்தர் சிலை தகர்ப்பின் சூத்திரதாரியும் இவரே. முல்லா மொகமது ஹசன் அகுந்த் போலவே ஏனைய பல தலிபான் தலைவர்களும் பயங்கரவாதக் கருப்புப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

இடைக்கால உட்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள சிராசுடின் ஹக்கானி குழுவை அமெரிக்கா வெளிநாட்டு பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துள்ளது. இந்தக் குழு அல் கொய்தாவோடு நெருங்கிய தொடர்பில் உள்ளது.

இடைக்காலப் பிரதமராக பதவியேற்றபின் பேசிய முல்லா மொகமது ஹசன் அகுந்த் "ஆப்கானிஸ்தான் வரலாற்றில் இந்த வரலாற்றுத் தருணத்திற்காக நாங்கள் பணம் மற்றும் உயிர் இரண்டிலும் பெரும் இழப்பைச் சந்தித்தோம். ஆப்கானிஸ்தானில் மக்கள் மீது இரத்தம் சிந்துதல், கொலை செய்தல் மற்றும் அவமதிக்கும் நிலை முடிவடைந்தது, இதற்காக நாங்கள் மிகவும் விலை செலுத்தியுள்ளோம்" என்றார்.

2001 ஆம் ஆண்டு படையெடுப்பைத் தொடர்ந்து அமெரிக்கா மற்றும் நிருவாகத்துடன் இணைந்து பணியாற்றிய எவருக்கும் பொதுமன்னிப்பு வழங்குவதாக தாலிபானின் வாக்குறுதியையும் அகுந்த் மீண்டும் வலியுறுத்தினார்.

"ஒருவர் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட்டார் என்பதை யாராலும் எண்பிக்க முடியாது. மேலும் இதுபோன்ற பதட்டமான சூழ்நிலைகளில், நீங்கள் விரும்பியதைச் செய்வது எளிது. ஆனால் எமது இயக்கம் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்கும் அமைப்பு. அது அதன் துப்பாக்கிதாரிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. மேலும், ஒருவருடைய முந்தைய நடவடிக்கைகள் காரணமாக நாங்கள் யாருக்கும் தீங்கு செய்யமாட்டோம். இஸ்லாமிய தேசத்திற்கு, குறிப்பாக ஆப்கானிஸ்தான் மக்களுக்கு, எல்லா நன்மைகளையும் கிடைக்க வேண்டும் என்று விரும்புகிறோம். மேலும் நாங்கள் இஸ்லாமிய அமைப்பை நிறுவ முயல்கிறோம். அதில் எல்லோரும் பங்குகொள்ள வேண்டும். எங்கள் நாடு இனிமேல் இஸ்லாமிக் எமிரேட் ஆப் ஆப்கானிஸ்தான் **(Islamic Emirate of Afghanistan)** என்று அழைக்கப்படும். ஆப்கானிஸ்தான் விவகாரங்களில் எந்தவொரு வெளிநாட்டின் தலையீட்டையும் அனுமதிக்க மாட்டோம். இஸ்லாமிய சட்டங்களின்படி நாட்டை வழிநடத்து வோம்" என்றார் அவர்.

ஆனால் அவரது பேச்சுக்கும் அவர் கொடுக்கும் உறுதிமொழிகளுக்கும் சம்மந்தமில்லாத நிகழ்ச்சிகள் ஆப்கானிஸ்தானில் இடம்பெறுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் சொல்கின்றன. பெண்கள் விவகாரத்துக்கான அமைசர் பதவி நீக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் செய்வதென்றால் முன் அனுமதிபெற வேண்டும் எனத் தலிபான்கள் கட்டுப்பாடு விதித்துள்ளார்கள். பதாததைகளில் எழுதும் வாசகங்களுக்கும் முன்கூட்டியே அனுமதி பெறவேண்டும் எனக் கட்டளை பிறப்பித்துள்ளார்கள்.

பெண்ளுக்கு அரசாங்கத்தில் இடம் வழங்க வேண்டும் என்று கோரி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில், பெண்களை தலிபான்கள் சவுக்கால் அடித்தனர் எனக் கூறப்படுகின்றது. கடந்த புதன்கிழமை காபூல் நகரில் ஒரு சாலையில் அணிவகுத்துச் சென்ற பெண்களைத் தடுத்து நிறுத்திய தலிபான்கள், சவுக்கால் அடித்தும் மின்சாரத்தை உமிழும் தடிகளால் தாக்கினர் எனவும் போராட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் கூறுகின்றனர். தலிபான்கள் தங்கள் இடைக்கால அமைச்சரவையை அறிவித்த அடுத்த நாள் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. ஒரு வாரத்துக்குள்ளாக நடைபெற்ற இரண்டாவது போராட்டம் இதுவாகும்.

தலிபான்கள் தங்களது நாடு இஸ்லாமிய நாடாக இருக்கும் என அறிவித்துள்ளார்கள். இஸ்லாமிய கோட்பாடுகள், சட்டங்கள் பின்பற்றப்படும் நாட்டின் ஆட்சி தலிபான்களின் கையில் மட்டும் இருக்கும் எனச் சொல்கிறார்கள்.

இப்படியான ஒரு கட்சி ஆதிக்கம் செலுத்தும் மதவாத சர்வாதிகார நாட்டை பல உலக நாடுகள் அங்கீகரிக்க மாட்டா என்பதைச் சொல்லத் தேவையில்லை. குறிப்பாக அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், இந்தியா போன்ற நாடுகள் அங்கீகரிக்க மாட்டாது என்பதே இன்றைய யதார்த்தமாகும்.

ஆனால் சீனா, உருசியா, பாகிஸ்தான், இரான் போன்ற நாடுகள் தலிபான் அரசை ஆதரிக்கின்றன. சீனாவைப் பொறுத்தளவில் வழக்கம் போல் அது குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கப் பார்க்கிறது.

ஆப்கானிஸ்தானுக்கு 3.10 கோடி டொலர் மதிப்பிலான உதவிகள் வழங்கப்படும் என சீனா அரசு அறிவித்துள்ளது, அதோடு நில்லாமல் தலிபான்கள் அரசுக்கு புகழாரம் சூட்டியுள்ளது.

சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யி வெளியிட்ட அறிவிப்பில், "ஆப்கானிஸ்தானுக்கு முதல்கட்டமாக 30 இலட்சம் தடுப்பூசிகளை சீனா வழங்கும். அமெரிக்க நிருவாகத்தில் ஆப்கானிஸ்தான் இருந்துள்ளது. அமெரிக்கா அங்கிருந்து சென்றாலும், தனது பொறுப்புகளை உணர்ந்து ஆப்கன் மக்களுக்கு உதவ வேண்டும், வளர்ச்சிக்கு துணையாக இருக்க வேண்டும். ஆப்கானிஸ்தானின் இறையாண்மை, சுதந்திரத்தை மதிக்க வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

அடிப்படை இஸ்லாமிய கோட்பாடுகள், சட்ட திட்டங்கள் கீழ் ஆளப்படும் நாட்டில் சனநாயகம், பன்முகத்தன்மை, மனிதவுரிமைகள், சட்டத்தின் ஆட்சி போன்ற விழுமியங்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்பில்லை. தலிபான்கள் 1996-2001 மட்டும் ஆப்கனிஸ்தானை ஆட்சி செய்தபோது ஒரு மதவாத - சர்வாதிகார ஆட்சியே இடம்பெற்றது.

இதன் காரணமாகவே ஆப்கானிஸ்தானிய மக்கள் நாட்டை விட்டு வெளியேற முண்டியடித்தார்கள். ஆனால் மிகக் குறைந்த அளவிலான மக்களையே அமெரிக்கா தனது விமானங்கள் மூலம் வெளியேற உதவிசெய்துள்ளது. அண்டை நாடான பாகிஸ்தானுக்குள் நுழைய பல்லாயிரம் ஆப்கனிஸ்தார்கள் கால் நடையாக நடந்து போனார்கள். ஆனால் பாகிஸ்தான் அதன் எல்லைகளை மூடிவிட்டது.

உலகத்தில் உள்ள பாவப்பட்ட மக்களில் ஆப்கானிஸ்தான் மக்களும் அடக்கம். கடந்த பல சகாப்தங்களுக்கு அந்த நாடும் மக்களும் அமைதி, நிம்மதி இல்லாத, துன்ப துயரம் தோய்ந்த வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள். விடியல் எப்போது?

உலக செய்திகள்
World News

# அதென்ஸ் அமெரிக்க தூரதகத்தின் முன்பாக நூற்றுக் கணக்கான ஆப்கானியர்கள், கூடி தலிபான்களுக்கு எதிராக கூக்குரல் எழுப்பினர்




கிரேக்க தலைநகரான அதென்ஸ் அமெரிக்க தூரதகத்தின் முன்பாக நூற்றுக் கணக்கான ஆப்கானியர்கள், கூடி நின்று ஆப்கானிஸ்த்தானில் ஆட்சி அமைத்துள்ள தலிபான்களுக்கு எதிராக கூக்குரல் எழுப்பினர். "யுத்தமும் வன்முறையும் எங்களுக்கு வேண்டாம். சடலங்களைப் பார்த்து சலித்துப் போய் விட்டோம். இந்த யுத்தம் முடிவுக்கு வர வேண்டும். உலகத்திடமிருந்து சமாதானத்தை எதிர்பார்க்கிறோம்" என்று ஆர்ப்பாட்டக்காரர்களின் ஒருவரான ஒமி நலியாம் தெரிவித்தார். தலிபான்கள் ஆப்கானிஸ்தானை கைப்பற்றியதற்கு எதிர்ப்பு தெரிவித்து கோஷமெழுப்பி அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். "எம் நாட்டின் மீது கை வைக்காதே என்றும் ஆப்கான் இரத்தம் சிந்துகிறது" என்றும் இவர்கள் கோ'மெழுப்பினர்.

அங்கு 17 வயதான பார்வான் அமிரி, ஆப்கானிஸ்தானில் வாய்மூடிக் கிடக்கும் எமது சகோதரர்களுக்காக குரல் எழுப்பவே தான் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதாகத் கூறினார். அதென்சுக்கு அருகே ஒரு அகதி முகாமில் தங்கியிருக்கும் இவர், தனது பெற்றோரும் சகோதரியும் ஆப்கானிஸ்தானிலேயே வசிப்பதாக கூறுவதோடு எமக்கென ஒரு தாய்நாடு இல்லையே எனவும் வருத்தப்பட்டார். இதே சமயம் ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 உறுப்பு நாடுகளின் உள்நாட்டு அலுவல்களுக்கான அமைச்சர்கள் எதிர்வரும் செவ்வாயன்று ஒன்றுகூடி ஆப்கானின் புதிய நிலவரங்கள் குறித்து ஆராயவுள்ளதாகவும் அதன் எதிரொலியாக ஐரோப்பிய நாடுகள் எதிர்கொள்ளவுள்ள பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடவிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த வேளையில், துருக்கி வழியாக கிரேக்கத்துக்குள் ஆப்கானிய அகதிகள் வரக்கூடும் என்பதால் துருக்கி எல்லையோரமாக கிரேக்கம் 40 கி.மீ. நீளமான வேலியை அமைத்துள்ளது. ஐரோப்பாவுக்குள் அகதிகள் நுழைவதை தடுக்கும் வகையில் கண்காணிப்பு வலயமும் உருவாக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளால் எப்போதும் வஞ்சிக்கப்பட்டு வந்த ஆப்கானிஸ்த்தான்

## அமெரிக்கப் படைகள் கால் பதித்ததில் இருந்து சிறுவர்களை பாலியல் அடிமைகளாக பயன்படுத்திய அமெரிக்க இராணுவம்



அமெரிக்க ஜனாதிபதிகளால் எப்போதும் வஞ்சிக்கப்பட்டே வந்துள்ளத ஆப்கானிஸ்த்தான் என்பதற்கு போதுமான ஆதாரங்கள் உள்ளன என்பதை சர்வதேச ஊடகவியலாளர்கள் பதிவு செய்து வருகின்றனர். இவ்வாறு அமெரிக்காவினாலும் ஏனைய மேற்குலக நாடுகளினாலும் வஞ்சிக்கப்பட்டு வந்த ஆப்கானிஸ்த்தான் தொடர்பாக அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி புஷ் தனது 2002 தேசிய உரையில், நவீன கால "மகளிர் விடுதலையின்" மிகப் பெரிய வெற்றி ஆப்கான் போர்" என்று கூறினார். மேலும் "ஆப்கானிஸ்தானில் தாய்மார்கள் மற்றும் பெண்கள் தங்கள் சொந்த வீடுகளில் அடிமைப்படுத்தப்பட்டனர். ஆனால் இன்று பெண்கள் சுதந்திரமாக உள்ளனர்" என புஷ் கூறினார். ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஆப்கானிஸ்தானுக்குச் சென்ற நியூயோர்க் டைம்ஸ் பத்தி எழுத்தாளர் நிக்கோலஸ் கிறிஸ்டோப், 2004 இல் அங்குள்ள களநிலைவரத்தைப் பற்றி விபரிக்கும் போது "பல ஆப்கானிஸ்தான் பெண்கள் இன்னும் தங்கள் வீடுகளில் சிறைப்பிடிக்கப்பட்டு இருக்கிறார்கள். கொள்ளை மற்றும் பாலியல் வல்லுறவு அதிகரித்துள்ளது. குறிப்பாக பெண்கள் பேரழிவை எதிர்நோக்கியுள்ளனர். பட்டப்பகலில் கூட வீதிகள் பாதுகாப்பாக இல்லை. பெண்கள் பள்ளிக்கூடங்களுக்கு செல்லவோ அல்லது தாய்மார்கள் சுகாதார மையங்களுக்கு செல்லவோ துணிவதில்லை. இது ஆப்கானிஸ்தானில் அமெரிக்க-நேட்டோ கட்டுப்பாட்டில் உள்ள பகுதியின் நிலையாகும்" என்றார்.



போவர்ட்டின் கூற்றுப்படி, ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள் கால் பதித்ததில் இருந்து சிறுவர்களை பாலியல் அடிமைகளாக பயன்படுத்தும் குற்றச் செயல்களை மறைப்பதற்காக அமெரிக்க இராணுவம் ஆப்கானிஸ்தான் அரசாங்க செயற்பாடுகளுக்கு பெருந்தொகையான பணத்தை அள்ளி வீசினார்கள். 2015 ஆம் ஆண்டு நியூயோர்க் டைம்ஸ் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக தண்டிக்கப்பட்ட அமெரிக்க இராணுவ வீரர்களை அம்பலப்படுத்தும் வரை பென்டகன் இந்த துஷ்பிரயோகத்தை கண்டுகொள்ளவில்லை. 2017 பென்டகன் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் அறிக்கையின்படி ஆப்கானிஸ்தான் ஒரு இறையாண்மை கொண்ட நாடு என்றும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் குறித்து ஏதும் செய்ய முடியாது என்றும் இது கட்டளை பிறப்பிக்கும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த சமாச்சாரம் அல்ல என்றும் இவை கண்டும் காணாதது போல விட்டுவிட வேண்டிய சமாச்சாரம் எனவும் சில அமெரிக்க துருப்புக்களுக்கு கூறப்பட்டுள்ளது.

இதேவேளை அமெரிக்க இராணுவமும் அதன் முக்கிய உளவு நிறுவனமுமான சி.ஐ.ஏயும் ஆப்கானியர்களை சித்திரவதை செய்தனர். இந்த கொடூரங்கள் குறித்து டிசம்பர் 2002 க்கு முன்பே தெரிவிக்கப்பட்டும் கூட அதனை ஜனாதிபதி புஷ் தொடர்ந்து மறுத்து வந்தார். 2004 ஆம் ஆண்டில் வெளிவந்த லொஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ் செய்தியின்படி அமெரிக்க அரசாங்கத்தால் தடுத்து வைக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் வீரர்கள் மீது வதைகளை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

கடுமையான பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு தலிபான்களுக்கு இப்போது உள்ளது. அந்நாட்டையே முடக்கி விடக் கூடிய பயங்கரமான பாதுகாப்பு மற்றும் படுமோசமான பொருளாதார பிரச்சினைகளுக்கு தலிபான்கள் முகம் கொடுத்து வருகின்றார்கள்.

ஆப்கானிஸ்தான் குறித்து சர்வதேச ஊடகங்கள் உண்மையை மறைப்பதற்கே பாடுபடுகின்றன. ஜேம்ஸ் போவர்ட் பல புத்தகங்களுக்கு சொந்தமான ஒரு எழுத்தாளர். அவர் யூ.எஸ்.ஏ டுடே, தி நியூயோர்க் டைம்ஸ், தி வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் மற்றும் வோஷிங்டன் போஸ்ட் ஆகியவற்றுக்கு வழக்கமாக எழுத்து மூலம் பங்களிப்பு செய்யும் பத்தி எழுத்தாளர். 2002 ஜனவரி 22 அன்று ஜோர்ஜ் புஷ் தனது தேசிய உரையில் பின்வருமாறு கூறியதாக போவர்ட் மேற்கோள் காட்டியுள்ளார். அதாவது புஷ் அமெரிக்கர்களை ஒரு தவறான அணு அச்சுறுத்தலால் மிரட்டியதாக கூறினார்.

"ஆப்கானிஸ்தானின் கண்டுபிடிப்புகள் கடுமையான பயத்தை எமக்கு உறுதிப்படுத்துகின்றன. அல்காயிதா பயன்படுத்திய குகைகளில் அமெரிக்க அணுமின் நிலையங்கள் மற்றும் பொது நீர் வசதிகளின் வரைபடங்களைக் கண்டோம்" என ஜோர்ஜ் புஷ் கூறியிருந்தார். மூத்த அமெரிக்க புலனாய்வு மற்றும் எப்.பி.ஐ அதிகாரிகள் ஊடகங்களுக்கு சுருக்கமான பின்னணி தகவல்களை வழங்கியதாக போவர்ட் கூறுகிறார்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஜனாதிபதியின் அறிக்கை தவறானது என்றும் ஆப்கானிஸ்தானின் அணுமின் நிலையங்களின் வரைபடங்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் புஷ் நிர்வாக அதிகாரிகள் அறிவித்தனர். கேபிடல் ஹில்லில் நடந்த விசாரணையின் போது, அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையாளர் எட்வர்ட் மெக் காபிங்கின் இது பொய்த் தகவல் என்பதற்காக முன்வைத்த ஆதாரங்களை போவார்ட் மேற்கோள் காட்டியுள்ளார்.

சதாம் ஹீஸைன் பிரிட்டனை 45 நிமிடங்களில் தாக்க முடியும் என்ற டோனி பிளேயர் கூறியிருந்தார். அமெரிக்கா மற்றும் பிரிட்டனுக்கு ஐ.நா. சபையின் செயற்குழு உயரதிகாரிகள் ஆதரவு உள்ளது.

அமெரிக்கா மற்றும் நேட்டோ கூட்டுப் படைகள் பிற நாடுகளின் மீது படையெடுப்பதை நிறுத்தினால் அல்காயிதா மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுதக் குழுக்களை பூண்டோடு ஒழித்துக் கட்டலாம். ஆனால் அதுதான் நடக்காது. காரணம் கோடீஸ்வரர்களுக்கு என்றும் எப்பொழுதும் அற்புதமான முறையில் சுரந்து கொண்டே இருக்கும் அபரிமிதமான செல்வங்களை தரும் ஆயுதத் தொழிற்சாலைகளும், உயிரைப் பணயம் வைத்துப் போராடும் மில்லியன் கணக்கான படை வீரர்களுக்கு தொழில் வாய்ப்பை தந்து கொண்டிருக்கும் போரும் ஒரு போதும் முடிவு பெறுவதில்லை.






இந்தியா செய்திகள்
India News

# மதுரை ஆதீனத்தின் 293 வது பீடாதிபதி மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் அவர்களின் பல்வேறு சிறப்புக்கள்



மதுரை ஆதீனத்தின் 293 வது பீடாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள புதிய மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டவர். அவர் தமிழ்நாட்டின் திருநெல்வேலியை பூர்வீகமாகக் கொண்டவர். அங்கு காந்திமதிநாதன் - ஜானகி அம்மாள் தம்பதிகளுக்கு 1954 மார்ச் 25 இல் அவதார புதல்வராக பிறந்த இவருக்கு பெற்றோர் பகவதி லக்சுமணன் என்று நாமம் சூட்டினர். பின்னர் அவர் தனது ஆன்மிக வழியில் சிரத்தையுடன் ஈடுபட்டதால். தனது 21 ஆவது வயதில் குன்றக்குடி ஆதீனத்தில் ஆறுமுகத்தம்பிரானாகவும், 1976 முதல் 1980 வரை தருமபுர ஆதீனத்தில் நெல்லையப்பத் தம்பிரானாகவும், 1980 முதல் 2019 வரை திருவாடு துறை ஆதீனத்தில் சுந்தரமூர்த்தி தம்பிரானாகவும் 39 ஆண்டுகள் தெய்வீக திருப்பணிகளில் ஈடுபட்டடு ஆன்மீக வேத அறிவு-களைப் பெற்றவர்அவர். மதுரை ஆதீனத்தில் 6-6-2019 இல் இளைய ஆதீனமாக அறிவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.




தற்போது மதுரை ஆதீனத்தின் 292 வது பீடாதிபதியாக 46 ஆண்டுகள் பொறுப்பு வகித்த அருணகிரிநாதர் சுவாமிகள் கடந்த ஓகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி முக்தியடைந்ததைத் தொடர்ந்து, 293 ஆவது ஆதீன-மாக மதுரை ஆதீனமாக ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் பொறுப்பேற்று பீடத்தில் அமரும் பீடாரோகன நிகழ்வு கடந்த ஓகஸ்ட் 23 ஆம் தி-கதி தமிழகத்தின் தொன்மையான மதுரை ஆதீன மடத்தில் நடைபெற்றது. தரும-புர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர் பரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையில் இப்புனித நிகழ்வு நடந்தேறியது.

இதனைத் தொடர்ந்து மதுரை மீனாட்சியம்மன் கோயில் மடத்தின் உஷாகால கட்டளைகளை நிறைவேற்றுதல், ஆதீன திருமடத்தில் நித்ய பூஜைகள், மகேஸ்வர பூஜைகள் மற்றும் தினசரி அன்னதானம் வழங்குதல், ஆதீனத்திற்கு சொந்தமான நான்கு கோயில்களில் தினசரி நித்ய பூஜைகள் நடத்துதல் உள்ளிட்ட ஆறு உத்தரவுகள் அடங்கிய கோவையில் புதிய மதுரை ஆதீனம் கையொப்பமிட்டார்.

இந்நிகழ்வில் காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம், கோவை பேரூர் ஆதீனம், சிரவை ஆதீனம், கௌமார மடம் உள்ளிட்ட பல்வேறு மடாதிபதிகள், ஆதீனங்கள், மதுரை மீனாட்சியம்மன் கோயில் நிர்வாகிகள், மடத்தின் தொண்டர்கள் கலந்து கொண்டனர். மீனாட்சியம்மன் கோயிலில் சிறப்பு வழிபாடுகளும் குருமுகூர்த்த வழிபாடுகளும் நடந்தேறின. அதனைத் தொடர்ந்து பட்டினப் பிரவேச நிகழ்வும் கொலுக்காட்சியும் நடைபெற்று சுவாமிகள் மதுரை சித்திர வீதியில் எழுந்தருளினார்.

அதற்கு முன்னதாக மதுரை முனிச்சாலையில் உள்ள மறைந்த ஆதீ-னம் அருணகிரிநாதர் குருமுகுத்தம் செய்யப்பட்ட புனித இடத்தில் குருபூஜையும் அபிஷேக ஆராதனைகளும் சிறப்புப் பூஜைகளும் சம்பிரதாய பூர்வமாக நடைபெற்றன.

# டிவியில் சட்டசபை நிகழ்வுக்களை பார்த்தால் நல்ல சினிமா படம் பார்ப்பது போல் உள்ளதென்கிறார் விஜய் சேதுபதி



தி.மு.க ஆட்சிக்கு வந்தவுடன் "அம்மா உணவகத்தை" சிலர் அடிச்சு நொறுக்குனப்போ கட்சிக்காரங்கனும் பார்க்காம அவங்களை கண்டிச்சு, தூக்கி உள்ளே போட்டது.

- சட்டசபையில் எதிர்கட்சிக்காரர்களையும் பேச விடறது அவங்க கேட்கிறதுக்கு இவங்க பதில் சொல்றது. இவங்க கேட்கிறதுக்கு அவங்க பதில் சொல்றது.
- ஸ்ககூல் பேக்-ல ஜெ. எடப்பாடி படம் இருந்துட்டு போகட்டும் அவங்க படத்தை மறைக்கிறதுக்கு ஆகற 13 கோடி ரூபாயை மாணவர்கள் நலனுக்கு செலவுபண்ணலாமேனு அன்பிலுக்கு முதல்வர் பதில் சொன்னது.
- கேட்கப்படுகிற கேள்விகளுக்கு அமைச்சர் பி.டி.ஆர் எழுந்து டக்..டக்..னு பதில் சொல்றது.
- தன்னைப் புகழ்ந்து பேசிய எம்.எல்.ஏ-க்களை கண்டித்து நேரத்தை வீணாக்க வேண்டாம்னு முதல்வர் கண்டித்து சொன்னது எல்லாமே ரொம்ப நல்லாயிருக்கு.
- தயவு செய்து டி.வி-யில் போடற சட்டசபை நிகழ்ச்சிகளை எல்லோரும் பாருங்க. நல்ல படம்பார்க்கிற மாதிரி அவ்வளவு நல்லாயிருக்கு.

- நடிகர் விஜய சேதுபதி

# லதா ரஜினிகாந்த் பள்ளியில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக ஊதியம் வழங்காததைக் கண்டித்து ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்




நடிகர் ரஜினிகாந்தின் மனைவி லதா ரஜினிகாந்த் சென்னை வேளச்சேரியில் ஆஸ்ரம் என்ற பெயரில் பள்ளி ஒன்றை நடத்தி வருகின்றார். இதில் 150-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக ஊதியம் வழங்கவில்லை என்று புகார் எழுந்துள்ளது.

பள்ளி நிர்வாகத்தின் செயல்பாட்டைக் கண்டித்து ஊழியர்கள் இன்று பள்ளி வளாகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது செய்தியாளர்களிடம் பேசிய ஊழியர்கள், கொரோனோ காலகட்டத்தில் தங்களுக்கான முறையான ஊதியத்தை வழங்காமல் பள்ளி நிர்வாகம் தங்களை வஞ்சிப்பதாக குற்றம் சாட்டினர். ஊதியம் குறித்து கேட்டால் தொடர்ந்து இழுதடிப்பதாக குற்றம்சாட்டிய பள்ளி ஊழியர்கள், தாங்கள் படும் சிரமத்தை கருத்தில் கொண்டு ரஜினிகாந்த் தன்னுடைய சொந்த பணத்திலிருந்து தங்களுக்கான ஊதியத்தை வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஊழியர்களுக்கு நிர்வாகம் வழங்க வேண்டிய பங்களிப்பு தொகையினையும் இதுவரை நிர்வாகம் செலுத்தாமல் இருப்பதாகவும் ஊழியர்கள் தெரிவித்தனர்.

# கவிஞர் புலமைப்பித்தன் சென்னையில் காலமானார்



உடல்நலக் குறைவால் சென்னை தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தபாடலாசிரியர் புலமைப்பித்தனை சசிகலா நேரில் சென்று சந்தித்து நலம் விசாரித்திருந்தார். அத்துடன்இன்றைய தினம் அவரது மறைவுக்கும் சசிகலா இரங்கல் தெரிவித்துள்ளார். பிரபல திரைப்பட பாடலாசிரியராக இருந்தவர் புலமைப்பித்தன். இவர் சிறந்த பாடலாசிரியருக்கான தமிழ்நாடு அரசின் விருதை 4 முறைபெற்றுள்ளார்.

"முன்னாள் முதல்வர்கள் எம்ஜிஆர், ஜெயலலிதாவுக்கு பல்வேறு பாடல்களை எழுதியவர் புலமைபித்தன். இவர்கோவை மாவட்டம் பள்ளப்பாளையத்தை சேர்ந்தவர். முதன்முதலில் எம்.எஸ்.விஸ்வநாதன் இசையில்குடியிருந்த கோயில் திரைப்படத்திற்கு எம்ஜிஆருக்காக "நான் யார் நான் யார் நீ யார்" என்ற பாடலை எழுதிவரவேற்பை பெற்றார். இந்த நிலையில் இன்றைய தினம் புலமைப்பித்தன் சிகிச்சை பலனின்றி மறைந்தார். அவரது மறைவை அடுத்து சசிகலா தனது இரங்கலை தெரிவித்துள்ளார். அவர் தனது இரங்கலில் எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோரின் பாடல்களை எழுதியவர் புலமைப்பித்தன். திராவிட கருத்துகளை தனது பாடல்களின்மூலம் பட்டிதொட்டியெல்லாம் ஒலிக்க செய்தவர் என சசிகலா இரங்கலில் தெரிவித்துள்ளார்.

எம்ஜிஆருக்கு நெருக்கமாக இருந்து கொண்டே கருணாநிதியின் திரைப்படங்களுக்கும் பாடல் எழுதியதுணிச்சல் பெற்றவர் புலமைப்பித்தன். அணி இலக்கணத்தை முதன்மையாகக் கொண்டு அவர் எழுதியபாடல்களின் பட்டியல் ஏராளம். நாயகன் படத்தில் வரும் நீயொரு காதல் சங்கீதம், இந்த பச்சைக் கிளிக்கொருசெவ்வந்தி பூவில் தொட்டிலை கட்டி வைத்தேன்... உள்ளிட்ட பாடல்களை எழுதியவர். அதுபோல் அடிமைப்பெண்ணில் ஆயிரம் நிலவே வா ஓராயிரம் நிலவே வா பாடலை எழுதியவரும் அவரே. இந்த பாடலைஎஸ்பி பாலசுப்ரமணியன் பாடினார். எம்ஜிஆர் 1984 ஆம் ஆண்டு சட்டசபை தேர்தலின் போது அமெரிக்காவில் சிகிச்சை பெற்றார். அப்போது அவர் உடல்நலம் பெற அனைத்து மதத்தினரும் பிரார்த்தனை கூட்டங்களை நடத்தினர். அதில் பெரிதும் ஒலிக்கப்பட்ட பாடல் புலமைப்பித்தன் எழுதிய நீங்க நல்லாயிருக்கணும் பாடல் ஆகும்.

# திருந்தாத படையினரும், திருத்த விரும்பாத அரசும்

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)**



**க**டந்த வாரம் சமூக ஊடகங்களில் ஒரு கேலிச்சித்திரம்!

இலங்கையின் பல்பொருள் அங்காடி ஒன்றில் நடுத்தர வயதுடைய ஒருவர் "இங்கு நீதி, நேர்மை, சமதர்மம், சமத்துவம், சகோதரத்துவம் கிடைக்குமா"?

"நீங்கள் இலங்கையர் தானே! உங்களிடம் தேசிய அடையாள அட்டை உள்ளதா? இவையெல்லாம் எமது நாட்டில் கிடைக்காது, பாவனைக்கு உதவாத பொருட்கள் என்று உங்களுக்குத் தெரியாதா?"

மிகப்பெரிய விஷயங்களை தமக்கே உரிய பாணியில் சுருக்கமாக நறுக்கென்று சொல்வது கேலிச் சித்திரங்களை வரைபவர்களின் கைவந்த கலை.

ஆனால் இதில் மிகவும் ஆழமான கருத்து பொதிந்திருந்தது. உண்மை நிலவரத்தையே அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

இலங்கையில் தமிழ் இளைஞர்களைச் சித்திரவதைக்கும் பாலியல் வல்லுறவுக்கும் பாதுகாப்புப் படையினர் உட்படுத்துவதாக புதிய ஆய்வறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

நினைவேந்தல் நிகழ்வுகள், அரசுக்கு எதிரான போராட்டங்களில் பங்கேற்றல் மற்றும் வெளிநாடுகளில் இருந்து நிதி பெறுதல் போன்றவற்றில் ஈடுபடும் தமிழ் இளைஞர் யுவதிகளை இலங்கை காவல்துறையும் இராணுவமும் கடத்தி, சித்திரவதை செய்து பாலியல் பலாத்காரம் செய்து வருவதாக சர்வதேச உண்மை மற்றும் நீதிக்குமான செயற்திட்டம் ஐ டி ஜே பி தனது ஆய்வறிக்கையில் கூறியுள்ளது.

இந்த அறிக்கை ஜெனிவாவில் இடம்பெற்ற மனித உரிமைகள் பேரவையில் செப்டம்பர் மாத அமர்வில் வெளியிடப்பட்டது.

"ஜெனீவாவில் இலங்கையைப் பற்றி விவாதிக்கும் போது, பாதுகாப்பு படையினரின் தொடர்ச்சியான சித்திரவதைகள் சர்வதேச சமூகத்தின் நிகழ்ச்சிநிரலில் முதன்மை பெறல் வேண்டும் - காணாமல் போனவர்களின் குடும்பங்கள் துன்புறுத்தப்படுவதாகச் சொன்னால் மட்டும் போதாது" என்று ஐடிஜேபி இன் நிர்வாக இயக்குனர் யஸ்மின் சூக்கா கூறினார்.

சிறுபான்மை தமிழர்கள் மீது அத்துமீறல்களும் வன்முறைகளும் தொடர்ந்து கட்டவிழ்த்து விடப்படுகிறது, அச்சுறுத்தி பணிய வைக்கும் ஆயுதமாகவும் பாலியல் வல்லுறவுகள் மற்றும் சித்திரவதைகள் பயன்படுத்தப்படுகின்றன என்று அவர்களது அறிக்கை கூறுகிறது.

"இலங்கையில் அமைதியான முறையில் தங்கள் குடிமை உரிமைகளைப் பயன்படுத்தும் சிலர் கொடூரமாகத் தடுத்து வைக்கப்படுகின்றனர், சூடான உலோகக் கம்பிகள் மற்றும் சிகரெட்டுகளால் சூடுவைக்கப்படுகின்றனர் பெற்றோலில் நனைத்த பொலிதீன் பைகளுக்குள் முகத்தை திணித்து மூச்சுத் திணறடிக்க செய்யப்படுகின்றனர். பின்னர் பாதுகாப்புப் படையினரால் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்படுகின்றனர்", என்று சுட்டிக்காட்டுகிறார் யாஸ்மின் சூக்கா.

இது தொடர்பில் ஐ டி ஜே பியின் சர்வதேச விசாரணையாளர்கள், தற்போது இங்கிலாந்தில் உள்ள 15 தமிழர்களிடமிருந்து விரிவான அறிக்கைகளைப் பதிவு செய்தனர்.

அவர்கள் 2019 நவம்பரில் கோட்டாபய ராஜபக்சே ஆட்சிக்கு வந்த பின்னர் கடத்தப்பட்டு



சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளானவர்கள்.

இதில் அதிகமானவர்கள் இந்த ஆண்டு நிகழ்ந்த பொத்துவில் முதல் பொலிகண்டி வரை (P2P) போராட்டத்தில் பங்கேற்றவர்கள். மேலும் சிலர் இறந்தவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வுகள் மற்றும் காணாமல் போனவர்களுக்கான போராட்டங்களில் பங்கேற்றவர்கள். இன்னும் பலர் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு தன்னார்வலர்களாக பணியாற்றியவர்கள். வெள்ளை வான்களில் தாங்கள் கடத்தப்பட்டதாக அதில் ஆறு பேர் கூறினார்கள்.

இவ்வகையான கைது மற்றும் கடத்தல்களை படையினர் பல தசாப்தங்களாக பயன்படுத்தி வந்துள்ளனர் என்று அந்த அறிக்கை கூறுகிறது. அவர்கள் சித்திரவதைக்கென விசேடமாக தயாரான அறைகளில் முழங்காலில் பெரும்பாலும் உள்ளாடைகளுடன் மண்டியிட வைக்கப்பட்டு கொடூரமான சித்திரவதைகளுக்கு மீண்டும் மீண்டும் உள்ளாக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஏறக்குறைய அனைவரும் இனவெறி வார்த்தைகளால் ஏசப்பட்டு உளரீதியான பாதிப்புகளுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். அதே வேளையில் பாலியல் வல்லுறவுக்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் காயங்களுடன் இரத்தம் சொட்டச் சொட்ட தரையில் இருட்டில் நிர்வாணமாக வைக்கப்பட்டனர். அவர்களின் உள்ளாடைகள் மட்டுமே இரத்தத்தையும் விந்தணுக்களையும் துடைக்க எஞ்சின என்று மிகவும் கவலையளிக்கும் வகையிலான விடயங்கள் அந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.




பயங்கரவாத தடுப்பு புலனாய்வு பிரிவினால் கைது செய்யப்பட்ட இரண்டு நபர்கள் தாம் மலவாசல் மூலமான பாலியல் வன்புணர்வுக்கு உள்ளானதாகவும் உலோகக் கம்பியை மலவாசலில் புகுத்தி கொடுமைப்படுத்தப்பட்டதாகவும் வாக்குமூலம் அளித்தனர்.

அரச உத்தியோகத்தினர், படையினர், சிறை அதிகாரிகள் என பல தரப்பினருக்கு பெருந்தொகையான பணத்தை லஞ்சமாகக் கொடுத்தே இவர்கள் சிறையிலிருந்து வெளியே எடுக்கப்பட்டனர் என்று சாட்சிகள் தரப்பில் தம்மிடம் தெரிவிக்கப்பட்டதாக ஐடிஜேபி இன் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


"எல்லா சந்தர்ப்பங்களிலும் குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளின் விடுதலைக்காக லஞ்சம் கொடுத்தன. விசாரணை செய்யப்பட்டவர்கள் பல வாரங்களாக மலைகளைக் கடந்து நடந்து வாகனங்களின் பின்புறம் மறைந்திருந்து ஆங்கில கால்வாயினை ரப்பர் வள்ளங்களில் கடந்து அசாதாரணமான பயணங்களை மேற்கொண்டு இங்கிலாந்து வந்துள்ளனர்".

பிரிட்டனுக்கு வந்த பிறகும் கூட வெளிப்படையான உடற்காயங்களுடனும் மாறாத மன வடுக்களுடனும் இருந்த ஆறு பேர் தற்கொலைக்கு முயன்றுள்ளனர் என்று அதிர்ச்சியளிக்கும் வகையிலிருக்கும் அந்த அறிக்கை கூறுகிறது.

சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைகளைச் செய்தவர்களில் மோசமான பயங்கரவாத தடுப்பு பொலிஸ் பிரிவுடன் சீருடையில் இருந்த இலங்கை இராணுவ அதிகாரிகளும் அடங்குவர் என்று சாட்சியம் அளித்தவர்கள் மூலம் தமக்கு தெரியவந்ததாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் இருவர் கடந்த ஆண்டு எந்த காவல் நிலையத்தில் தாங்கள் சித்திரவதை செய்யப்பட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர் என்பதை நினைவில் வைத்திருக்கின்றனர். அதில் ஒருவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட நிலையத்தின் பின்புறத்தில் உள்ள கட்டிடங்களின் வரைபடத்தைக் கூட வரைந்து காட்டினார்.


"இது முறையான தண்டனையின்மையின் அசிங்கமான முகம். 1987-90 இல் ஜேவிபி மீதான வன்முறை மற்றும் கடந்த நான்கு தசாப்தங்களாக தமிழர்களுக்கு எதிரான அரச வன்முறைக்கு பொறுப்பானவர்கள் மீது அடுத்தடுத்த அரசாங்கங்கள் வழக்குத் தொடர தவறியதால் அந்த குற்றவாளிகள் பொறுப்பைத் தவிர்த்து காவல்துறை மற்றும் இராணுவத்தின் உயர் பதவிகளில் இலகுவாய் அமர முடிந்தது. இப்போது இந்த கட்டமைப்பு பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டின் மூலம் தன்னை சீர்திருத்துவதாக எதிர்பார்ப்பது நகைப்புக்குரியது" என்று திருமதி சூக்கா கருத்து தெரிவித்தார்.



கொடூரமான குற்றங்களுக்கு இலங்கை அரசு தண்டனை வழங்குவதில்லை. குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை பொறுப்புக்கூறல் இல்லாமல் கொடூர குற்றங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க எந்த ஊக்கமும் கிடைக்க போவது இல்லை. சர்வதேச சமூகம் அனைத்து சர்வதேச பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை ரத்து செய்ய வேண்டும் காரணம் அவை பயனளிக்க போவதில்லை என்று யாஸ்மின் சூக்கா தனது அறிக்கையில் சாடியுள்ளார்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் பல வருடங்களாக மாறியது பாதிக்கப்பட்டவர்களின் நிலைமை மட்டுமே. அவர்களில் சிலர் முன்னாள் புலிகள் அல்லது முக்கிய மனித உரிமை ஆர்வலர்கள் என்று ஐடிஜேபி கூறுகிறது. ஜே.வி. பி காலத்தில் பாதிக்கப்பட்டவர்களைப் போலவே கடைக்காரர்கள், மின்தொழிலாளர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் மாணவர்களே இவர்களின் பார்வைக்கு ஆளாகின்றனர்.

இதனிடையே, இலங்கை பொலிசாரின் மோசமான நடவடிக்கை காரணமாக குறைந்தபட்சம் நான்கு தமிழர்கள் பலத்த காயங்களுடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த மாதத்தின் முதல் வாரத்தில் கிழக்கே மட்டக்களப்பு மற்றும் அப்பாறை மாவட்டங்களில் இந்த தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.




அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த ஷாகிர் கான் ஃபருக் எனும் செய்தியாளர் தனது சக செய்தியாளருக்காக வீட்டு வாசலில் காத்திருந்த போது அவ்வழியே வந்த பொலிசார் அவர் முக கவசம் அணியவில்லை என்று கூறி சுமார் நான்கு லட்சம் ரூபாய் பெறுமதியான அவரது கேமராவை சேதப்படுத்தியதுடன் அவரை கடுமையாகத் தாக்கியுள்ளனர். அவர் பொலிசாரால் அடித்து இழுத்துச் செல்லப்படும் காட்சிகள் சமூக ஊடகங்களில் பரவி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

***(தொடர்ச்சி _21_ பக்கம்)***


HSB CANADA
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
விநாயக சதுர்த்தி
SPECIAL Buffet
Only on Scarborough
SPECIAL Thali
Only on Mississauga & Delta
Friday, 10th September, 2021
Order Online: www.saravanabhavan.ca
SARAVANAABHAVANCANADA
SCARBOROUGH: 416 293 7755
MISSISSAUGA: 905 290 0769
DELTA B.C: 778 578 7575
SCARBOROUGH: WOODSIDE SQUARE, FINCH AND MCCOWAN INTERSECTION. 1571 SANDHURST CIRCLE, UNIT 153, SCARBOROUGH, ON. M1V 1V2
MISSISSAUGA: HURONTARIO AND EGLINTON INTERSECTION, 4559 HURONTARIO STREET, UNIT 12B, MISSISSAUGA, ON. L4Z3L9
DELTA: 8701 - 120TH STREET, DELTA, BC, V4C 6R4

# மிகக் கொடிதான கொரோனா நோய்த் தொற்று பரவிக் கிடக்கும் காலத்திலும் தெய்வீகத் தன்மை கொண்ட வீணை அரங்கேற்றத்தை நடத்திய ஆசிரியை குகனேஸ்வரி அவர்களைப் பாராட்ட வேண்டும்

## துளசி விஜி மற்றும் வருணிக்கா சங்கர் ஆகியோரின் வீணை அரங்கேற்றத்தில் சங்கீத வித்துவான் தனதேவி மித்ரதேவா புகழாரம்

"மிகக் கொடிதான கொரோனா நோய்த் தொற்று பரவிக் கிடக்கும் காலம் இது. இவ்வாறான இடர்மிகுந்த காலப் பகுதியில் எல்லோரும் பயத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் நேரத்தில் இன்றைய அரங்கேற்றம் அனைவருக்கும் ஒரு வியப்பூட்டும் ஒரு விழாவாகும். மேலும். தெய்வீகத் தன்மை கொண்ட வீணை அரங்கேற்றத்தை நடத்தியு ஆசிரியை குகனேஸ்வரி அவர்களைப் பாராட்ட வேண்டும், அத்துடன் இன்றைய அரங்கேற்றச் செல்விகளான துளசி விஜி மற்றும் வருணிக்கா சங்கர் ஆகியோரின் அர்ப்பணிப்பையும் ஆற்றலையும் நான் மெச்சுகின்றேன்".

இவ்வாறு நேற்று 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுறொ சீனக் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற அரங்கேற்றச் செல்விகளான துளசி விஜி மற்றும் வருணிக்கா சங்கர் ஆகியோரின் வீணை அரங்கேற்றத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் சங்கீத வித்துவான் தனதேவி மித்ரதேவா தெரிவித்தார்.

கனடாவில் புகழ் பெற்ற இசைக் கல்லூரியான நாத வீணா மன்றத்தின் ஸ்தாபகரும் குருவும் ஆகிய ஸ்ரீமதி குகனேஸ்வரி சத்தியமூர்த்தி அவர்களின் மாணவிகளின் வீணை அரங்கேற்றம் அன்றையதினம் நடைபெற்றது.

கொரோனா நோய்த் தொற்று காரணமாக மண்டப உரிமையாளர்களின் கடுமையான கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்து பார்வையாளர்கள் மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட்டார்கள்.







செல்விகளின் வீணை அரங்கேற்றத்திற்கு பிரதான பக்கவாத்தியக் கலைஞராக "மிருதங்க ஞானவாருதி" வாசுதேவன் இராஜலிங்கம் பங்கெடுத்தார். அவரோடு சாகித்யன் ஜெயகாந்த். மோகனன் ரவீந்திரன், வின்ஸ் ரவீந்திரன். காஸ்வி செந்தில் மணாளன் ஆகியோர் பக்கவாத்தியக் கலைஞர்களாக மேடையை அலங்கரித்தார்கள்.





சிறப்பு விருந்தினர்களாக சங்கீத ஆசிரியை பிரேமா ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி ஆகியோர் கலந்து கொண்டு ஆசிரியை.





ஸ்ரீமதி குகனேஸ்வரி சத்தியமூர்த்தி அவர்களையும். அரங்கேற்றச் செல்விகளான துளசி விஜி மற்றும் வருணிக்கா சங்கர் ஆகியோரையும் வாழ்த்திச் சென்றனர்.

அரங்கேற்றச் செல்விகளான துளசி விஜி மற்றும் வருணிக்கா சங்கர் ஆகியோரின் வீணை வாசிப்புத் திறனை அனைவரும் கண்டும் கேட்டும் வியந்தனர். பக்கவாத்தியக் கலைஞர்களோடு இணைந்து ஓத்துழைத்து அனைத்து உருப்படிகளையும் சிறப்பான முறையில் நகர்த்திச் சென்ற செல்விகளையும் அவர்களை சிறப்பாக பயற்றுவித்த ஆசிரியை ஸ்ரீமதி குகணேஸ்வரி சத்தியமூர்த்தி அவர்களையும் பாராட்டவே வேண்டும்.





அரங்கேற்றத்தை அறிவிப்பாளர் ரஞ்சித் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்.

## கோவிட் – 19 நோய்த் தொற்றானது அரச இயந்திரத்தின் அனைத்து கூறுகளையும் ஆக்கிரமித்துக்கொள்ள. மார்ச் 2020 தொடக்கம் எமது அரசாங்கத்திற்கு ஒரு பெரும் சவாலாவே அமைந்தது

***– மார்க்கம் ஸ்ரோவில் தொகுதியின் லிபரல் வேட்பாளர் ஹெலெனா ஜேசேக்***

*(10ம் பக்கத் தொடர்ச்சி)*

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் உங்கள் லிபரல் கட்சியையே மக்கள் மீண்டும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கேட்பதற்கு விசேட காரணங்கள் உண்டா? என்பதே அடுத்த கேள்வியாக இருந்தது.

அதற்கு பதிலளித்த ஹெலெனா ஜேசேக் அவர்கள் பின்வருமாறு கூறினார்.

"எமது கடந்த அரசாங்கத்தின் சேவைகளின் தொடர்ச்சியாகவே நாம் இந்த தேர்தலில் அடையப்போகும் வெற்றியைப் பார்க்கின்றோம். அதாவது நோய்த் தொற்றுக் காலத்தில் நாம் ஆற்றிய சேவையை மீண்டும் தொடரவே விரும்புகின்றோம். அதற்கு காரணம், தற்போது வீழ்ச்சியடைந்துள்ள கனடிய பொருளாதாரத்தை மீண்டும் நாம் சீராக்க விரும்புகின்றோம். பொருளாதாரத்தை சீர் செய்து நோய்த் தொற்று காலத்தில் நாம் செய்த செலவுகளை சரி செய்ய வேண்டும்.

தடுப்பூசிகள் மற்றும் தொற்று தொடர்பான பரிசோதனைகள் தொடர்ந்தும் கடைப்பிடிக்க வேண்டிய தேவை இன்னும் உள்ளது. எனவே தான் எமது லிபரல் அரசாங்கம் மீண்டும் ஆட்சியில் அமரவேண்டும் என்று எமது தேர்தல் பிரச்சார வடிவம் உருவாக்கப்பட்டுள்ளது' என்றார்.

"உங்கள் கட்சித் தலைவரும் பிரதமருமான ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் அண்மையில் அறிவித்த சிறுவர் பராமரிப்பிற்காக ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு 10 டாலர்கள் வழங்கப்படும் என்ற புதிய அறிவிப்பின் சிறப்பம்சங்களைக் கூறுவீர்களா? என்ற அடுத்த கேள்வி முன்வைக்கப்பட்டது

அதற்கு பதிலளித்த ஹெலெனா ஜேசேக் அவர்கள் பின்வருமாறு தெரிவித்தார்.

"எமது கட்சித் தலைவரும் பிரதமருமான ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் எமது தேசத்தின் குழந்தைகளினதும் தாய்மார்கள் தந்தையர்கள் என அனைவர் நலன்களிலும் அக்கறை கொண்டுள்ளார் என்பதையே நாம் இங்கு காண்கின்றோம். குழந்தைகள் அரசாங்கத்தின் உதவியோடு மிக எளிதாக குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப் படுகின்றார்கள். எனவே பெற்றோர்களும் முழுமையாக தங்கள் ◌தொழில் நிலையங்களுக்குச் சென்று நாட்டின் உற்பத்திக்கு உதவுகின்றவர்களாக மாறுகின்றார்கள். அதேபோன்று, குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப் படுகின்ற குழந்தைகளும் அங்கு தமது குழந்தைப் பராயத்திலிருந்தே கற்றுக் கொள்ள ஆரம்பிக்கின்றார்கள். கல்வி அவர்களுக்கு ஊட்டப்படுகின்றது. இதனால் அவர்களின் அறிவு விருத்தியடைகின்றது. எனவே அரசாங்கம் குழந்தைகளுக்காக முதலீடு செய்கின்ற பணம் இந்த நாட்டின் வளர்ச்சிக்கு உதவுகின்றதை நாம் இனி வரும் காலங்களில் நேரடியாக அவதானிக்கலாம். இதற்காக மாகாண அரசாங்கங்களின் இணைப்பும் ஒத்துழைப்பும் மத்திய அரசிற்கு தேவைப்படுகின்றது" என்றார் ஹெலெனா ஜேசேக் அவர்கள்.

# கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மீது சரளைக் கற்களை வீசி எறிந்தவர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்கவுள்ளார்கள்

## கொன்சர்வேடிவ் மற்றும் புதிய ஜனநாயகக் கட்சித் தலைவர்கள் ஜஸ்டின் ட்ரூடோவை அவமானப்படவும் செய்த எதிர்ப்புகளைக் கண்டித்தனர்



கனடாவின் லண்டன் என்னும் நகரத்தின் ஒதுக்குப் புறம் ஒன்றில் லிபரல் கட்சியின் தலைவரும் தற்போதைய கனடிய பிரதமருமான ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் மீது சரளைக் கற்களை வீசி எறிந்தவர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்கவுள்ளார்கள் என லண்டன் நகர பொலிஸ் சேவையின் அதிகாரி ஒருவர் ஊடகங்களின் பிரதிநிதிகளோடு உரையாடுகையில் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமையன்று தேர்தல் பிரச்சாரத்திற்காக அங்கு சென்றிருந்த லிபரல் தலைவர் ஜஸ்டின் ட்ரூடோ மீது அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிலர் சரளைக் கற்களை வீசியது தொடர்பாக விசாரணை நடத்தி வருவதாக லண்டன், மாநகர காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

தென்மேற்கு ஒன்ராறியோ பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளுத. நகர காவல்துறை சேவையின் செய்தித் தொடர்பாளர், கருத்துத் தெரிவிக்கையில் "இந்த சம்பவம் குறித்து பொதுமக்களிடம் தகவல்களை திரட்டி வருகிறோம்" என்றார்.

இதேவேளை ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் தேசிய ஊடகங்களின் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை உரையாடுகையில், சரளைக் கற்கள் தன்மீது வீசப்பட்டதை உணர்ந்ததாக தெரிவித்தார். "ஆனால் காயமடையவில்லை, மேலும் இந்த சம்பவத்தின் தொடர்ச்சியான நடவடிக்கைகளை என்ன நடக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க போலீஸிடம் ஈடுபடுவாரகள்." என்றார். கற்கள் ட்ரூடோவை மட்டுமல்ல, அவரது ஆர்சிஎம்பி பாதுகாப்பு விவரத்தின் சில உறுப்பினர்களையும் மற்றும் பிரச்சாரத்திற்கு உதவியாக இருந்த பத்திரிகையாளர்களையும் தாக்கியது என்றும் அறியப்படுகின்றது.

கடந்த திங்கள்கிழமை மாலை ஜஸ்டின் ட்ரூடோ மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் சிறிய சரளைக் கற்களை வீசினர். தொற்றுநோய்க்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் தடுப்பூசிகள் விநியோகம் தொடர்பாக விமர்சிக்கும் குழுக்களே இவ்வாறான விரும்பத்தகாத செயல்களில் ஈடுபட்டன என்றும் கனடிய தேர்தல் எதிர்வரும் 20ம் திகதி நடைபெறவுள்ள நிலையில் அது தொடர்பான பிரச்சாரத்தின் போது பிரதமர் ட்ரூடோவின் திட்டமிட்ட நிகழ்வுகளை இந்த சம்பவம் கடுமையான முறையில் முடக்கியது மட்டும் அல்லாமல் மிகவும் பாதித்துவிட்டுத என்றும் அறியப்புடகின்றுது.

"நான் மிகவும் தெளிவாக உள்ளேன். அவர்கள் வெளிப்படையாக சொல்லட்டும் - முதலில், மக்கள் பொருட்களை தூக்கி எறிவது மற்றும் ஒரு அரசியல் பேரணியில் மற்றவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்துவது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது" என்று ட்ரூடோ மொன்றியால் நகரில் இடம்பெற்ற பிரச்சார நிகழ்ச்சியில் ஒன்றில் கூறினார்.

ஆன்றைய தினம் தனது லிபரல் கட்சியின் வீட்டுவசதித் திட்டங்கள் தொடர்பாக அறிவிப்புக்களை விடுக்க அவர் ஆயத்தமாக இருந்தார் என்றும், ஆனால் பெரும்பாலான செய்தி மாநாட்டிற்குப் பதிலாக அவருடைய பிரச்சாரத்தின் பாதுகாப்பு குறித்த கேள்விகளுக்கு மட்டுமே அவரால் பதிலளிக்க முடிந்துத. இனிமேல் பிரச்சார நிகழ்வுகள் பாதுகாப்பாக செய்யப்படுவதை உறுதி செய்வது பற்றியும் ஊடகவியலளார்கள் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

துன்புறுத்தல் மற்றும் மிரட்டல் மற்றும் உடல் ரீதியான வன்முறை ஆகியவை அரசியல் பேரணிகளில் மட்டும் நடப்பதில்லை என்றும் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறினார், சமீபத்திய நாட்களில் கனடா முழுவதும் உள்ள மருத்துவமனைகளுக்கு வெளியே இதே போன்ற சம்பவங்கள் இடம்பெறுவதைச் சுட்டிக்காட்டிய அவர். தொழிலாளர்கள் மற்றும் உணவக ஊழியர்களும் பல மாதங்களாக முகமூடி அணிந்த எதிர்ப்பாளர்களிடமிருந்து கடுமையான தாக்குதல் முயற்சிகளுக்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

"எங்களுக்கு இப்போதே ஒரு தேர்தல் தேவையா இல்லையா என்று இன்னும் யோசித்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு, கனடியர்களுக்கு உண்மையிலேயே முக்கியத்துவம் வாய்ந்த பல பெரிய பிரச்சினைகளின் பிரச்சினைகள் மற்றும் விவாதத்தின் தீவிரத்தை பாருங்கள்" என்று ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் தடுப்பூசிகளை தொடர்பாக மொன்றியால் நகரில் உரையாற்றும் போது கூறினார், குழந்தை பராமரிப்பு, சுகாதாரப் பாதுகாப்பு, காலநிலை மாற்றம் மற்றும் கன்சர்வேடிவ்களின் துப்பாக்கிகள் மீதான தடையை ஏற்படுத்தல் போன்ற விபரங்கள் பற்றியே தனது தேர்தல் பிரச்சாரம் முக்கியத்துவம் பெறுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.





இதேவேளை, கொன்சர்வேடிவ் தலைவர் எரின் ஓ டூல் மற்றும் புதிய ஜனநாயகக் கட்சித் தலைவர் ஜக்மீத் சிங் ஆகியோர் லிபரல் கட்சித் தலைவர் ஜஸ்டின் ட்ரூடோவை ஆத்திரமடையவும் அவமானப்படவும் செய்த கோபமான மற்றும் அவதூறான எதிர்ப்புகளைக் கண்டித்தனர்.


கோவிட் -19
POP-UP சோதனை

புதிய நேரம் (ஜூலை முதல்)

உங்களுக்கு ஏதேனும் அறிகுறிகள் இருந்தால், அல்லது நீங்கள் COVID-19 உடன் தொடர்பு கொண்டிருக்கலாம் என்று நினைத்தால், தயவுசெய்து ஒரு சந்திப்பை பதிவு செய்து சோதனை செய்யுங்கள்.

எல்லாம் வரவேற்கத்தக்கது, வயது வரம்பு இல்லை. உங்கள் OHIP சுகாதார அட்டையை கொண்டு வாருங்கள். உங்களிடம் OHIP அட்டை இல்லையென்றால், தயவுசெய்து 1 துண்டு ஐடியைக் கொண்டு வாருங்கள்.

* தயவுசெய்து கவனிக்கவும், சர்வதேச பயண அனுமதிக்கு COVID-19 சோதனை கோரும் நபர்கள் பொதுவில் நிதியளிக்கப்பட்ட COVID-19 சோதனைக்கு தகுதியற்றவர்கள்

**Carefirst One-Stop Multi-Services Centre**
300 Silver Star Blvd, Scarborough ON M1V 0G2 (Midland & McNicoll)
ஏப்ரல் 10, 2021 முதல் ஒவ்வொரு சனிக்கிழமைகளில் திறக்கப்படும். 9:30 a.m. - 2:30 p.m.

**YMCA**
101 YMCA Blvd, Markham ON L6G 0A1 (Kennedy & Hwy 407)
தொடக்க தேதி: ஜூலை 3, 2021 ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் 9:30 a.m. - 2:30 p.m.

**Markham Chinese Presbyterian Church**
2250 Denison St, Markham ON L3S 1E9 (McCowan & Denison)
தொடக்க தேதி: ஜூலை 6, 2021 ஒவ்வொரு செவ்வாய் மற்றும் புதன்கிழமையும் 9:30 a.m. - 2:30 p.m.

**Islamic Society of Markham (நியமனம் மூலம் மட்டுமே)**
2900 Denison Street, Markham, ON L3S 4J8 (Denison & Middlefield)
தயவுசெய்து கவனிக்கவும்: இந்த இடத்தில் சோதனை செய்வது வாகன நிறுத்துமிடத்தில் drive-thru நடைமுறை மூலம் இயங்கும்
ஸ்ட்ராட் தேதி: ஜூலை 8, 2021 ஒவ்வொரு வியாழக்கிழமையும் 9:30 a.m. - 2:30 p.m.

உங்கள் சோதனை சந்திப்பை முன்பதிவு செய்யுங்கள்
www.carefirstontario.ca
Walk-In (10 am - 2 pm) ஆனால் காத்திருப்பு நேரம் மாறுபடலாம்

மேலும் தகவலுக்கு, தயவுசெய்து பார்வையிடவும் www.carefirstontario.ca அல்லது அழைக்கவும் 416-646-5108

உங்களிடம் கொண்டு வரப்பட்டது: Carefirst Seniors and Community Services Association

Carefirst Family Health Team
Health for All Family Health Team
Islamic Society of Markham
Markham Chinese Presbyterian Church
Markham Stouffville Hospital
YMCA of Greater Toronto

Updated on June 20, 2021




HON.

# MARY NG

Candidate for Markham—Thornhill

- கோவிட் -19 க்கு எதிரான போராட்டத்தை வெற்றி கொள்வதற்காக !
- குடும்பங்கள் மற்றும் வர்த்தகர்களை ஆதரித்து ஊக்குவிப்பதற்காக !
- ஒரு வலுவான, நிலையான பொருளாதார மீளுருவாக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக !

Authorized by the official agent for Mary Ng

# NUCLEUS UNIVERSITY

## SCHOOL OF MEDICINE

- 4-Year MD Program for Undergrad
- 5-Year MD Program for High School Grads
- Clinicals conducted at USA teaching hospitals
- Pre-Medical Classes conducted in Brampton
- Graduates can write US & Canadian Licencing Exams

## SCHOOL OF DENTISTRY

- 4-year DDS Program for Undergrads
- 5-Year DDS Program for High School Grads
- Doctor of Dental Surgery Program conducted in Aruba
- Pre-Dental Classes conducted in Brampton
- Graduates can write US & Canadian Licencing Exams

- Canadian Owned University in one of the safest Caribbean country of Aruba
- Become a practicing Medical Doctor or Dentist in Canada or USA
- Within 5 years for High School graduates or 4 years for University undergraduates
- Pre-medicine courses can be completed in Brampton campus for high school graduates.
- Affordable tuition fees, scholarships available to outstanding students.
- Clinical training at Johns Hopkins affiliated hospitals in the USA

**For more information contact admissions office at: (416) 910-8750**

**தமிழில் உரையாட அழைக்கவும், Dr. Balachandar: (416) 545-7080**

**NUSOM.ORG**

# RE-ELECT Salma Zahid, Scarborough Centre

Only the Liberals have a plan for:

- $10/day childcare for families
- National standards to protect seniors in long term care
- Make it cheaper to buy a home and build more affordable housing
- New immigration visa to reunite families awaiting spousal sponsorship processing

**Advance polls are September 10 to 13.**
**Election Day is September 20th.**

Let's move forward for everyone!



**(416) 479-4150**
info@salmazahid.ca salmazahid.liberal.ca
Twitter FB @salmazahid15
Instagram /salmazahidmp

*Authorized by the official agent for Salma Zahid*

Liberal

# காத்தான் குடி அகமது ஆதில் முகமது சம்சுதீன் யார்?

## தினமலர் வழியில் தினமணியின் தமிழ் விரோதப் போக்கு



கோலாலம்பூர், செப். 05: - மலேசிய நக்கீரன்

இலங்கை காத்தான்குடியைச் சேர்ந்த அகமது ஆதில் முகமது சம்சுதீன், கடந்த 2011-இல் நியூசிலாந்திற்கு சென்றுள்ளார். அவ்வாறு சென்ற-வேளையில் மாணவருக்கான நுழைவைப் பயன்படுத்தி அதன்வழி விசாவும் பெற்றவர், பின்னாளில் அங்கு அடைக்கலமும் கோரி இருக்கிறார்.

தற்பொழுது 32 வயதாகும் அவர், "ஐஎஸ்" என்னும் அமைப்பில் இணைந்து செயல்படுவதை அந்த நாட்டின் உளவுத் துறை கண்டறிந்ததுடன் அவர்மீதான கண்காணிப்பையும் கமுக்கமாக தொடர்ந்து வந்துள்ளது. இந்த வேளையில், கடந்த வெள்ளிக் கிழமை நியூசிலாந்தில் உள்ள ஒரு வணிக வளாகத்தில் கத்தியைக் கொண்டு வன்முறையில் ஈடுபட்ட அவர், காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்த செய்தியை வெளியிட்டுள்ள ஆர்.எஸ்.எஸ்.-பார்ப்பன சார்புடைய தினமணி நாளிதழ், "நியூசிலாந்து வணிக வளாக தாக்குதலை மேற்கொண்டவர் இலங்கைத் தமிழர்" என்று தலைப்பிட்டு செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ் மொழியின்பாலும் தமிழினத்தின் மீதும் காலமெல்லாம் வெறுப்பைக் கக்கும் குணம் கொண்டர்வர்களால் நடத்தப்படும் இந்த நாளேடு வெளிப்படுத்திய குறுமதித்தனத்திற்கு இலங்கை காவல்துறையை துணைக் கொண்டுள்ளது. ஐ.எஸ். என்பது இஸ்லாம் சமய அடிப்படையிலான ஒரு பன்னாட்டு அமைப்பு. தீவி-ரவாத தன்மை கொண்ட அதில், உறுப்பியம் பெறுகிற அனைவரும் சமய அடிப்படையில்தான் இணைகின்றனரே அன்றி, இனம் மற்றும் மொழியை ஆதாரமாகக் கொண்டு இணைவதில்லை.

2019-ஆம் ஆண்டு டிசம்பர் மாத பிற்பகுதியில் குர்திஷ் பயங்கரவாத எதிர்ப்புப் படையைச் சேர்ந்த லாஹீர் தளபனி என்ற உயர் அதிகாரி, பிபிசி செய்தி நிறுவனத்திற்கு அளித்த செவ்வியின்போது, ஐ.எஸ். பயங்கரவாத குழுவினர் அல்-கை-டாவைவிட மிகவும் ஆபத்தானவர்கள் என்றும் கடுமையான ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் என்று குறிப்பிட்டார். தென் ஆசிய மற்றும் மத்தியக் கிழக்கு ஆசிய நாடுகள், வட ஆ'.பிரிக்கா, சிரியா, ஈராக் போன்ற நாடுகளில் காலூன்றியுள்ள இஸ்லாமிய அரசு என்னும் இந்த ஐ.எஸ். அமைப்பின் முக்கிய நோக்கம் ஈரானை மையமாகக் கொண்டு ஒரு இஸ்லாமிய ஆட்சியை கட்டமைக்க வேண்டும் என்பதுதான். பல நாடுகளையும் சேர்ந்தவர்கள் இந்த அமைப்பில் உறுப்பியம் பெற்றும் ஈடுபாடு கொண்டும் வினையாற்றி வரும்வேளையில், இந்த அமைப்பைச் சேர்ந்த எவரைப் பற்றியாவது தகவல் சாதனத்தில் செய்தி இடம்பெறும்பொழுது, பொதுவாக ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடுவதுதான் வழக்கம்.


இந்த அமைப்பில் ஆதிக்கம் செலுத்தும் சன்னிப் பிரிவ-ினரைப் பற்றிகூட ஒருவரும் குறிப்பிடுவதில்லை. இப்படிப்பட்ட நிலையில், இலங்கை காத்தான் குடியைச் சேர்ந்த அகமது ஆதில் முகமது சம்சுதீனைப் பற்றிய செய்தியில், அவர் ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்தவர் என்று தெரிவிப்பதை விட்டுவிட்டு, இந்த தின மணி நாளேடு, "நியூசிலாந்து வணிக வளாக தாக்குதலை நடத்தியவர் இலங்கைத் தமிழர்" என்று தலைப்பிட்டுள்ளது.

அப்படி யென்றால், 1948 ஜனவரி 30-இல் காந்தியைக் கொன்றவன் ஒரு பிராமணன் என்று இந்த பார்ப்பன ஏடு செய்தி வெளியிடுமா? இந்து தீவிரவாத அமைப்பான ரா'ட்ரிய சுயசேவக சங்க (ஆர்.எஸ்.எஸ்.)த்தின் கொள்கை விளக்க செயலாளராகப் பணிபுரிந்த நாதுராம் விநாயக கோட்சே, ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் தீவிரத் தன்மை போதவில்லை என்று கூறி அதிலிருந்து விலகியதுடன் இந்து மகா சபையில் இணைந்து செயல்பட்டவர்.

மராட்டிய மாநிலத்தில் சத்ரபதி சிவாஜி காலத்தில் இருந்தே சற்று போர்க்குணம் கொண்டவர்களாகக் கருதப்படும் சித்பவன பார்ப்பன குலத்தைச் சேர்ந்தவர்தான் இந்த மூக்குத்தி விநாயக கோட்சே. கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒரு நல்ல தமிழிதழாக வெளிவந்து கொண்டிருந்த தினமணி, இப்பொழுது சமற்கிருதமயமாகி வருகிறது. போகட்டும். அதற்காக, போகிற போக்கில் தமிழர்மீது புழுதி வாரித் தூற்றும் வேலையை இது மேற்கொண்டால், அதை எப்படி பொறுத்துக் கொள்வது?.

அகமது ஆதில் முகமது சம்சுதீன், ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடுவதைவிட, இலங்கை தமிழர் என்று சொல்வதில் அவ்வளவு ஆனந்தம் அடையும் தினமணியின் குறுமதி வேலை நீண்டகாலத்திற்கு நிலைக்காது.

**நக்கீரன் -** Nakkeeran 013-244 36 24






# நீண்டகாலகால தடுப்பில் உள்ள பயங்கரவாத சந்தேகநபர்களைப் பற்றி சர்வதேசத்திற்கு அறிவிப்பு

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்- லண்டன்)




அடிப்படை மனிதாபிமானக் கோட்பாடுகளுக்கு எதிரான ஏற்பாடுகளைக் கொண்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு நிவாரணம் வழங்க ஐக்கிய நாடுகள் சபை தலையிட வேண்டுமென கைதிகளின் உரிமைக்கான முன்னணி குழுவொன்று கோரியுள்ளது.

செப்டம்பர் 13ஆம் திகதி ஆரம்பமாகும் பேரவையின் 48ஆவது அமர்வில் இலங்கை குறித்த அறிக்கையில், பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் அந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உரிமைகள் குறித்து குறிப்பிட வேண்டுமென, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிசெல் பெச்லெட்டுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், கைதிகள் உரிமைகளை பாதுகாக்கும் குழு கோரியுள்ளது.

கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழுவின் தலைவரான சட்டத்தரணி சேனகா பெரேரா கையெழுத்திட்டு, செப்டெம்பர் 4 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த கடிதம், சட்டவிரோதமாக தடுத்து வைத்தல் குறித்த ஐ.நா.வின் விசேட தூதுவர் மற்றும் ஐரோப்பிய நாடாளுமன்றத் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வழங்கப்படும் ஜிஎஸ்பி பிளஸ் வரிச் சலுகை குறித்து மீளாய்வு செய்கையில், நீண்டகாலமாக தடுத்து வைத்திருப்பவர்கள் குறித்து கரிசனை செலுத்துமாறு, ஐரோப்பிய நாடாளுமன்றத்திடம் அந்த கடிதத்தின் ஊடாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

"இலங்கையில் தனிமனித சுதந்திரம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு தீங்கு விளைவிக்கும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் துன்புறுத்தல்களுக்கு தீர்வு காணுதல்" என்ற தலைப்பில் சட்டத்தரணி சேனக பெரேரா அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டம் (தற்காலிக ஏற்பாடுகள்) தற்காலிகமாக அமுல்படுத்தப்பட்டதாகவும், எனினும் இது தற்போது இலங்கை சட்ட அமைப்பின் ஒரு பகுதியாக மாறியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.




"இருப்பினும், நாட்டில் எந்த கிளர்ச்சியும் வன்முறையும் இல்லாத போதிலும், இந்த சட்டத்தை செயல்படுத்துவதில் அரசாங்கத்திற்கு வேறு நோக்கம் உள்ளது என்பது தெளிவாகிறது".

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் நிறைவேற்று அதிகாரத்திற்கு வழங்கப்பட்ட பரந்த அதிகாரங்கள் ஊடாக, நீதிமன்றத்திற்கு அறிவிக்காத சட்டவிரோத கைதுகள், தடுத்து வைத்து சித்திரவதைக்கு உட்படுத்துதல் மற்றும் குற்றச்சாட்டுகள் இன்றி பல்வேறு இடங்களில் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டல் ஆகியவற்றுக்கு வாய்ப்புகள் காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ள சட்டத்தரணி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு நிவாரணம் வழங்க மூன்று பேர் கொண்ட குழுவை ஜனாதிபதி நியமித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

"ஐக்கிய நாடுகள் சபை உட்பட உலகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை மனிதாபிமானக் கோட்பாடுகளுக்கு முரணான விதிமுறைகளைக் இந்த சட்டம் கொண்டிருப்பதால், பல சமயங்களில் இந்தச் சட்டத்தைத் மீளமைக்க வேண்டியதன் அவசியத்தை இலங்கை அரசாங்கம் கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது".

இதற்கமைய 21.01.2021 மற்றும் 12.02.2021 திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு மூலம் உச்சநீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்டி நவாஸ் தலைமையில் மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவை இலங்கை அரசு நியமித்துள்ளதோடு, அதன் இடைக்கால அறிக்கை 20.07.2021 அன்று ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டதாக சட்டத்தரணி சேனக பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், இடைக்கால அறிக்கை அல்லது அமைச்சரவை உபகுழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் இதுவரை செயற்படுத்தத் தவறியுள்ளதாக சட்டத்தரணி குற்றம் சாட்டியுள்ளார்.

அரசாங்கம் ஒத்திவைத்தல் கொள்கையை தொடர்ந்து பின்பற்றுவதால், கைதிகள் தமது வாழ்நாளை இழக்க நேரிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

12 ஆண்டுகளுக்கும் மேலாக குற்றம் சாட்டப்பட்ட 11 சிங்களவர்கள் மற்றும் தமிழர்கள் பற்றிய விரிவான அறிக்கையையும் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழு வெளியிட்டுள்ளது.

மன்னாரின் புகழ்பெற்ற கவிஞர் அஹ்னாப் ஜசீம், முக்கிய மனித உரிமை சட்டத்தரணி, ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, ஊடகவியலாளர் கீர்த்தி ரத்நாயக்க, கட்சித் தலைவர்கள் அசாத் சாலி மற்றும் ரிஷாட் பதியுதீன் ஆகியோரும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

"இதற்கமைய, இந்த சட்டத்தின் சட்டவிரோதம் மற்றும் மனிதாபிமானமற்ற தன்மை காரணமாக ஆட்சியாளர்கள் ஒட்டுமொத்த சமூகத்தையும் அச்சுறுத்தும் வகையில் செயல்பட முடிந்தது".

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஊடாக பல வருடங்களாக சட்டவிரோதமாக மக்களை தடுத்து வைத்து அவர்களின் உரிமைகளை நசுக்க முடிந்துள்ளதாக கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள சட்டத்தரணி சேனக பெரேரா, தற்போது, ஜிஎஸ்பி சலுகையைப் பாதுகாப்பதற்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் திருத்துவதற்கான தனது ஆர்வத்தை சர்வதேச சமூகத்திற்கு காட்டும் வகையில், அரசாங்கம் மோசடியான செயலில் ஈடுபடுவதாக குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்தரணி சேனக பெரேரா தனது கடிதத்தில் இலங்கை அரசாங்கத்துடனான கலந்துரையாடல்களில் இந்த விடயங்கள் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் எனவும், இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

## ஜிஎஸ்பி+ இழக்கும் அபாயம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது உட்பட மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால், இலங்கை அதன் ஜிஎஸ்பி பிளஸ் வரிச் சலுகைகளையும் பயங்கரவாத எதிர்ப்பு உதவிகளையும் இழக்க நேரிடும் என ஐரோப்பிய நாடாளுமன்றம் சமீபத்தில் எச்சரித்துள்ளது.

கடந்த ஜுன் மாதம் பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸ் ில் அமைந்துள்ள ஐரோப்பிய நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சிறுபான்மையினரை ஒடுக்குவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவது குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது.

ஊடக அடக்குமுறை, சட்டத்தின் ஆட்சி இல்லாமை, காணாமல் போதல்கள், கைதுகளின் போதான மரணங்கள், சிறுவர் தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சுதல், மற்றும் தொழிலாளர் உரிமைகள் பறித்தல் உள்ளிட்ட பல்வேறு மனித உரிமை மீறல்களுக்காக இலங்கை பரவலாக விமர்சிக்கப்பட்டது.

இலங்கை தனது ஒப்புக்கொள்ளப்பட்ட மனித உரிமைக் கடமைகளை நிறைவேற்றவில்லை என நிரூபிக்கப்பட்டால், அது தற்போதுள்ள ஜிஎஸ்பி பிளஸ் சலுகை நிவாரணம் நிறுத்தப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஜிஎஸ்பி பிளஸ் சலுகை மீள்பரிசீலனை செய்யப்படும் இந்த வருடம் நவம்பரில் இலங்கையின் மனித உரிமைகள் பதிவை ஐரோப்பிய ஒன்றியம் பரிசீலனை செய்யும்.



மனித மற்றும் தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச ஏற்பாடு மஹிந்த ராஜபக்ச நிர்வாகத்தால் செயல்படுத்தப்படாததால், பெப்ரவரி 2010 இல் முன்னுரிமை வரி சலுகையான ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை இடைநிறுத்தப்பட்டதோடு, நல்லாட்சி அரசாங்கம் இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான 27 சர்வதேச உறுதிமொழிகளை அமுல்படுத்தும் என்ற நம்பிக்கையில் 2017 மே மாதம் மீண்டும் வழங்கப்பட்டது.

(_14_ பக்கம் தொடர்ச்சி)

----------

## திருந்தாத படையினரும், திருத்த விரும்பாத அரசும்

- சிவா பரமேஸ்வரன்

----------

இதே போன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் பெற்றோல் நிலையத்தில் தமது இருசக்கர வாகனத்திற்கு பெற்றோல் நிரப்பிவிட்டு வீட்டிற்கு வந்துகொண்டிருந்த மகேந்திரன் சகோதரர்கள் பொலாரின் துப்பாக்கியால் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டு கண்ணில் அறுவை சிகிச்சை செய்த பிறகு தையல்களுடன் மருத்துவமனையில் உள்ளனர்.

கடந்த ஞாயிறு (செப்டம்பர் 5) அன்று இச்சம்பவம் இடம்பெற்றது. ஊரடங்கு காலத்தில் அவர் வாகனத்திற்கு பெற்றோல் நிரப்பச் சென்றது தொடர்பில் பொலிசார் மிகுந்த கோபமடைந்து அவர்களைத் தாக்கியதாக உள்ளூர்வாசிகள் கூறியுள்ளனர்.

இன்னும் கட்டுப்படுத்த முடியாத கொரோனா தொற்றை கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ள இராணுவத்தினரும் அவர்களுடன் இணைந்து செயற்படும் பொலிசாரும் தமது அதிகார வரம்புகள் மற்றும் சட்டத்திற்கு புறம்பான வகையில் நடந்து கொள்கின்றனர் எனும் குற்றச்சாட்டிற்கு தொடர்ந்து ஆளாகி வருகின்றனர்.

அதே நாளன்று கொக்குவில் பகுதியைச் சேர்ந்த ஜோசஃப் மதன் என்பவரும் தனிப்பிட்ட பிரச்சனை ஒன்றின் காரணமாக பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டு மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

மனித உரிமைகள் மீறல் மற்றும் கடும் தவறுகளைச் செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தாமல் இருப்பது, பாதுகாப்பு படையினரை உயர் பதவிகளில் அமர்த்துவது போன்ற பல விடயங்கள் தொடர்பில் பன்னாட்டின் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியிருக்கும் இலங்கை அரசு தொடர்ந்து இப்படியான செயல்களில் ஈடுபட்டு வருவது பல நெருக்கடிகளை ஏற்படுத்தி ஜி எஸ் பீ போன்ற வரிச் சலுகைகளை இழக்கச் செய்யும்.

இலங்கை குறித்த விவாதம் மீண்டும் ஐ நா மனித உரிமைகள் பேரவையில் வரவுள்ள நிலையில் ஐ டி ஜே பியின் ஆய்வறிக்கை வந்துள்ளது.

உணவுத் தட்டுப்பாடு, பற்றாக்குறை, விண்ணைத் தொடும் விலை ஆகியவற்றால் அவதியுறும் நாட்டில், நீதி, நேர்மை, மனித உரிமைகள் என்பவை எட்டாக்கனியும் கானல் நீருமாக மட்டுமே இருக்கிறது.


RE-ELECT
GARY
ANANDASANGAREE
SCARBOROUGH-ROUGE PARK
647-910-GARY (4279)
VoteForGary.ca
Info@VoteForGary.ca
Liberal
FORWARD. FOR EVERYONE.
65+
ஒரு நாளுக்கு $10 சிறுவர் பராமரிப்பு
மேலும் பலமான அனைவருக்குமான சுகாதாரப் பராமரிப்பு
மலிவானதும், அணுகக்கூடியதுமான வீடமைப்பு
முதியோருக்கு ஆதிகரித்த ஆதரவு
கோவிட்-19 உதவி நடவடிக்கைகளும் மீட்சித் திட்டமும்
வாக்களிப்பதற்கான வழிகள்
SEP 20
SEP 10,11,12 & 13
IN-PERSON
தேர்தல் நாள்
செப்ரெம்பர் 20
காலை 9:30 முதல்
இரவு 9:30 வரை
முற்கூட்டிய வாக்களிப்பு
செப்ரெம்பர் 10, 11, 12, 13
காலை 9 முதல்
இரவு 9 வரை
நேரில்
Elections Canadaவில்
செப்ரெம்பர் 14 ஆந் திகதி
மாலை 6 மணிக்கு முன்பாக
மேலதிக தகவல்களுக்கு Elections.ca யைப் பார்வையிடுங்கள்.
Authorized by the Official Agent for Gary Anandasangaree

சினிமா

# இலங்கை தமிழர்களுக்காக இதயத்தை உருக்கும் பாடலை எழுதிய கவிஞர் தாமரை



ஈழத்தமிழர்களின் வலியையும் வாழ்க்கையையும் சொல்லும் விதமாக அவ்வப்போது சில படங்கள் வெளியாகின்றன அந்த வகையில் அப்பா, மகள் பாசப்பின்னணியில் இலங்கை போரின் கோரதாண்டாவத்தை எடுத்துக்கூறும் படமாக உருவாகி இருக்கும் திரைப்படம் தான் "தாய்நிலம்" நேமி புரொடக்ஷன்ஸ் சார்பில் டாக்டர் அமர் ராமசந்திரன் தயாரித்துள்ள இந்த படத்தை அபிலாஷ் ஜி தேவன் இயக்கியுள்ளார்.

ரஷ்யா, ஸ்வீடன், டொராண்டோ உட்பட இதுவரை பதினோன்று சர்வதேச திரைப்பட விழாக்காளில் தேர்வான இத்திரைப்படம் பல பிரிவுகளில் எட்டு விருதுகளை வென்றிருக்கிறது.

தேசிய விருதுபெற்ற பிரபல மலையாள இசை அமைப்பாளர் திரு. அவுசப்பச்சன் இந்த படத்திற்கு இசை அமைத்திருக்கிறார்.

இத்திரைப்படத்தில் கவிஞர் தாமரை எழுதி வர்ஷா இரஞ்சித் பாடியுள்ள "ஆகாயம் மேலே" என்ற பாடல் இலங்கை தமிழ் மக்களின் இழப்புகளையும், வலியையும் அனாதையாக தவிக்கும் மக்களின் வாழ்க்கையையும் கூறும் விதத்தில் அமைந்திருக்கிறது.

கேட்பவர்களில் மனதில் ஆழமாக பதிந்துவிடும் வகையில் அமைந்திருக்கும் இந்தப் பாடல் வெள்ளிக்கிழமை (3) அன்று சரிகம தமிழ் குழுமத்தின் யூட்யூப் பக்கத்தின் வாயிலாக வெளியிடப்படுகிறது.

அனைவராலும் நிச்சயம் பாராட்டப்படும் இந்தப் பாடல் இந்தவருடத்தின் ஒரு மாபெரும் வெற்றிப்பாடலாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

**மக்கள் தொடர்பு: ஜான்**

# மறைந்த ஜெயலலிதாவின் வாழ்வைச் சித்தரிக்கும் தலைவி திரைப்படம் செப்டெம்பர் 10 இல் வெண்திரைக்கு வருகின்றது



எதிர்வரும் செப்டம்பர் 10ம் திகதி திரைகளுக்கு வரவுள்ள தலைவி திரைப்படத்தின் வெளியீட்டை முன்னிட்டு இந்தி நடிகை கங்கனா ரனாவத் ஜெயலலிதா, எம்ஜிஆர் மற்றும் கருணாநிதி நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

ஜெயலலிதாவின் கதை சொல்லும் திரைப்படம் என்பதால் வெறும் ஜெயலலிதாவுக்கு மட்டும் மரியாதை செலுத்தி விடாமல், சென்னை மெரினா கடற்கரையில் உள்ள மறைந்த தமிழக முதல்வர்களான எம்ஜிஆர் மற்றும் கருணாநிதியின் நினைவிடங்களுக்கும் சென்று நடிகை கங்கனா ரனாவத் மரியாதை செலுத்தியுள்ளமை தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன.

இன்று 4ம் திகதி சென்னை மெரினா கடற்கரைக்குச் சென்ற அவர் மற்றும் படத்தின் இயக்குனர் ஏ.எல். விஜய் ஆகியோர் குறித்த நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

மதராசப்பட்டினம், தெய்வத் திருமகள், தாண்டவம் உள்ளிட்ட பல படங்களை இயக்கிய இயக்குநர் ஏ.எல். விஜய் இயக்கத்தில் ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாறு படமாக தலைவி உருவாகி உள்ளது. இந்த படத்தில் மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா வேடத்தில் பிரபல பொலிவூட் நடிகை கங்கனா ரனாவத் நடித்துள்ளார்.



மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா வாழ்க்கையை மையமாக வைத்து தயாராகி உள்ள திரைப்படம் தலைவி. இந்த படத்தில் ஜெயலலிதா வேடத்தில் கங்கனா ரனாவத்தும், எம்.ஜி.ஆர். வேடத்தில் அரவிந்தசாமியும் நடித்துள்ளனர். தலைவி படத்துக்கு ரசிகர்கள் மத்தியிலும், அரசியல் வட்டாரத்திலும் பெரிய எதிர்பார்ப்பு உள்ளது. இந்த படத்தில் ஜெயலலிதாவின் சினிமா வாழ்க்கை, எம்.ஜி.ஆர். மறைவுக்கு பிறகு பல்வேறு தடைகளை கடந்து முதலமைச்சராவது வரை உள்ள காட்சிகள் இடம்பெற்று உள்ளது. ஆர்.எம். வீரப்பனாக சமுத்திரக்கனி, எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகி கதாபாத்திரத்தில் மதுபாலா, சசிகலாவாக பூர்ணா ஆகியோரும் நடித்துள்ளனர். படத்தை விஜய் இயக்கி உள்ளார். ஜெயலலிதா வாழ்க்கை வரலாற்றை சுற்றி மேலும் சில படங்களும் வெப்சீரிஸ்களும் உருவாகி வருவது குறிப்பிடத்தக்கது. இப்படத்திற்கு பிள்ளையார் சுழி போட்டு மீண்டும் தமிழ் சினிமாவில் புதிய படங்களை தியேட்டர்களில் வெளியிட சினிமா துறையினர் முடிவு செய்துள்ளனர். வரும் வெள்ளி செப்டம்பர் 10ஆம் திகதி விநாயகர் சதுர்த்தி பண்டிகையை முன்னிட்டு கங்கனா ரனாவத் நடித்துள்ள தலைவி திரைப்படம் திரையரங்குகளில் வெளியாக உள்ளது.



# கங்கை அமரனை மிரட்டி சசிகலா வாங்கிய "பையனூர் பங்களா" முடக்கம்!

## இதுவரை ரூ.2 ஆயிரம் கோடி சொத்துகள் பறிமுதல்

சொத்துக்குவிப்பு வழக்கில் பெங்களூரு சிறையில் 4 ஆண்டு தண்டனை அனுபவித்த நிலையில், கடந்த 2017 ஆம் ஆண்டு சசிகலாவுக்கும், அவருடைய குடும்பத்தினருக்கும் சொந்தமான 187 இடங்களில் வருமான வரித்துறையினர் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது பணமதிப்பிழப்பு நடவடிக்கையை பயன்படுத்தி, பல கோடி ரூபாயை முறைகேடாக மாற்றி பினாமி பெயரில் 1600 கோடி ரூபாய் வரை சசிகலா சொத்துகள் வாங்கிக் குவித்தது தெரியவந்தது. பல கோடி வரி ஏய்ப்பு செய்ததும் தெரியவந்தது.

சென்னையில் உள்ள ஜாஸ் சினிமாஸ், ஸ்பெக்ட்ரம் மால், கங்கா சினிமாஸ் உட்பட 10 நிறுவனங்கள் பினாமி பெயரில் வாங்கப்பட்டது தெரியவந்ததையடுத்து சுமார் 1600 கோடி ரூபாய் சொத்துகளை வருமான வரித்துறையினர் முடக்கினர்.

தொடர்ந்து நடந்த விசாரணையில் 2003-2005 ஆம் ஆண்டு காலகட்டத்தில் 65 நிறுவனங்கள் முறைகேடாக வாங்கப்பட்டது தெரியவந்தது. இதனடிப்படையில் பினாமி பெயரில் வாங்கப்பட்ட ஐதராபாத்தில் உள்ள ஸ்ரீ ஹரிசந்தனா எஸ்டேட்ஸ், சென்னை போயஸ் கார்டனில் உள்ள 10 கிரவுண்ட் நிலம் என மொத்தம் 300 கோடி ரூபாய் சொத்துகளை வாங்கியது கண்டுபிடிக்கப்பட்டு பினாமி தடுப்பு சட்டத்தின் கீழ் வருமான வரித்துறையினர் முடக்கினர்.

இந்த நிலையில் தற்போது செங்கல்பட்டு மாவட்டம் பையனூர் பகுதியில் 49 ஏக்கரில் அமைந்துள்ள 100 கோடி பங்களாவையும் வருமான வரித்துறையினர் முடக்கி உள்ளனர்.

பங்களா முடக்கப்பட்டதற்கான 10 பக்கங்கள் கொண்ட நோட்டீஸை வருமான வரித்துறையினர் பங்களா முகப்பில் ஒட்டிச் சென்றனர். இதையும் சேர்த்து, இதுவரை சசிகலாவிற்கு சொந்தமான 2000 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகளை வருமான வரித்துறையினர் முடக்கி இருக்கின்றனர்.

தற்போது முடக்கப்பட்டுள்ள பையனூர் பங்களா, இசையமைப்பாளர் கங்கை அமரனுக்குச் சொந்தமாக இருந்தது. ஜெயலலிதா ஆட்சியில் தன்னை மிரட்டி அந்த பங்களா வாங்கப்பட்டதாக கங்கை அமரன் புகார் அளித்து, அதுதொடர்பாக விசாரணை நடந்தது குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையில் வட மாகாணத்தில் கடந்த வாரத்தில் 4083 பேருக்கு தொற்று — 106 பேர் உயிரிழப்பு!

வடக்கு மாகாணத்தில் கடந்த ஒரு வாரத்தில் 4 ஆயிரத்து 83 கோவிட்-19 நோய்த் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், 106 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரத் துறையின் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. அதன் மூலம் வடக்கு மாகாணத்தில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 515 ஆக உயர்வடைந்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் நேற்று செப்ரெம்பர் 7ஆம் திகதி 569 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். அவர்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 246 பேரும் வவுனியாவில் 160 பேரும் கிளிநொச்சியில் 99 பேரும் முல்லைத்தீவில் 39 பேரும் மன்னாரில் 31 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மாகாணத்தில் நேற்றைய தினம் 22 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தனர். வவுனியா மாவட்டத்தில் மட்டும் 16 பேர் நேற்று உயிரிழந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் 5 பேரும் முல்லைத்தீவில் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

செப்ரெம்பர் மாதத்தின் முதல் ஏழு நாள்களில் வடக்கு மாகாணத்தில் 4 ஆயிரத்து 83 கோவிட்-19 நோய்த் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், 106 பேர் உயிரிழந்துள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆயிரத்து 724 தொற்றாளர்களும் வவுனியாவில் ஆயிரத்து 56 தொற்றாளர்களும் கிளிநொச்சியில் 889 தொற்றாளர்களும் முல்லைத்தீவில் 275 தொற்றாளர்களும் மன்னாரில் 139 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு வாரத்தில் வவுனியா மாவட்டத்தில் 45 பேரும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 43 பேரும் கிளிநொச்சியில் 9 பேரும் முல்லைத்தீவில் 8 பேரும் மன்னாரில் ஒருவரும் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர். வடக்கு மாகாணத்தில் 2020 மார்ச் தொடக்கம் டிசெம்பர் வரை வவுனியா மாவட்டத்தில் ஒருவர் மட்டுமே கோவிட்-19 நோயினால் உயிரிழந்தார். எனினும் நேற்று செப்ரம்பர் 7ஆம் திகதிவரை 515 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர். ஓகஸ்ட் மாதத்தில் அதிகப்படியாக 228 பேர் உயிரிழந்துள்ளனர்.



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகப்படியாக 303 பேரும் வவுனியா மாவட்டத்தில் 119 பேரும் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர். கிளிநொச்சியில் 45 பேரும் முல்லைத்தீவில் 28 பேரும் மன்னாரில் 20 பேரும் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் நேற்றுவரை 30 ஆயிரத்து 912 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 ஆயிரத்து 474 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 6 ஆயிரத்து 635 பேரும் வவுனியா மாவட்டத்தில் 5 ஆயிரத்து 788 பேரும் முல்லைத்தீவில் 2 ஆயிரத்து 192 பேரும் மன்னாரில் ஆயிரத்து 823 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

(08-09-2021)


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
தற்போது கனடா ஸ்காபுறோ நகரில் சங்கர் அன்கோவில் தாராளமாகக் கிடைக்கின்றன. இங்கே படத்தில் காணப்படும் அவசியமான உபகரணங்களும் உணவுப் பதார்த்தங்களும்.....
மிக மலிவு விலைகளில்... ஆச்சி மசாலா தயாரிப்புக்கள்...
தமிழ்நாட்டின் MTR தயாரிப்புக்கள்... அம்மியும் குழவியும் (கல்லினால் ஆனது)...
இந்தியாவின் VIDIEM சக்தி வாய்ந்த கிறைன்டர்கள்...
இந்தியாவின் Sumeet கிறைன்டர்கள் பல அளவுகளில்
அனைத்தும் கிடைக்கின்றன...
Sumeet
Gulab Jamun
Dosa
Aachi
LEMON RICE POWDER
GARAM MASALA
Vidiem
ABC
123
Mini Library
Fair & Lovely
NESCAFE Sunrise
MAHANARAYAN TAILA
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# கடந்தவையும் கடப்பவையும் (1)

உமா மோகன்

ஊரடங்கு நாளாம் அன்று
ஊறணிக்கு நடந்தே சென்று
அன்னை அவள் பெற்றெடுத்தாள்
என்னை அன்று

பாட்டிமார் இருவரும் - என்னை
கூட்டி வைத்துச் சொன்ன கதை - என்
நினைவுக்கு வந்ததின்று

நிலையில்லா வாழ்வு என்றும்
நிலைக்காது என்றுணர்ந்து
சித்தர்கள் சொன்னகதை
சித்தார்த்தன் சென்ற கதை

எல்லாமும் படித்த பின்பும் - பார்
நில்லாதாம் ஓரிடத்தில் என்மனது
கவசங்கள் அணிந்தேனும்
கவனமாய் இருக்க வேனும்

என்பதே குறிக்கோள் இன்று.
முன்பே பல தடவை மூச்சுப்போய் வந்த கதை
எனக்குள்ளும் பலவுண்டு - ஆனாலும்
மனக்கண்முன் அவையாவும் வந்த போதும்

மூக்கை மூடி ஒருநாளும் வாழ்ந்ததில்லை அந்நாளில் - ஆனால்
ஏக்கத்துடன் வாழ்ந்ததுண்டு

எழுபத்து ஏழுகளில் இம்பிலுப்பட்டியவில்
பள பள கத்திகளைப் பக்கத்தில் பார்த்த போது
பால்வடிந்த முகம் அன்று படபடப்பில் வேர்த்ததுண்டு

கதிரேசன் கோவிலுக்குள் கூக்குரல் கேட்டபோது
திகிலடைந்தேன் - எனினும்
திடமாகப் பற்றிய கை துணிவைத்தான் தந்தது அன்று

வாட்டம் வேண்டாம் வீடு போவோம் என - பாதுகாப்பு
நோட்டம் கொண்ட புகைவண்டி
கூட்டி வந்து சேர்த்ததெம்மை

காங்கேசன் துறைவரை
பாங்குடனே ஒரு வாழ்வை வாழ்ந்து வந்த அவ்வேளை
பாரபட்சம் தலைதூக்க - எம்
வேங்கைபளின் விளையாட்டு தொடங்கியது பின் நாளில்.

கிப் சறமும் டாங்டாங் சேட்டும்
ஏசியா சைக்கிளும் ஏ கே (f)போட்டி செவுனும்
கையில் குண்டுகளும் சில சமயம்
மோட்டார் வண்டிகளும்

கழுத்தில் கறுத்தக் கயிறும் அதில் தொங்கும்
வெள்ளைக் குப்பியும் எண்டு
ஆரம்பத்தில் அவர் தோற்றம் கண்டு
ஆரவாரித்தோர் பலரும் உண்டு

கந்தன் என்றும் வீமன் என்றும் புனைபெயர்கள் பலவும் கொண்டு
சொந்தம் விட்டு புறப்பட்டோர் - அன்று
விந்தையாகவே தெரிந்தனர் எமக்கு - அவர்கள்

அம்மாக்களுடன் கூடப் பிறக்கவில்லை எனினும்
மாமாமார் ஆயினர்
எம்முடனும் உடன் பிறக்கவில்லை - ஆயினும்
நம் அண்ணன்களும் ஆயினர் - அன்று அவர்கள்

உள்ளங்களும் தூய்மை அவர்கள் வாழ்ந்த
இல்லங்களோ தூய்மையிலும் தூய்மை - அவர்கள்
புறம் கூறும் போர் முறையை
அறத்துடன் கைக் கொண்டவர்கள்

ஆவேசப் போர்முறையை
அகிலம் காண வைத்தவர்கள்

வஞ்சிப்போர்,
பிறர்நாட்டைப் பிடிப்பதற்கே அப்போர் - அன்று
வஞ்சகமாய் வந்தவரை வழிமறித்து அவர்
அஞ்சும்படி குண்டுகளை வீசிவிட்டு ஓடினரே எம்மவர் - அந் நிகழ்வுகளோ

நெஞ்சங்களைப் பதறவைக்க- மீண்டும்
அஞ்சி வாழும் படபடப்புத் தொடங்கிவிடும் - பின்
எறியும் குண்டுகள் படிப்படியாய்
அழுத்தும் குண்டுகள் ஆனபோது
அங்கு நாம் பட்ட துயரோ ஏராளம்.......

(தொடரும்)

# கொரோனா தடுப்பூசி விஷயத்தில் ஏழை நாடுகளை கைவிடும் பணக்கார நாடுகள்!

## உலக சுகாதார அமைப்பு வருத்தம்




கோவிட்-19 எனப்படும் கொரோனா தொற்றில் இருந்து நாடுகள் பலவும் தடுப்பூசி என்னும் பேராயுதம் கொண்டு, தங்கள் மக்களை தற்காத்து வருகின்றன.

எனினும், கொ-ரோனாவின் அடுத்தடுத்த திரிபுகளால் உலகமே ஒருவித நடுக்கத்துடன் தான் அடுத்த கட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. அவற்றில் ஒன்று தான், முதலிரு தவணைகளை அடுத்து 3-வதாகப் போடப்படும் பூஸ்டர் டோஸ் தடுப்பூசி.

ஆனால், பணக்கார நாடுகள் தங்கள் மக்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி போட அனுமதிக்கக் கூடாது என்று உலக சுகாதார நிறுவனம் கேட்டுக் கொண்ட நிலையில், இஸ்ரேல், இங்கிலாந்து, டென்மார்க், பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்பெயின், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு இரண்டு டோஸ் தடுப்பூசி போட்டு முடித்துவிட்டு, மூன்றாவது டோஸ் போடுவதற்கான திட்டங்களைத் தொடங்கியுள்ளன.

இது உலக சுகாதார அமைப்புக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதுபற்றி, உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ், ஜெனீவாவில் பத்திரிகையாளர்களிடம் கூறியதாவது:

"ஒவ்வொரு நாடும் அதன் மக்கள் தொகையில் குறைந்தது 40 சதவீதம் அளவிற்கு கொரோனா தடுப்பூசி போட்ட பின்னரே "பூஸ்டர்" தடுப்பூசி போடுதல் குறித்து முடிவெடுக்க வேண்டும். அதுவரை பூஸ்டர் தடுப்பூசியை போட அனுமதிக்கக் கூடாது.

உலக அளவில் பல்வேறு மருந்து நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட 5.5 பில்லியன் (550 கோடி) தடுப்பூசி டோஸ்களில் சுமார் 80 சதவீ-தம் பணக்கார நாடுகளுக்கே சென்றுள்ளது. எனவே, 2022-ம் ஆண்டு வரை பூஸ்டர் தடுப்பூசிகள் போடும் திட்டத்தை பணக்கார நாடுகள் தவிர்க்க வேண்டும்.



உலகின் பல ஏழை நாடுகளுக்கு இன்னும் தடுப்பூசி சென்று சேரவில்லை. குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளிலும் தடுப்பூசி பற்றாக்குறை உள்ளது.

சர்வதேச மருந்து உற்பத்தியாளர் சங்கங்களின் கூட்டமைப்பானது மாதத்திற்கு சுமார் 1.5 பில்லியன் (150 கோடி) கொரோனா தடுப்பூசிகளை உற்பத்தி செய்வதைக் கேள்விப்பட்டு திகைத்துப் போனேன்.

தடுப்பூசி உற்பத்தியாளர்களும், பணக்கார நாடுகளும் தங்கள் மக்களுக்கு தடுப்பூசி போடுவது மட்டுமல்லாமல், மற்ற நாடுகளுக்கும் தடுப்பூசி விநியோகம் செய்வதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஏழை நாடுகளுக்கு தடுப்பூசிகளை வழங்கும் "கோவாக்ஸ்" எனப்படும் உலகளாவிய திட்டத்தின்கீழ், சர்வதேச அமைப்புகள், இந்த ஆண்டு அவற்றின் முந்தைய இலக்கான 200 கோடி டோஸ்களில் இருந்து கிட்டத்தட்ட 30 சதவிகிதம் அளவிற்கு குறைத்துள்ளது வேதனை தருகிறது".

இவ்வாறு டெட்ரோஸ் அதானோம் கூறினார்.

- மணிராஜ், திருநெல்வேலி

# இவ்வார ராசிபலன்

**10-09-2021 வெள்ளி தொடக்கம் 16-09-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** வாய்ப்புகள் பெருகும். நினைத்த காரியம் நிறைவேறும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். பூமி வாங்கும் யோகம் உண்டு. எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். திருமண வாய்ப்பு கூடும். நல்லவர் நட்பு கிட்டும். எதிரிகள் பலம் குறையும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். உதவும் குணம் அதிகரிக்கும். பழையக் கடன் தீரும். தொலைபேசி தகவல் தொல்லைத் தரும். விநாயகர் வழிபாட்டால் வீண்பழி அகலும். *அதிர்ஷ்ட எண்: 7,9,0,1*
*அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* D,Q




**ரிஷபம்:** நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். ஆடம்பர பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். காரியம் கைகூடும். செல்வச் செழிப்பு உயரும். விவேகம் கை கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். அற்புதங்கள் நிகழும். லஷ்மி கடாட்ஷம் பெருகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். பாத விநாயகர் வழிபாடு பாவம் போக்கும்.
*அதிர்ஷ்ட எண்: 0,3,7,2*
*அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* I,Z




**மிதுனம்:** வி.ஐ.பி.யின் தொடர்பு கிட்டும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். திடீர் செலவு ஏற்படும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும். பயணத்தில் கவனம் தேவை. மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து போகும். வங்கி சேமிப்பு உயரும். குபேர வழிபாடு மேன்மை தரும்.
*அதிர்ஷ்ட எண்: 8*
*அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* E,V




**கடகம்:** சோம்பல் அதிகரிக்கும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. அலைபேசி தகவல் ஆதாயம் தரும். பயணம் வெற்றி தரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். குல தெய்வ வழிபாடு நன்மை தரும்.
*அதிர்ஷ்ட எண்: 4,7,8,2*
*அதிர்ஷ்ட நிறம், வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* U,L




**சிம்மம்:** இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. நட்டமில்லாத நன்மை. மெத்தனப் போக்கு மாறும். சுய தொழில் வாய்ப்பு அமையும். சுபசெய்தி வரும். சந்தர்பங்கள் சாதகமாக அமையும். தீப வழிபாடு தீமை அகற்றும்.
*அதிர்ஷ்ட எண்: 2,1,0,0*
*அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* T,D




**கன்னி:** பழையக் கடன் வசூலாகும். பூர்வீக சொத்து கிடைக்கும். ஸ்டேஷ்னரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, ஆணிகலன்கள் சேரும். மனச் சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பழைய கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும்.மருத்துவ செலவு அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். அம்பிகை வழிபாடு ஆறுதல் தரும்.
*அதிர்ஷ்ட எண்: 8,4,1,6*
*அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* M,B




**துலாம்:** மனநிறைவு உண்டாகும். மனைவியால் மருத்துவச் செலவு ஏற்படும். வினோதமான எண்ணங்கள் விலகும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். புதிய முயற்சிகள் பலன்தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டிவரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். சட்டம் சாதகமாகும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். பஞ்சபூத வழிபாட்டால் பணவரவு உண்டு.
*அதிர்ஷ்ட எண்: 5,3,9,1*
*அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* R,G




**விருச்சிகம்:** கற்பனை வளம் கூடும். கௌரவம் உயரும். புதிய முதலீடு செய்வார்கள். கமிஷன் தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்த்துகிட்டும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை கூடும். முயற்சிகள் வற்றி தரும். காதல் கைகூடும். விவாக முயற்சி வெற்றி தரும். போட்டிகள் மறையும். நந்தி வழிபாட்டால் நல்லோர் வாழ்த்து கிட்டும்.
*அதிர்ஷ்ட எண்: 1,4,7,3*
*அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* S,F




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: **0091-9840160068**
**9940431377**





**தனுசு:** சிறப்புக்கள் சேரும் நாள். நல்லோர்களின் நட்பு கிட்டும். விடா முயற்சி அவசியம். புதிய முதலீடு தவிர்க்கவும். சுபச் செலவு அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். வேலைபளு அதிகரிக்கும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதை நீங்கும். வியாபாரத்தடை ஏற்படும். பங்குச் சந்தை லாபம் தரும். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும்.
*அதிர்ஷ்ட எண்: 2,5,1,9*
*அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* R,D




**மகரம்:** சேமிப்பு உயரும். நோய் நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். வீண் வம்புகள் அகலும். வழக்குகள் வெற்றி தரும். விபரீத எண்ணங்கள் விலகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும்.சச்சரவுகள் அகலும் நாள். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. உறவினர்கள் வருகை உண்டு. உத்தியோகத்தில் கவனம் தேவை. வாய்ப்பேச்சில் நிதானம் தேவை.வருமானம் உயரும் கடவுள் பிராத்தனை கை கொடுக்கும்.
*அதிர்ஷ்ட எண்: 9, 7, 1, 0*
*அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* O,N




**கும்பம்:** மனைவியால் அமைதி கெடும். முக்கிய எண்ணம் நிறைவேறும். உடன் பிறந்தோரால் உதவி கிடைக்கும். பொருளாதார வளர்ச்சி உண்டு. ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டு. சுபக்காரியச் செய்தி வரும். வேலை திறன் அதிகரிக்கும். தொழில் மாற்றம் ஏற்படும். சோதனைகள் நீங்கும். தொலை பேசி தகவல் நல்ல செய்தி தரும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் தேடி வரும். மனம் மகிழும் நாளாக அமையும். உள்ளம் பூரிப்படையும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும்.
*அதிர்ஷ்ட எண்: 0,7,3,2*
*அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* P,E




**மீனம்:** மேலதிகாரியின் ஆதரவு உண்டு. குடும்பத்தில் சஞ்சலம் உண்டு. தனவரவில் தாமதம் உண்டு. தகுதியில் மேன்மை உண்டு. ஏற்றுமதி தொழிலில் நல்ல முன்னேற்றம் உண்டு. கனவு தொல்லை உண்டு. காதலால் மகிழ்ச்சி உண்டு. மங்களமான நாள். வீண் பேச்சை தவிர்க்கவும். பெரியோர்களின் ஆசி கிடைக்கும். உடல் நலத்தில் அக்கறை தேவை. கவலைகள் குறையும். கல்வியில் ஏற்றம் உண்டு.கணபதி வழிபாட்டால் காரியம் கை கூடும்.
*அதிர்ஷ்ட எண்: 2,5,7,3*
*அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* S,Z

----------------------------------------

**வீணாவின் கவிக்கணை**

உறவென்று
தமிழ் சொல்லொன்று
இருந்தது போல் நினைவு,
என்று நம் சந்ததிகள்
சொல்லும் காலமும்
வந்திடுமோ இங்கு,
உறவுகளை கண்டதும்
துள்ளிக்குதித்த காலமும்
எங்கே?
அவர்களை கட்டியணைத்து
முத்தமிட்ட காலமும்
எங்கே?
ஒரு தட்டில் அனைவரும்
உருண்டை சோறு
உண்ட காலமும்
எங்கே?
சொந்தத்தின் பலம் அறிய
இப்படிச்செய்தாயோ?
அல்லது,
தனிமை என்பதன்
அர்த்தத்தை தனித்தனியே
உணர்த்த வந்தாயோ
(கொரேனா) இங்கு?

# ஈழத்துத் திருக்கோவில்கள்



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## திருமங்கலாய் சிவன் கோவில்
### திருக்கரைசையம்பதி, திருகோணமலை

திருகோணமலை, திராவிட மக்களாகிய தமிழர்களின் தொன்மையான வாழ்விடமாக விளங்குகின்றது. இப்பிரதேசத்திலுள்ள கோவில்களுள் பலவும் மன்னர்களால் கட்டப்பட்டு மானியங்கள் வழங்கப்பட்டு சிறப்போடு பேணப்பட்டது. திருகோணமலையைச் சார்ந்த பல கிராமங்கள், தமிழ் மக்கள் மட்டுமே வாழ்ந்த கிராமங்களாகக் காணப்பட்டு, பேரினவாதிகளால் திட்டம்போட்டு தமிழர்களுடைய வாழ்விடங்கள் அழிக்கப்பட்டும், குடியேற்றத்திட்டங்களாக மாற்றப்பட்டும் வருவது கண்கூடு. இவ்வாறான பல சைவத்தமிழ் கிராமங்கள் தமிழ்மக்கள் வாழ்ந்த சுவடே தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசங்களில் காணப்பட்ட சைவக் கோவில்களும் குண்டுவீச்சுகளுக்கு இலக்காகி அழிந்துள்ளன.

தற்காலத்தில் நிகழும் இன அழிப்புப் போரின் காரணமாக சம்பூர், மூதூர், கொட்டியாரப்பற்று போன்ற கிராமங்களிலிருந்த தமிழ்மக்கள் வெளியேறியும், வெளியேற்றப்பட்டும் காணப்படுகின்றார்கள். இப்பிரதேசங்களிலுள்ள ஆலயங்கள் தீபமேற்றுவாரின்றி அழிவைநோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. குண்டு வீச்சுக்களின் காரணமாக திருகோணமலைக்கிராமங்களிலுள்ள ஆலயங்கள் அழிந்துள்ளன. எஞ்சிய ஆலயங்களிலும் தீபமேற்றும் சந்தர்ப்பம் இல்லாது மக்கள் வெளியேறியுள்ளனர். ஆலயங்களில் தீபமேற்றச் சந்தர்ப்பம் கிடைக்காத நாடு, நாளடைவில் துன்பத்தைநோக்கிச் சென்று, காலகதியில் அழிந்து சின்னாபின்னமாவிடும் என ஆன்றோர் கூறியுள்ளனர். இவ்வாறான ஒரு நிலையை இன்று ஈழம் எதிர்நோக்கியுள்ளது.

திருகோணமலையைச் சார்ந்துள்ள கிராமங்களின் பெயர்களை நோக்கும்போது அரிய தமிழ்ப்பெயர்களைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. திருமங்கலாய் என்பதிலுள்ள திருமங்கலம் என்பது, அரசர்களோடு தொடர்புடைய சொற்பதமாகவும், மங்கலம் என்பது சிவனைக் குறிப்பதாகவும் காணப்படுகின்றது. அரசர்களால் அமைக்கப்பட்ட சிவன்கோவில் இருந்த இடத்திற்கு திருமங்கலாய் என்ற காரணப் பெயர் ஏற்பட்டிருக்கலாமோவென்ற எண்ணமும், அதன் பெயர் அமைவும் வியப்பளிப்பதாகக் காணப்படுகின்றது.

திருமங்கலாய் சிவன்கோவில் அமைந்துள்ள கொட்டியாரப்பற்றிலுள்ள கிராமங்களின் சரித்திரப்பின்னணிகளையும், அங்கேயிருந்து அழிந்துபோன ஆலயங்களின வரலாறுகளை ஆராயும்போது, திருக்கரைசையம்பதியை மத்திய ஸ்தானமாகக் கொண்ட ஒரு சைவசாம்ராச்சியமே இங்கிருந்து கோலோச்சி மறைந்துவிட்டதைக் காணமுடியும்.

திருமங்கலாய் சிவன்கோவிலின் அமைவு இதற்கொரு சான்றாகக் காணப்படுகின்றது. கிளிவெட்டியிலிருந்து திருமங்கலாய்க்குப் போகும் மார்க்கத்தில் நாலு கிலோமீற்றர் தூரத்தில் காட்டுப்பாதையினூடாக இக்கோவில் காணப்படுகின்றது. தற்போது இந்த ஆலயம் பெரும்பாலும் அழிந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் கர்ப்பக்கிரகம் சிதைந்துள்ளது. அர்த்தமண்டபம் சிதைந்தநிலையில் பாதுகாக்கப் பட்டுள்ளது. மகாமண்டபமும் மற்றும் ஆலயக் கட்டிடங்களும் அத்திவாரமட்டத்தில் சிதைந்து மண்ணில் மறைந்து கிடக்கின்றன. இவ்வாலயத்தின் அத்திவாரத்தை நோக்கும்போது, பெரும் கருங்கற்களால் அமைக்கப்பட்டுக் காணப்படுகின்றது. இக்கோவிலின் கட்டிட அமைப்பு முறையை ஆராயுமிடத்த, இவ்விடத்திலே மிகப் பெருங்கோவிலொன்று காணப்பட்டு அழிந்தமைக்கான சுவடுகள் காணப்படுகின்றன.

இக்கோவில் மூர்த்தி, தலம், தீர்த்தம் அனைத்தும் கொண்டு அமைந்திருந்ததோடு, இவ்வாலயம் சிறப்பான நிலையில் இருந்தமைக்கான சான்றாக, இவ்வாலயத்திற்கான தலபுராணம் காணப்படுகின்றது. தலபுராணம் பாடப்பட்ட ஆலயங்கள் பிரசித்தியும், மகத்துவமும் பெற்ற ஆலயங்களாகவே காணப்பட்டுள்ளன. இவ்வாறான சிறப்புக்களைக் கொண்ட இவ்வாலயம், எவ்வாறு அழிந்ததென்பது இன்றுவரை கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது.

மிகப்பெரும் ஆலயங்கள் செல்வச் செழிப்போடு இருந்துள்ளன. இவ்வாறான ஆலயங்களைத் தேடிப்பிடித்த அந்நியர், அச்வாலயங்களைக் கொள்ளையடித்தும், அழித்ததுமான செயல்களை வரலாறுகளிலே காணலாம். இரு இனங்களுக்கிடையே காலங்காலமாக நடைபெறும் உள்நாட்டு யுத்தங்களும், இவ்வாறான பெருங்கோவில்களை இடித்தழிப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு விளங்கியுள்ளன.

தற்கால அரசியல் சூழ்நிலையும் இவ்வாறான இடங்களுக்குச் செல்வதை தடை செய்துள்ளன. இப்பிரதேசங்களிலே வாழ்ந்த மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வேறிடங்களுக்குச் செல்லும் சூழ்நிலை நிலவுகின்றது. ஐதீகக் கதைகளையும், வாய்மொழி வரலாறுகளையும் தம்முள் தேக்கிவைத்திருக்கும் பெரியவர்கள், காலவோட்டத்தில் மறைந்தும், மறந்தும் காணப்படுகின்றார்கள். இவ்வாறான சூழ்நிலையில் திருமங்கலாய் சிவன் கோவிலின் அழிவு, எவ்வாறு நிகழ்ந்தது என்பது இன்றுவரை கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது.

*வளரும்...*



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
ᵉroted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# செப்டம்பர் மாத எண்கணித பலன்கள்

## 4,13,22,31ஆம் தேதிகளில் பிறந்தவர்கள்

அனைத்தும் கற்றுத் தேர்ந்த, நாலும் தெரிந்த அவர்கள் தான் இந்த எண்ணினர். இவர்கள் உலகில் உட்பிரிவுகளாக இருக்கும் எல்லா துறைகளிலும் புகுந்து கலக்குபவர்கள் இவர்களே, இயற்கையின் பேரில் அளவில்லாத ஆர்வம் கொண்டவர்கள். வரலாற்று நாயகர்கள், அரசியலாக இருந்தாலும், ஆன்மிகமாக இருந்தாலும், லவுதீகமாக இருந்தாலும் சரி, பிரம்மர்சர்யமாக இருந்தாலும் இவர்களிடம் வாய்கொடுத்து வம்பளக்க முடியாத அளவிற்கு வகை, வகையாக தெரிந்து வைத்துக் கொண்டு மடக்கி விடும் வல்லமை கொண்டவர்கள். இந்த 4,13,22,31ஆம் திகதியில் பிறந்தவர்களுக்கும் D.T.M எழுத்தை முன் பகுதியாக பெயரில் கொண்டவர்களுக்கும், 4பெயர் எண் அமைந்தவர்களுக்கு இந்த மாதம் முழுக்க பிறர் சொல்வதை இவர்கள். ஃபாலோ பண்ண வேண்டிய கட்டாயத்தில் உள்ளதால் அடக்கி வாசிக்க வேண்டியது அவசியம் நீங்கள்.

**பொருளாதாரம்:** எதிர்பார்த்த அளவு பண பலன்கள் வருவதற்கு சற்று தாமதமாகலாம். புதிய முயற்சிகளில் ஏதேனும் சற்று குறைபாடுகள் ஏற்படலாம். இதை எல்லாம் நன்மைக்கே என எடுத்துக் கொள்ளவும். தவறினால் சட்டச் சிக்கல்களை சந்திக்க நேரிடும். கையிருப்புகள் கரைந்தாலும் தங்களின் கனிவான அனுகுமுறைகளால் வராத பாக்கிகள் கடை வந்து மகிழ்வூட்டும் உணவகங்கள், கலைத்துறையினர் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படுவதுடன், ஜாமீன கையொப்பங்கள் எவருக்கும் போட வேண்டாம் உஷார்.

**மங்கள நிகழ்வுகள்:** எடுத்த முயற்சிகள் எல்லாம் கிணற்றில் போட்ட கல் போன்ற உள்ளதே என எண்ணிக் கொண்டு இருந்த உங்களுக்கு, திமர் வெள்ளம் புகுந்தது போல புதிய வரன்கள் மடமடவென வரப்போகிறார்கள். தோவு செய்வதில் திக்கு, முக்காடிப் போவீர்கள்.

**உடல் நலம்:** மனோ பலமும், மகத்துவமான உடல் வலிமையும் உள்ள நீங்களே சோர்வுடைவது தேவையற்றது. முறையான பயிற்சிகள் மூலம் அருமையான உடல் நிலையை தக்கவைக்க முடியும் காலம் கடந்த உணவுகளால் வயிறு பிரச்சினைகள் வரலாம் உஷார், தாய், தந்தையார், குழந்தைகள் நலன்மிக நேர்த்தியாக உள்ளதை நினைத்து அக, மிக மகிழ்வு ஏற்படும். இதுவே புத்துணர்வு பெறுவதற்கு உறுதுணையாக அமைந்திடும்.

**தொழில் அதிபர்கள்:** கட்டுமான துறையினர் இரும்பு, சிமெண்ட், தயாரிப்பாளர்கள், வாகன உற்பத்தியாளர்கள் எதிர்பார்த்ததைவிட ஏகப்பட்ட வாய்ப்புக்களையும், வருவாயையும் அதிகமாக குவித்து மகிழ்வர். டெக்ஸ் டைல், மற்றும் நகை தயாரிப்போரும், அதிக பலன் பெறுவர். சினிமா தயாரிப்பாளர்கள், உணவக உரிமையாளர்கள் திடீரென ஏற்ற, இறக்கங்கள் சந்திக்க நேரிடும், ஆதலால் அவசரம் காட்டாமல் எதிலும் நிதானமாக செயல்படுவதே சிறப்பாகும்.

**வியாபாரிகள்:** விவசாய இடு பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், பெண்கள் அதிகம் பயன்படுத்தும் பொருட்கள் மூலம் வியாபார பெருக்கம் குறையலாம். சாலையோர வியாபாரிகள் தங்களின் வித்தைகளையெல்லாம் காண்பித்து பொருள் வரவுகளை பெற வேண்டிய நிலை ஏற்படும்.

**அரசியல்வாதிகள்:** தாங்கள் நினைத்தது போல நடக்கவில்லையே எனவும், மக்கள் செல்வாக்கு குறைகிறதே என்றும் மன இறுக்கம் பெற்றாலும் தொடர் முயற்சிகளால் நல்ல பயன்களுக்கு வழி பெறுவீர்கள். கூட இருப்பவர்களே குறிப்பார்த்துக் கொண்டிருப்பர். தலைமையிடம் வத்திவைக்க, எனவே யாரிடம் பேசினாலும் அளவுடன் பேசுக.

**கலைஞர்கள்:** எவ்வளவுத்தான் புதிய முறையில் செயல்பட்டாலும், அதற்கு முன்பே வேறொருவர் அதை செயல்படுத்தி பெயர் பெற்றுவிடுவர். எனவே தங்கள் உள்ள ஐடியாக்களை யாரிடமும் பகிர்ந்து கொள்ளாதீர்கள். வெளிநாட்டு முயற்சிகள் தண்ணீரில் எழுதியது போன்று கரைந்து போனாலும், உள்நாட்டிலேயே உயர்வுகள் காத்துக் கொண்டிருக்கிறது கவலை வேண்டாம் தொடர்ந்து செயல்படுங்கள்.

**பெண்கள்:** வீட்டில் உள்ள பெரியவர்களிடம் எவ்வளவுதான் இணக்கத்துடன் செயல்பட்டாலும் அதிலும் ஒரு குறைகாண்பதை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருப்பது தெரிகிறது. கோள்கள் தனது கடமையை செவ்வனே செய்வது போல், எதையும் எதிர்பாராமல் தங்கள் பணிகளை தொடருங்கள் பாராட்டுக்களும், அன்பும் நிச்சயம் கிடைக்கும் அவர்களிடமிருந்து.

**பணியாளர்கள்:** அரசாங்கள், மற்றும் தனியார் துறையினர் தங்களுக்கு வழங்கிய பணிகளை தரமாக செய்து அதிகாரிகளின் அன்பை பெறகூடுதல் முயற்சி எடுப்பதே நல்லது, ஏதேனும் பணி விசயமாக வெளியூர் சென்றால் பாதுகாப்புடன் செயல்படுதல் அவசியம், சக பணியாளர்களுக்கு ஏதேனும் ஜாமீன கையொப்பங்கள் போட்டால் கடும் அவதிகளை வருங்காலத்தில் சந்திக்க நேரிடும் உஷார். பெண் பணியாளர்களிடம் வாக்கு, வாதங்கள் வேண்டாம் அதனால் தங்கள் உள்ள அந்தஸ்து அடியோடு இறங்கலாம் கவனம்.

**மாணவர்கள்:** மருத்துவ துறையினர், பொறியாளர், ஆசிரியர், வாகனம் சம்பந்தமான கல்வியின் எல்லா வகையிலும் ஏற்றம் காண்பர், கம்யூட்டர், மற்றும் உணவக கல்வி படிப்போர் சக மாணவர்களுடன் ஏதேனும் மன வருத்தங்கள் ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்புள்ளது கவனத்துடன் செயல்படவும்.

## 5,14,23ஆம் தேதிகளில் பிறந்தவர்கள்

நிகரற்ற வல்லமையும் எதிலும் தளராத லட்சியமும், வசியம் நிறைந்த பேச்சும், ஜனமும், பணமும் தங்கள் பக்கம் தான் எப்பொழுதும் என்ற மனநிலையும், உலகளாவிய கல்வி, கேள்வி, பட்டறிவு, ஞானமும், புதிரான விசயங்களை எளிதில் புரிந்து கொள்ள செய்திடும் திறனும், வேகம், விவேகம், சுறுசுறுப்பையும் கொண்ட மனித தேனீக்களான 5, 14,23 திகதிகளில் பிறந்தவர்களும், E,H,N,X ஐ பெயரின் முன் எழுத்தாக பெற்றவர்களுக்கும், 5ஆம் எண்ணை பெயர் எண்ணாக கொண்டவர்களுக்கும் இந்த மாதம் செல்லும் காரியங்களில் எல்லாம் சிறப்பும், மக்கள் ஆதரவும், மனதில் துணிவும், மகிழ்ச்சியும் நிச்சயமாக தொடர்ந்து வந்து ஆச்சரியமூட்டும்.

**பொருளாதாரம்:** ஏற்றுமதி, இறக்குமதி, கட்டிடம் கட்டி விற்பனைக்கு விடுவோர், வாகன உற்பத்தியாளர்கள் போன்றோர் எதிர்பார்த்தது போலவே நிலுவை தொகைகள் எல்லாம் நில்லாமல் வந்து மகிழ்வூட்டும். அதே நேரம் நிச்சயமாக வந்து விரிவாக்கத்திற்கு உதவும் என நம்பி இருந்த அரசாங்க ஆதரவில் சில சிக்கல்கள், கையொப்பங்கள், பதிவுகள் என ஏதாவது காலம் தாழ்த்தும் நிலையாகவே தெரிகிறது. தொழிலாளர் ஒற்றுமையுடன் தொடர்ந்து உற்பத்தி உருவாக்கம் காணும் இதனால் மகிழ்வே உண்டு.

**மங்கள நிகழ்வுகள்:** எதிர்காலத்தைப் பற்றி ஏதேதோ நினைத்து நின்று போன பலவித காரியங்கள் எந்த தடையூறும் இல்லாமல் நன்றாகவே நடந்தேறும். முடிவுறும் நிலையிலிருந்த மங்கள நிகழ்வுகளில் ஏற்பட்ட முடக்கங்கள் முழுமையாக அகன்று மகிழ்ச்சியை மனமாற ஏற்படுத்தும்.

**உடல் நலம்:** வழக்கமான பயிற்சிகள், உணவுக் கட்டுப்பாடு, போன்றவைகளால் நல்ல முன்னேற்றமான வலிமையை பெற்று ஆனந்தமாக இருப்பீர்கள். இருப்பினும் வயிறு சம்பந்தமான சில பிரச்சினைகளை காலம் கடந்து உண்ணும் உணவினால் ஏற்படுத்தலாம் கவனம். தந்தையார் நலனில் அதிக கவனம் தேவை.

**தொழில் அதிபர்கள்:** எடுத்த காரியங்கள் யாரும் எதிர்பாராத வண்ணம் முடித்து வெற்றிக்கு வழி காண்பர் திரைப்பட துறையினர், அரசாங்க ஒப்பந்தங்கள் மூலம் மக்கள் மத்தியில் நற்பெயரும், அதிகமான பணபலனும் நிச்சயிக்கப்படலாம். புகழ்பெற்ற கட்டிட நிறுவனங்களின் வீடுகள் மக்களால் அதிகம் விருப்பப்பட்டு வாங்கி வருமானத்திற்கு நிறுவனர்களுக்கு வழிகாட்டுவார்கள் பயனாளர்கள். ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள் திமர் பண வவுகளால் திக்கு, முக்காடிப் போவர்.

**வியாபாரிகள்:** எதைக் கொண்டு போனாலும், விற்பனை செய்து வெகுவான அளவில் பணத்தைக் குவித்து வருகிறீர்களே என சக வியாபாரிகள் நினைப்பார்கள். தங்களின் நேர்மறை (Positive) எண்ணமே இதன் சூட்சுமம், இதை அறிந்து கொண்டால் எல்லாவும் ஏற்றமே. வாகன உதிரிப்பாகம், ஐவுளிக்கடை, உணவுப் பொருட்கள், குளிர்பானம், கட்டுமானப் பொருட்கள் மூலம் அதிகமான வருமானம் நிச்சயிக்கப்படும் இந்த மாதம்.



எண் கணித நிபுணர்:
Dr. JNS.செல்வன், Phd.

**பணியாளர்கள்:** பணிகளில் எந்தக் சுணக்கமும் இன்றி பரபரப்பாக செயல்பட்டு பலரின் அன்பிற்கும், அதிகாரிகள் ஆதரவிற்கும், மக்கள் பணியில் இருப்போர். அவர்களின் பாராட்டுதற்கும் உரித்தாகி மகிழ்வுறுவர். விண்ணப்பித்து, காத்துக் கிடந்து வீட்டுக்கடன், வாகன கடன் போன்றவை தானாக வந்து வாழ்வின் வளர்ச்சிக்கும், மக்கள் மத்தியில் புகழ்ச்சிக்கு காரணமாக அமைந்திடும்.

**அரசியல்வாதிகள்:** எந்த மாற்றங்களை நீங்கள் உங்களுக்கு எதிர்பார்த்தீர்களோ அது உங்களுக்கு வந்து அதையே பிற அரசியல்வாதிகளுக்கு நீங்களே செய்யும் நிலையில் பெரிய பதவி மிக விரைவில் உங்களுக்கு வந்து சேரலாம். பிறரிடம் பதவி மிக விரைவில் உங்களுக்கு வந்து சேரலாம். பிறரிடம் தங்கள் திறமையை காண்பிக்கிறேன் என நினைத்து அதிகமாக பேசி அடுத்தவர்களுக்கு குறிப்பாக தலைமைக்கு 'அலர்ஜியை' ஏற்படுத்துவதை குறைத்து நிறைந்த பலனை அடைய முயற்சி செய்யுங்கள்.

**கலைஞர்கள்:** ஒப்பந்தங்கள் மிகவும் உயர்வான நிலையைத் தரலாம். தொலைக்காட்சி துறையினருக்கு தொடங்கிவிட்டது நல்ல நேரம், நாடே அறியப் போகிறது தங்கள் முகத்தையும், பெயரையும், பெருமையும், புகழும் பிரம்மாண்டமாக வந்து வாழ்வில் வசதி வாய்ப்புக்களை தரலாம். இந்த மாதம் முழுக்க முடிந்த வரை நேரடி சிவப்பு நிறங்களை தவிருங்கள் தங்கள் ஆடைகளில்.

**பெண்கள்:** பெருமைகளையும், புகழையும், பெருவாரியாக அக்கம் - பக்கத்தாரிடம் பெற்று மகிழ்வுடன் இருப்பீர்கள். குழந்தைகளால் குதூகலமுண்டு, கணவரிடம் அன்பை மட்டும் காட்டுங்கள், ஆத்திரம் வேண்டாம். அவரின் உடல் நிலையில் தகுந்த அக்கறை காட்டுங்கள். வெகுளள் காதல் விரைவில் திருமணத்தில் முடியும் சில கன்னிகையருக்கு.

**மாணவர்கள்:** எடுத்ததை எல்லாம், முடித்துக் காட்டுவதுடன் விளையாட்டிலும் வீரம் காட்டி தங்கள் திறமைகளை தக்க வைத்துக் கொள்வார்கள், புதமை புத்தகங்கள் மூலம் அருமையான விசயங்களை கற்று ஆன்றோர் மத்தியில் அதிதிறமைசாலி என்ற பெயரை தக்க வைத்துக் கொள்வர். தங்க 'மாணவர்கள்'.

## 6,15,24ஆம் தேதிகளில் பிறந்தவர்கள்

வெற்றி என்ற சொல்லுக்கு இலக்கணமான இவர்கள் பாவம் போன்ற முகத்தையுடையவர்கள், இதனால் பிறரை எளிதில் கவர்ந்திழுத்து கொண்டவர்கள், ஆய கலைகளிலும் நாயகனான... ஆன்மிக பாதையிலும் அற்புதமாக பயணம் செய்யக் கற்றுக் கொண்டார்கள். என்றென்றும் குறைவில்லா செல்வ நிலையைப் பெற்றுள்ள இவர்களின் லீலைகளை எவராலும் கண்டுகொள்ள முடியாத 6,15,24 திகதிகளில் பிறந்தவர்களுக்கும், U,V,W எழுத்துக்களை பெயராக பெற்றவர் களுக்கும் 6ஆம் எண்ணில் பெயர் அமைந்தவர்களுக்கும் இந்த மாதம் நாலு பேரைக் கேட்டு எந்த செயலையும் செய்தால் நலமாக முடியும். வெளி நபர்களிடம் விதாண்டவாதம் செய்வது சட்ட சிக்கல்களில் கொண்டு விடலாம் உஷார்....

**பொருளாதாரம்:** எடுத்த உடன் எகிறிக்கு திக்க வேண்டாம். நிதானமாக செயல்படுதல் மிக அவசியம். அதிகமான செலவுகளை எதிர்கொள்ள நேரிடும். வாகனம், நிலம் போன்ற வகையில் எதிர்பாராத செலவுகளைக் கட்டுப்படுத்த இயலாமல் தடுமாறலாம். மனதில் உறுதி வேண்டும்.

**மங்கள நிகழ்வுகள்:** காதல் ஜோடிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் வெளியிடங்களில் செயல்படுதல் அவசியம். பலர் பல விதமாக பேசும் நேரமாகத் தெரிகிறது. ஒழுங்கும் கட்டுப்பாடும் உலகில் உன்னதமான நிலையைத் தரும் என்ற நினைவுடன் இருப்பதே நலம். பெற்றோர்கள் எதிர்ப்புகளும் எகிறிக்கொண்டே தான் இருக்கும். வரன்கள் வந்த வண்ணம் இருப்பர். பல இல்லங்களில் இருப்பினும் அவர்களும் முடிவெடுப்பதில் ஆர்வம் காட்டமாட்டார்கள்.

**உடல் நலம்:** நல்லாத்தானங்க இருக்கு உடம்பு அப்படின்னு டாக்டர் சொன்னாலும் உங்க மனதுக்குள் இருப்பது உங்களுக்கு தானே தெரியும். கவலை வேண்டாம், யோகா, பிராணயாமல், ஆன்மிகப் பயிற்சிகள், ஆற்றல் மிகுந்த விற்பன்னர்களின் சொற்பொழிவுகள் தங்கள் மனதை பஞ்சுபோல நிச்சயம் ஆக்கிவிடும். பெற்றோர்களின் வலிமையான நலம் குறித்து மிகுந்த ஆச்சரியமடைவீர்கள். உணவுக்கட்டுப்பாடும் அவசியம். குளிர்ச்சியான பொருட்களை குனிந்து கூட பார்க்காதீர்கள். அவைகளால் தான் தங்களின் 'இம்யூனிட்டி' குறைகிறது உஷார்.

**தொழில் அதிபர்கள்:** மிகப்பெரிய தொழில் நிறுவனங்களின் பங்குகள் சற்று இளக்க நிலையைக் காணலாம். தொழிலாளர்களின் தொல்லைகளும், சங்கங்களின் சங்கடங்களையும் எதிர்கொள்ள நேரிடும். எக்காரணத்தைக் கொண்டும் வார்த்தைகளை மிகவும் அளந்து பேசி வீண் விவாதங்களைக் குறைக்கவும். குறிப்பாக நட்சத்திர அந்தஸ்து ஓட்டல்கள், திரைப்பட துறையினர், ஆலோசனை மையங்கள் நடத்துவோர் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும். சைவ உணவகங்கள் மூலம் நல்ல பலனை எதிர்கொள்ளலாம்.

**வியாபாரிகள்:** கடல் பொருட்கள், துணிமணிகள், உணவுப் பொருட்கள், எண்ணெய் விற்பனை செய்வோர், அன்றாடம் தேவைக்கேற்ப விற்று பணப்புழக்கத்தை எளிதில் பெறுவர். குடும்பத்தினருடன் இணக்கமாக இருந்தாலும் ஏதேனும் இன்ஸ்ட்டால் மென்டில் பிரச்சினை வரலாம். பேசாமலிருந்தால் பிழை நிச்சயம் வராது, குறிப்பாக பெண்களால் பிரச்சினைகள் தலைதூக்கும் கவனம்.

**அரசியல்வாதிகள்:** அதிரடியான அரசியல் பிரபலமான நீங்கள் பல புதுமையான திட்டங்களை தன் பகுதி மக்களுக்கு அர்ப்பணம் செய்து தலைமையின் நேரடிப் பார்வைக்கு செய்வீர்கள். புதிய பதவிகள் எதுவும் வராது. ஆனால் தங்கள் திறன் கணக்கிடப்பட்டு நேரம் வரும்போது செமத்தியாக (நல்ல முறையில் தான்) தலைமையில் கவனிக்கப்படுவீர்கள்.

**கலைஞர்கள்:** கடுமையான முயற்சிகள் மட்டுமே அன்றி வரவுகளுக்கு வழி கிடைக்கும். யாரையும் அனுசரித்து செல்லுதல் நல்லது. வாய் வார்த்தைகள் சில இடங்களில் பகையாக முடியும் கவனம். வெளிநாடு, உள்நாடு, பெரிய இடத்தில் ஒப்பந்தம் செய்து நிறைய வருமானம் பெறலாம் என்று. ஒரு 'டீம்'வரலாம். அது டுபாக்கூர் தான் என்பதையும். உப்புமா உறவுகள் என்பதையும், கவனத்தில் கொள்ளுங்கள் கலைஞர்களே.

**பெண்கள்:** பெண்மை என்ற மென்மையான சிலர் கடுமையாக்க முயற்சிப்பர், வேண்டுமென்றே வழிச் சண்டைகளை ஏற்படுத்தலாம். பணியாற்றும் நிறுவனங் களிலும் எச்சரிக்கையுடன் நடப்பதே நல்லது. குழந்தைகளால் மகிழ்ச்சி நிச்சயம்.

**பணியாளர்கள்:** அதிகாரிகளின் கெடுபிடிகள் சிலருக்கு அதிக எரிச்சலூட்டும், அவப் பெயர்களையும் ஏற்படுத்துவர். சக ஊழியர்களுடன் போட்ட ஜாமீன கையொப்பங்களால் நீதிமன்றங்களில் கைகட்டி நிற்க நேரிடும். மக்கள் பணிகள் மூலம் நல்ல மனநிலை பெறலாம். வயது முதிர்ந்த அதிகாரிகள், பணியாளர்களிடம் எரிச்சலூட்டும் எதையும் சொல்லி வகையாக வாங்கி கட்டிக் கொள்ளும் நேரமாக தெரிகிறது. உங்கள் செல்வாக்கு உயர்வதும், சரிவதும் உங்கள் கையில் தான்.

**மாணவர்கள்:** ஆகம கல்வியாளர்கள், ஆசிரியர் கல்வி, கணினி கல்வி, அகழ் ஆராய்வு படிப்பு, கடல் சார்ந்த கல்வியாளர்கள், மருத்துவ, மாணவர்கள் நிச்சயமாக உயர்வான வகையில் கற்று தேர்ந்து அயல் தேசங்களில் தங்கள் திறமைக்கேற்ற பணிகளை மேற்கொள்வர். கற்று தந்த நம் தேசத்தையும் அதிகம் நேசிப்பவர்கள் இந்த எண் கொண்ட மாணவர்களே.

(தொடரும்)

# "அண்ணாவும் நானும்"

## செப்டம்பர் 15ஆம் நாள் (15-09-1909) பேரறிஞர் அண்ணா அவர்களுடைய 112வது ஆண்டு பிறந்த நாள் நினைவு நாளாகும்

"அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்"
- திருவள்ளுவர்

அதாவது, பெரியவர்களை அண்டி அவர்கள் எப்போதும் நமக்கு ஆதரவாக இருக்கும்படி செய்து கொள்வது பெறுதற்கருமையான பாக்கியங்களிலெல்லாம் மிகவும் பெரிய பாக்கியம். இக்கூற்று தெய்வப்புலவர் திருவாக்கு. அவ்வாக்கிற்கமைய அறிஞர் அண்ணாவை அவரது பேச்சு, எழுத்து, நாடகம், சினிமாவிற்கூடாகவும், அண்ணாவோடு நெருங்கிப் பழகியவர்களுடன் நட்புப்பூண்டு அவரது மேதாவிலாசத்தை அறிந்து ஆனந்தமும், புளகாங்கிதம் கொண்டு நெஞ்சகத்தில் அவரை பூஜிப்பதால் "அண்ணாவும் நானும்" என கொண்டாடி எழுதுவதில் மிகவும் பெருமிதம் கொள்கிறேன்.

முதலில் "மீண்டும் அண்ணா பிறந்திட வேண்டும்", எனும் எண்ணங்கொண்டு கற்பனைச் சிறகை விரித்து, கலைஞர் மு.க ஐயாவின் சில கவிதை வரிகளுக்கூடாக எனது எழுத்துக்களைப் பதிவு செய்கிறேன்.

*"அதிகாலை நேரத்தில் தொலைதூர மணியோசை
புதிய குரல் கேட்டு காலை வணக்கம் என்றேன்,
பனி விழும் துருவத்தில் குறுமுனியின் தமிழெடுத்து
"உதயன்" வெள்ளி விழா நினைவாக
பண்பாடு மிளிர வைக்க
என் கவிதை வேண்டி நின்றார்!*

*அப்படியே ஆகட்டும் அன்புடனே பதிலுரைத்து
மறுபடியும் அவளணைப்பில் சுகமாக தூங்கிவிட்டேன்
இரவு மங்கை நெருக்கம் மெதுவாக விலகிவிட
விடிகாலைக் கனவு மங்கை
விடாப்பிடியாய் அணைத்துக் கொண்டாள்!*

*விதியாலே நாமெல்லாம் வினைப் பயனை அனுபவிக்க
கதிகலங்கிக் கண்ணீர் விட்டு கடல்கடந்து வந்தாலும்
புதியவளாய் புதுமகளாய் பூமணம் கொண்டவளாய்
ஈராயிரம் ஆண்டுக்கும் மேலாக முன்பிருந்தே
மூத்தவளாய் முது மொழியின் முழுஉருவாய்
முத்தமிழின் முழுநிலவாய்...
இன்றல்ல நேற்றல்ல
என்றென்றும் இளையவளாய்
இருந்திட்ட தமிழன்னை
நூறாயிரம் கோடி என
ஆண்டு பல வாழ்வதற்கு
நூலாயிரம் செய்திட்ட
புலவர்களை ஈன்றாள் எனினும்
தலைமகனாய் வள்ளுவனை
நம் அன்னை பெற்றெடுத்தாள்!*



*மலர் என்றால் தாமரை தான்,
மன்னன் என்றால் கரிகாலன்,
நூல் என்றால் திருக்குறள்,
எனப் போற்றும் அறப்பனுவல்
அளித்திட்டாள் நிறைமாந்தர் களித்திட்டார்!*

*அறம் பொருள் இன்பம் என அரியதொரு
பொக்கிஷத்தை
ஆய்ந்தோய்ந்து எழுதியவன்
சொல்லிவைத்த வழியினிலே
பண்பாடு ஒழுக்கத்தை
விழுப்பமாய் கொள்ளாமல்,
நெடுந்தொலைவு சென்று விட்டோம்!*

*யார் கண்பட்டு நம்வாழ்வு தொலைந்ததோ?
யாரேனும் புதிதாகச் சிந்தித்துப்
பகுத்தறிந்து ஆராய்ந்து
பண்பாடு சிதையாமல் பகன்றவர் காண்கிலனே!
பத்திரிக்கை எழுத்திலும் நான் படித்திலனே
பதற்றத்துடன் அரற்றி நிற்கும்
ஈழத்தாய் முகத்தில் விழிநீரைக் கண்டுற்றேன்*

*பார் மகனே பார் உன் தாயின் கோலத்தைப் பார்
கொட்டும் விழிக் கண்ணீர்
கொடியவரின் நகக் கீறல்
கலைந்த கூந்தல் குலைந்த ஆடை கிழிந்த கோலம்
குமின் சிரிப்பை தொலைத்து
குங்குமத்தை இழந்து
வெறுவிழியாய் - விதவையாய்
வீதியோரத்துத் தெருப்புழுதியிலே
விழுந்து கிடப்பதைப் பாராமல்
எப்படியப்பா என் பெயரால்
தமிழ் எழுதி வியாபாரம் செய்கிறீர்கள்?*

*என்னம்மா சொல்கிறாய்! நான் அப்படிப்பட்டவன் அல்லவே!,
உன்னை சொல்லவில்லை
ஆறுதலுக்காக அரற்றுகிறேன்
நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத் திறனுமின்றி
வஞ்சனை செய்து வயிறு வளர்க்கும்
அவர்களைச் சாடுகிறேன்.
தாய் மண்பற்று தாய்மொழி பாசம் தமிழர் தேசம்
மறந்தவராக வாழ்பவர் இங்கு சிறியவரே
என்றும் சிறியவரே!
என் பெயர் சொல்லி அரசியல் பிழைத்தோர்,
இழியவரே! என்றும் இழியவரே!*

*போர்க்களம் சென்று விழுப்புண் தாங்கி
வீரச்சாவை அணைத்தவர் ஆயிரமாயிரம்,
போலிகளாக நாமம் சூடிப் பிழைப்பவர்
இங்கு கூறி விற்பதோ பாஷாணம் பாஷாணம்!*

*"கொடுவாளினை எடடா!
மிகுகொடியோர் செயல் அறவே!",
(பாரதிதாசன்) பாவேந்தர் ரௌத்திர வரிகள்
பாவிகள் இவரை அளித்தே தீரும்!*

*ஆத்திரத்தில் சாபமிட்டாள்
அழுது புலம்பினாள் ஈழமங்கை,
வாடினாள் சோகப் பாட்டு பாடினாள்
சூடு நெருப்பில் ஆடினாள்,
ஓலமிட்டு ஓடினாள்!
ஒரு வழியும் கிடைக்கவில்லை
புவியூர் விட்டு புகழூரில் வாழ்கின்றான்
கவியூரின் பெருவேந்தன் குறலாசான்
அங்கு சென்று அருமை மகனே
வேண்டுகோள் ஒன்று விடுத்தேன் என்றாள்,*

*"என்னம்மா!" என்றாள், குறளரசன்!
தோண்டுகின்ற இடமெல்லாம் தமிழூறும்
தமிழீழத்தில், "மீண்டும் நீ பிறந்திட வேண்டுமென்றாள்",
இன்றென்ன ஆயிற் றென்றான்?
மன்றிலிலே தமிழ் முழக்கம்,
குன்றனைய தமிழருக்கு ஆபத்தென்றாள்!
சென்றனைய குடிலில்லை ஏழைக்கென்றாள்!*

*போதி மரப் புத்தனின் பெயர் சொல்லி
சூதும் வாதும் வெல்லுகின்ற கதை சொன்னாள்!
பாதியிலே குருடரான கோழைகளின்
இழி செயலை எடுத்துரைத்தாள்!
அழுத கண்ணை துடைத்தவாறு
அமுதமொழி வள்ளுவனும்
அம்மா! நான் எங்கே பிறப்பதென்றான்
தொழுத மகன் உச்சி மோந்து - ஆல
விழுதனைய கைகளாலே அணைத்துக் கொண்டு
நீ காஞ்சியிலே பிறந்தொருக்கால்,
அறிஞனாக - அண்ணாவாக,
அகிலத்தில் உயர்ந்து நின்றாய்!*

*தமிழுக்கு உயர்வு தந்த மூவேந்தர் தலைமகனாய்,
தமிழீழ மண் காக்க போராடும்,
வேங்கையின் மைந்தருக்குத் துணையாக
மொழியுணர்வும் இனவுணர்வும்
இல்லாமல் போகாமல் - தமிழ்
அழியினும் வாழினும் என்னென்று இருந்திடாமல்
அறநெறியே குறிக்கோளாய் சிறந்திட்ட பெருநிலத்தில்,
பிற நெறிகள் பயிர் செய்து பிழை மலிந்து வாழாமல்,
மழையற்றுப் போன
வயல் போன்று தமிழர் மானம் மாறாமல்,
அழுக்காறு - அவா - வெகுளி - இன்னாச்சொல்
இவை நான்குமின்றி
நடக்காது வேலையென்று
நடந்திடும் மாந்தர்தனைத் திருத்திடவே
பண்பாடு காத்து நிற்கும்
பகுத்தறிவு வாதியாக
பொதிகை மலைத் தென்றலாய்
போதாகி மலர்கின்ற
தமிழ் உணர்வின் புதுமணமாய்,
பதிகத்து பொருளாய்
பழந்தமிழர் புறப்பாடாய்
கற்கண்டே! தேன்பாகே! காஞ்சித் தலைவனே!
கனகமணித் திருநாடாம் தமிழீழத்தில்
காய்கதிர்ச் செல்வனாய்
மீண்டும் வந்துதிக்க வேண்டுமென்றாள்!"*

*"அண்ணாவும் நானும்" சில நினைவுகள் அடுத்த இதழில் நிறைவுபெறும்.*

**- வீணை மைந்தன்**

# அமரகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்களின் 100வது நிறைவு நாள் (11.9.1882 — 11. 9. 2021) நினைவாக...)

## தமிழ் மொழியின் சொந்தங்கள் யாவரும் பாரதியின் வாரிசுகளேயாவர் - ஜெயகாந்தன்

இலங்கைக்கு வெளியே கனடா உட்பட மூன்று நாடுகளில் கடந்த 43 ஆண்டுகளாகப் புலம்பெயர்ந்து வாழ்பவன் என்ற விதத்தில் எனது தமிழ்ச்சாதியை உற்று நோக்குங்கால் பெரும்பான்மையோர் நமக்கு முன்னோடியாக வாழ்ந்து வழிகாட்டியும்...” நீ வாழும், வாழ்ந்த தாய்நாடு உனக்கென்று உணரவைத்தும் சுதந்திர உணர்வை தூசிதட்டி உணர வைத்தவர்களையும் - தமிழ்மொழியைக் காத்து வளர்த்தவர்களையும் - அறிஞர்களையும் - பெரியோர்களையும் - அடுத்த தலைமுறைக்கு அறிமுகம் செய்து வைப்பதில் நாட்டம் கொள்ளாது ஞாபகமறதி மிகுந்து வாழ்வதை கவலையுடன் கண்ணுற்று வருகிறேன்.

எனது நினைவுகள் - ஞாபகங்கள் சிதிலமடையாமல் நீடித்து வருவதனால் பெரியோர்களை மறவாது அவர்தம் பிறந்த நாளிலும், நினைவு நாளிலும் முடிந்தவரை நினைவு படுத்தி எழுதிவருவதில் ஒரு சமூகக் கடமையைச் செய்வதாக மனநிறைவு அடைகிறேன்!




”எனப்பல பேசி இறைஞ்சிடப் படுவதாய்,
நாட்பட நாட்பட நாற்றமு சேறும்
பாசியும் புதைந்து பயன்நீர் இலதாய்
நோய்க்களமாகி அழிகெனும் நோக்கமோ?
விதியே விதியே தமிழச்சாதியை
என்செய நினைத்தாய்? எனக்குரை யாயோ?
என, பாரதி குரலில் எடுத்தியம்புகிறேன்!

”...சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்
திருக்குறளுறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்
எல்லையொன்றின்மை எனும் பொருள் அதனைக்
கம்பன் குறிகளாற் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும் முன்பு நான் தமிழ்ச்
சாதியை “அமரத்தன்மை வாய்ந்தது“ என்று
உறுதி கொண்டிருந்தேன்.”
ஆனால் இன்று... பாரதிக்கு பதில் கூறுங்கள்..!

பாரதி இப்பூமியில் அவதரிக்காமலிருந்தால்....
நான் உட்பட பல கோடி தமிழர்களும் படித்தறிந்து
இப்பூமியில் உலாவருவார்களா... எழுதுவார்களா
என்பது ஐயம் கொண்ட வினாவாகும்!

எனது கருத்தை பிரதிபலிப்பது போல் எங்கள் காலத்தில் எங்களோடு கலந்து வாழ்ந்து - எழுத்துக்களைப் பிரசவித்து பல படைப்புகளைத் தந்த பிரம்மத்துவம் வாய்ந்த இலக்கிய படைப்பாளி அமரர் ஜே. கே (கே ஜெயகாந்தன்) அவர்கள் “பாரதி - ஒரு டாக்குமெண்ட்ரி படம்“, வெளியீட்டு விழாவில் ஆற்றிய சிறப்புரையிலிருந்து சில பகுதிகளைக் குறிப்பிட்டு இக்கட்டுரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.



”...நாம் எல்லோரும் பாரதியின் வாரிசுகள் தான்... சில பேர் அதை உணர்ந்திருக்கலாம். சிலர் உணராமலும் இருக்கலாம். ஆனால் பாரதியிலிருந்து தான் நம்முடைய சிந்தனை, நம்முடைய கலாச்சாரம், நம்முடைய வாழ்க்கைமுறை இது எல்லாம் சரியான அர்த்தத்தில் நவீனம் பெற ஆரம்பித்தன. பாரதி மகாகவி மட்டுமல்ல. மகா புருஷரும் கூட!

பாரதியுடன் நீ எப்படி பரிச்சயம் கொண்டாய் என்று எனது நண்பர்கள் என்னை கேட்ட பொழுது எனக்கு விடை தெரியவில்லை. ஆனால் அறிவறிந்த பருவத்திலிருந்து... நந்தன் கதையில் காலில் நகம் முளைத்த பொழுதிலிருந்து என்று சொல்வது போல், அது மாதிரி, ”ஓடி விளையாடு பாப்பா என்று படித்த பருவத்திலிருந்து பாரதியின் பகவத் கீதை உரைகளைப் பயில்கிற பக்குவம் வரை, பாரதி நமது அறிவில், சிந்தையில், ஊனில், உயிரில், உடலில் கலந்து கலந்து காலம் தோறும் நம்மை உயிர்ப்பித்துக் கொண்டிருப்பதனை உணர்கின்ற பலரில் நானும் ஒருவன்!

நம்மையெல்லாம் காலங்கடந்து வாழ்கிற, நாடு கடந்து வாழ்கிற, பிரபஞ்சம் முழுவதும் பரவிக் கிடக்கிற தமிழர்களை எல்லாம் ஒன்றிணைக்கிற மாபெரும் சக்தி என்பதனை அவரது எழுத்துக்கள் சொல்லும்.

சைபீரியப் பாலைவனத்திலிருந்து, பிஜி தீவின் கரும்புத் தோட்டத்தில் அழுது கண்ணீர் வடிக்கின்ற - வடித்த பெண்கள் வரை அவனது உலகப்பார்வை வியாபித்திருந்தது.

தமிழர்களே! மகாகவி பாடாத இந்த பிரபஞ்சத்தை நீங்கள் எங்கேயும் பார்க்க முடியாது. எனவேதான் தமிழர்கள் எங்கே வாழ்ந்த போதிலும், அவர்கள் எவ்வளவு காலத்தாலும் தூரத்தாலும் நம்மிடையே பிரிந்திருந்த போதிலும், நம்மை மறுபடியும் ஒன்று படுத்துகிற சக்தியாக விளங்குகிறான்”.

விரைவில் ஆரம்பமாகிறது....
”தமிழ் சினிமாவில் பாரதி பாடல்கள்” (காட்சியும் விளக்கமும்)

**- வீணை மைந்தன்**


# கேரளா மூலிகை மருத்துவம்

## வைத்திரயர் - சஞ்சீவ ராஜு

பரம்பரை மூலிகை வைத்தியசாலை
பதினொரு பரம்பரையாக நாடி பார்த்து உங்களது உடம்பிலிருக்கும் நோய்களைக் கண்டறிந்து அதற்கேற்ற மருந்துகளை தருகின்ற வைத்தியர் பரம்பரையைச் சேர்ந்த சஞ்சீவ ராஜு இந்தியா முதல் மலேசியா, சிங்கப்பூர், பிரான்ஸ், ஜேர்மன், லண்டன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சென்று மருத்துவம் செய்த பின் தற்போது கனடா வந்துள்ளார்.

பல இடங்களில் மருத்துவம் செய்து நம்பிக்கை இழந்து விட்டீர்களா? கவலைப் பட வேண்டாம். பக்க விளைவுகளற்ற தகுந்த மருந்துகளைப் பெற்று உங்கள் வருத்தங்கள் குணமாக ஒரு முறை நம்மிடம் வாருங்கள். நல்ல தீர்வு பெற்றுச் செல்லுங்கள். இலவச ஆலோசனை வழங்கப்படும்.





வேர், பச்சை இலைகள், பட்டைகள், கிழங்குகளில் இருந்து பெறப்பட்டு பொடியாக, கசாயமாக, குளிசைகளாக, லேகியமாக இந்த இயற்கை மருந்துகள் தரப்படும்.
எந்தவித பக்க விளைவுகளும் கிடையாது! நம்பி வாருங்கள்!
நலமுடன் வாழுங்கள்!

ஆஸ்துமா, அலர்ஜி, மூச்சுத்திணறல், தும்மல், நெஞ்சுச்சளி, தோல் வியாதி சொறி யாஸிஸ், முடக்குவாதம், மூட்டு வலி, வயிற்றுவலி, இடுப்பு வலி, முதுகு வலி, கை-கால் வலி, கழுத்துவலி, ஒற்றைத் தலைவலி, பக்க வாதம், நரம்புத் தளர்ச்சி, நீரழிவு (சர்க்கரை வியாதி), சிறுநீரகக்கற்கள், வாய்வுத் தொல்லைகள், குடற் புண், இரத்த பலம் அபிவிருத்தி, ஆண்களுக்கான பிரச்சனைகள், ஆண்மைக் குறைவு, உடல் பருமன்-குறைக்க, கூட்டுவதற்கு, முடி உதிர்தல், ஞாபக மறதி, உள்மூலம், வெளிமூலம், பகந்திரி மூலம், கால் வெடிப்பு, மஞ்சட்காமாலை, வெண்குஷ்டம், பெண்களுக்கான மாதவிடாய்ப் பிரச்சனை, நெஞ்செரிதல், மலச்சிக்கல், செக்ஸ் பிரச்சினை, மன அழுத்தம், காக்கா வலிப்பு, ஞாபக மறதி, சரவாங்கி போன்ற நோய்களை மூலிகை வைத்தியம் மூலம் குணப்படுத்த முடியும். அத்துடன் கர்ப்பப்பை கோளாறுகள், குழந்தையின்மைக்கான மருத்துவத்துடன், சகல நோய்களுக்கும் சிகிச்சை செய்யப்படும். அத்துடன் போதைப் பொருட்களை உட்கொள்ளும் பழக்கத்தை மறப்பதற்கான மருந்துகளும் தரப்படும்.

2900 MARKHAM ROAD, MajesticCity UNIT L 13 ,
OPP. VASANTHAM SUPER MARKET, MARKHAM RD,
SCARBOROUGH, ON, M1X 1E6

647-294-3189

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




## கனடாவில் ஒரே நாளில் ஒரே மேடையில்



அதிபர் பொ. கனகசபாபதி அரங்கில்

POWERED BY
VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby

உதயன் வெள்ளி விழாவும்
நண்பன் WORLDWIDE விருது விழாவும்

Tasty தமிழா

30.10.2021
சனிக்கிழமை
மாலை 6.00 மணி தொடக்கம்

கலை நிகழ்ச்சிகள், இசை,
விருதுகள் வழங்கல்,
இராப்போசன விருந்து

Covid-19
கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப அழைக்கப்படுவோரின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படும்

Netwyn.Place Auditorium
10. Thornmount Drive
Scarborough ON, M1B 3J4

அனுமதிச் சீட்டுகளுக்கு
416 732 1608 அல்லது 647 762 9512

*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 27)*


# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் இலங்கைப் பயணம்

அதற்கு திருமலை 'குருநாதரே அப்பொழுது இளவரசரும் படைகளுடன் சோழ நாடு திரும்பினால் தானியம் அனுப்புவது பற்றிய பிரச்சனை இல்லை எப்பொழுது அங்கு திரும்புகிறார்?' என்று கேட்டார். அதற்கு அநிருத்தர், 'இளவரசர்க்கு அதில் விருப்பம் இல்லை எனக்கும் சம்மதம் இல்லை ஏனென்றால் மறைந்திருக்கும் இலங்கை அரசன் மகிந்தன் வெளியே வந்து, படை திரட்டி மீண்டும் சண்டைக்கு வருவான் நாம் நட்பு பாராட்ட வேண்டும். அல்லது இங்கு புலிக் கொடியின் ஆட்சி நிறுவ வேண்டும்! அவற்றில் இளவரசர் ஈடுபட்டுள்ளார் இங்குள்ள போர் வீரர்கள் யுத்தத்தால் அழித்த புத்த விகாரைகள், கோயில்கள், தாது கர்ப்பக் கோபுரங்கள் யாவற்றையும் இளவரசரின் கட்டளையின் பேரில் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். இளவரசர் சைவ மதத்தவராக இருந்தாலும் மக்களிடம் அரசர் நடுநிலமை உடையவராக யாவரையும் ஆதரிப்பவராக இருக்க வேண்டும் அல்லவா? இது அன்றைய அரச தர்மம். ஆனால் அன்று இலங்கை ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து சுதந்திர இலங்கையாக மாறிய போது சிங்களவர்களுக்கும், தமிழருக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்றனர். ஆனால் இன்றோ, தமிழர் சிங்களவர்களின் அடிமைகளாகி, இலங்கையிலிருந்து அகற்றப்பட வேண்டியவர்கள் ஆகிவிட்டார்கள். இது எத்தனை கொடுமை! வெற்றியின் விளிம்பைத் தொட்டுவிட்ட எம்மை சதியின் கோரத்தால் வீழ்த்தி, அழித்து அகற்றப்பட வேண்டிய இனம் என்கிறார்கள்'. --- சிவ பக்தனான தமிழ் மன்னன் இராவணனையே தம் அரசர் என்று கொண்டிருக்கின்றனர். இளவரசர் கையில் சங்கு சக்கர ரேகை இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன் இவர் பிறப்பிலேயே தெய்வ கடாட்சத்துடன் பிறந்துள்ளார். 'சோழ சாம்ராஜ் ஜியம் இளவரசர் அருள்மொழிவர்மரால் சிறப்புப் பெறப் போகிறது என்றார் அன்பின் அநிருத்தர். அதற்கு திருமலை, சோழ ராஜ்ஜியத்தை வேரோடு அழிக்க சூழ்ச்சி நடைபெறுகிறது! அது எத்தனை பயங்கரமான சூழ்ச்சி இந்த அரசை எப்படிக் காப்பாற்றுவது' என்றார் அதற்கு அநிருத்தர், 'முதலில் செய்தியைச் சொல்' என்றார். திருமலையோ 'இது இரகசியமாகப் பேசவேண்டியது' என்றார். 'சரி இந்தத் தீவில் உள்ள பாதாளக் குகைக்குப் போவோம்' என்றார் அநிருத்தர்.

வந்தியதேவனை கோடிக்கரைக்கு அனுப்பிவிட்டு குந்தவையும், வானதியும் யானைமீதில் பழையாறையில் இருந்து தஞ்சைக்குப் புறப்பட்டனர். சுந்தர சோழ சக்கரவர்த்தி குந்தவையின் தந்தை, தாய் வானமாதேவி இருவரும் தஞ்சை கோட்டையில் இருந்தார்கள். ஆனாலும் குந்தவைக்கு அங்கு போவது விருப்பமில்லை. ஏனென்றால் அங்கு அரண்மனைப் பெண்கள் இருப்பதற்கு போதுமான இடமில்லை, சுதந்திரம் இல்லை. இப்பொழுது பழுவூர் இளைய ராணியின் செருக்கு, அகம்பாவம், நடத்தை குந்தவைக்கு வெறுப்பாக இருந்தது. ஆனால் வந்தியத்தேவன் சொன்ன ராஜ வம்சத்திற்கு எதிராக சூழ்ச்சி நடக்கிறது என்ற செய்தியின் பின் தன் கடமைகளை உணர்ந்தவளாக, தான் தஞ்சையில் இருப்பது தான் சரி என்று எண்ணினாள். தன் தமையன் ஆதித்த கரிகாலர் காஞ்சியில் இருக்கிறார் தஞ்சை வர மறுக்கிறார். தம்பி அருள்மொழிவர்மர் இலங்கையில் இருக்கிறார். தந்தை உடல் நலமற்று இருக்கிறார். நான் பழையாறையில் வசித்தால் தஞ்சையில் நடப்பது எப்படித் தெரியும்? மதுராந்தகரை சிம்மாசனத்தில் ஏற்றிவிட்டு தாம் தங்கள் கையில் ஆட்சியை எடுக்க இருக்கிறார்கள். இந்த அபாயகரமான வேளையில் நான் தஞ்சையில் இருப்பதே நல்லது என்று முடிவு கொண்டவளாய் புறப்பட்டாள்.

அப்பொழுது வானதி, 'அக்கா நீங்கள் உங்கள் தம்பியை அழைத்து வருமாறு ஓலை கொடுத்து இலங்கைக்கு அனுப்பினீர்கள் அவர் எங்கே வருவார் பழையாறை வருவாரா? தஞ்சை வருவாரா?' என்று கேட்டாள். 'நீ பொன்னியின் செல்வனைப் பற்றிக் கேட்கிறாயா' என்றாள் குந்தவை. 'ஆமாம் அக்கா அவருக்கு பொன்னியின் செல்வன் என்று எப்படிப் பெயர் வந்தது? சொல்லுங்கள் அக்கா' என்றாள் வானதி. சொல்லுகிறேன் என்று தொடங்கினாள் குந்தவை. 'சுந்தர சோழ சக்கரவர்த்தி பட்டத்திற்கு வந்த புதிதில் தன் குடும்பத்துடன் அரண்மனைப் படகில் பொன்னி நதியில் உலாவி வருவார். எல்லோரும் ஆனந்தமாக கழிப்பார்கள் அருள்மொழிக்கு ஐந்து வயது எனக்கு ஏழு வயதிருக்கும் திடீரென்று அருள்மொழி படகில் இல்லை என்பதைக் கண்டு நான் எங்கே அருள்மொழி! என்று முதலில் கத்தினேன். எல்லோரும் அழுதார்கள் புலம்பித் தேடினார்கள். நதியில் குதித்து தேடினார்கள் சுந்தர சோழ சக்கரவர்த்தியும் நதியில் குதித்து தேடினார். திடீரென்று ஒரு பெண் இரண்டு கைகளிலும் குழந்தையை தூக்கிப் பிடித்தபடி நின்றது உடனே சுந்தர சோழர் குழந்தையை வாங்கிக் கொண்டார். இருவரையும் படகில் ஏற்றினர் அப்பொழுது சக்கரவர்த்தி மயங்கி விழுந்துவிட்டார். குழந்தையை தந்த பெண் மறைந்துவிட்டது! இந்தக் காவேரி நதியின் தெய்வந்தான் இந்தக் குழந்தையை காப்பாற்றிக் கொடுத்தது என்று நம்பி, அவனை பொன்னியின் செல்வன் என்று அழைத்தனர். இப்படித்தான் பொன்னியின் செல்வன் என்ற பெயர் பிறந்தது' என்றாள். அவ்வாறு உரையாடிக் கொண்டே தஞ்சைக் கோட்டையை அடைந்தனர். அழகும், அறிவும், குணமும் படைத்த குந்தவை தேவியார் தஞ்சை வருவதை அறிந்த தஞ்சை மக்கள் மிக்க மகிழ்வுடன் ஆரவாரப்பட்டனர். தஞ்சைக் கோட்டை கதவுகள் படார் என்று திறக்கப்பட்டது குந்தவையும் தன் பரிவாரங்களுடன் நின்றாள். அவளை வரவேற்க அரண்மனைப் பரிவாரங்கள் வெளியே வந்தனர். அங்கு இரு பழுவேட்டரையரும் முன்னிலையில் நின்றனர். முத்துப் பதித்த தந்தப் பல்லக்கில் வந்த சுந்தர வதனம் கொண்ட பழுவூர் இளைய ராணி குந்தவையை வரவேற்றாள். குந்தவையும் புன்னகையுடன் அவளை வரவேற்றாள். இரண்டு பேரழகிகளையும் காண சனக் கூட்டம் அலை மோதியது. குந்தவை தேவியை மக்கள் தம் குல தெய்வம் என்று பாராட்டினார்கள். நந்தினியும், குந்தவையும் உரையாடினார்கள். அவர்களின் உரையாடல் ஏட்டிக்குப் போட்டியாய் வார்த்தைகளில் உட்கருத்துக்கள் இரு பொருள்பட தொடர்ந்தது. பேச்சு மோதலாக புலப்பட்டது வானதியோ குந்தவையுடன் கூடவே இருந்தாள். ஆனால் அவள் வேறு உலகில் சஞ்சரித்தாள். அன்று நவராத்திரித் திருநாள் சக்கரவர்த்தியின் அரண்மனையில் சோழ வம்சத்து அரசர்களின் வீர சரித்திரங்களை நாடகமாக உருவாக்கி அரங்கேற்றினர். அதனை ஆயிரக் கணக்கான மக்கள் கூடியிருந்து பார்வையிட்டனர். அங்கு அரண்மனை மாதரும் இருந்தார்கள் குந்தவையும், அவள் அருகில் நந்தினியும் அமர்ந்திருந்தாள். வானதியும் குந்தவையுடன் இருந்தாள். கோப்பரகேசரி பராந்தகன், சுந்தர சோழரின் பாட்டனார் இவர் நாற்பத்தாறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். இவர் சாம்ராஜ்ஜியம் பரந்து விரிந்து ஈழ நாட்டில் இருந்து துங்கபத்திர நதிவரை அவர் ஆணை சென்றது. பல போர்கள் புரிந்து வெற்றி கண்டார். மதுரையும், ஈழமும் ஆண்ட இவர் 'கோப்பரகேசரி வர்மர்' என்ற பட்டம் பெற்றார். வடக்கே இரட்டை மண்டலத்தில் இருந்து கன்னர தேவன் என்ற மன்னன் பெரும் படையெடுத்து வந்து தற்கோலத்தில் இறுதிப் போர் நடத்தினான்.




அப்பொழுது பராந்தகனுடைய மூத்த புதல்வன் இராஜாதித்த வீராதி வீரர் படைத்தலைமை வகித்தார். கன்னர தேவனுடைய படைகளை முறியடித்து விட்டு யானை மீதிருந்தபடி உயிர் நீத்து வீர சொர்க்கம் அடைந்தார். பராந்தக தேவரின் காலத்தில நடந்த போரில் பக்கம் இருந்து துணை செய்தவர்கள், கொடும்பாணார் சிற்றரசரும், பழுவூர் குறுநில மன்னரும். இதில் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர் பெரிய தந்தை கண்டன் அமுதனார். பெரிய பழுவேட்டரையருக்கு அவர் பெரிய தந்தையின் பெயர் வைக்கப்பட்டது. ஈழத்துப் போரிலே உயிர் நீத்த கொடும்பாணார் சிறிய வேளாளரின் தந்தை வானதியின் பாட்டனார். இதனால் சோழ சாம்ராஜ்யத்தில் கொடும்பாணார் சிற்றரசரும், பழுவூர் குறுநில மன்னரும் இரு கண்களாக விளங்குகின்றனர். நாடகத்தில் நடந்த காட்சியோ பெரும் உற்சாகமாக நடந்தது. எல்லோரும் பார்த்து மகிழ்ந்தனர் 'நாவலோ நாவல்' என்று சத்தமிட்டு ஆதரவு அளித்தனர். நாடகத்தில் தொடர்ந்து பாண்டிய மன்னன் தோல்வியடைந்து, அவன் இலங்கை மன்னனிடம் சரணாகதி அடைந்து, மணிமகுடத்தையும் இரத்தின ஆரத்தையும் அங்கேயே விட்டுவிட்டு சேர நாட்டிற்கு ஓடி ஒளிந்தது பற்றிய காட்சிகள் நடைபெற்றது. அப்போது நந்தினி மட்டும் மிக வேதனையாக இருந்தாள். குந்தவை அதன் நோக்கம் அறியாள். அறிந்து கொள்ள விரும்பி நந்தினியிடம் 'சக்கரவர்த்தி சுகமாக இருந்தால் இங்கு வந்திருப்பார்' என்றாள். அதற்கு நந்தினி, 'இலங்கையிலிருந்து மூலிகை வந்தால் அவர் உடம்பு வெகு விரைவில் குணமடைந்துவிடும்' என்றாள். அத்துடன் 'நீங்கள் தானே ஒருவரை இலங்கைக்கு அனுபபினீர்களாமே?' என்று வினவ குந்தவை அதற்கு பதில் சொல்ல விரும்பவில்லை. அதே நேரம் நாவலோ நாவல் என்று மக்கள் கோஷமிட பேச்சும் தடைப்பட்டது. நாடகமும் முற்றுப் பெற்றது. அதன் பின் அரண்மனைப் பெண்கள் துர்க்கையம்மன் ஆலயத்திற்கு புறப்பட்டனர். சுந்தர சோழர் உடல் நலனிற்காக அவர் மனைவி, மலையமானின் புதல்வி, மகாராணி நவராத்திரி ஒன்பது நாளும் துர்க்கையம்மனின் விசேட பூசை கண்டு அர்ததசாம பூசைக்குப் பின் திரும்புவது வழக்கம். அவருடன் அரண்மனை மூத்த பெண்களும் சென்றிருந்தனர். குந்தவையும் அவர்களுடன் சென்றாள். ஆனால் வானதி அரண்மனையில் தங்கினாள் தனிமையில் இருந்த வானதியால் தூங்க முடியவில்லை. நாடகத்தில் நடந்த தம்முன்னோர் வீர தீர செயல்களைப் பற்றி நினைத்து மகிழ்ந்தாள். தன் தந்தையின் மரணம் நினைத்து வருந்தினாள். ஈழத்திற்கு சென்ற அருள்மொழிவர்மனின் நினைவும் வந்தது. உடனே எழுந்து வெளியில் உலாவச் சென்றாள். அவள் பாதையில் இறங்கிச் சென்றாள் அரண்மனைப் பாதை முடிவின்றிச் சென்றது. திடீரென்று என்னைக் காப்பாற்றுவார் யாருமில்லையா? என்று ஒரு அபயக் குரல் கேட்டது. வானதிக்கு நடுக்கம் வந்தது. 'ஆனால் அந்தக் குரல் சக்கரவர்த்தியுடையது மகாராணியும் பக்கத்தில் இல்லை எல்லோரும் கோயிலுக்குப் போய்விட்டார்கள் அவருக்கு என்ன ஆபத்தோ' என்ற பதற்றத்தில் அவரிடம் செல்ல, சக்கரவர்த்தியைப் பார்த்தால் அவர் தனிமையில் படுத்திருந்தார். 'அடிபாவி நான் உன்னைக் கொன்றேனா? இருபத்தைந்து ஆண்டுகள் ஆகிறது உன் ஆன்மா சாந்தி பெறவில்லையா? ஏன் என்னைச் சுற்றி சுற்றி வருகிறாய். நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லி விட்டுப் போ' என்று அலறினார். வானதி எல்லாப் பக்கமும் தன் பார்வையை சுழற்றினாள். சக்கரவர்த்தியின் அறையில் ஒரு தூண் ஓரத்தில் ஒரு உருவம் தென்பட்டது. கூர்ந்து நோக்கினால் அது பழுவூர் இளையராணி போல் தென்பட்டது. இளைய ராணியேதான்! இது என்ன உன்னைக் கொன்றேன் என்றால் அதன் பொருள் என்ன என்றபடி மயங்கி தரையில் விழுந்தாள் வானதி. குந்தவை திரும்பி வரும்போது வானதி தரையில் மயங்கிக் கிடப்பதைக் கண்டாள். அவளைத் தூக்கி தன்னுடன் அணைத்தபடி தாங்கிச் சென்று, அவளைத் தேற்றினாள். மயக்கம் தெளிந்த வானதி தான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் குந்தவைப் பிராட்டியிடம் கூறினாள். பின்னர் சுந்தர சோழரின் அருமைப் புதல்வி குந்தவை தேவி தன் தந்தையின் அழைப்பின் படி அவரைப் பார்க்க வந்தாள். அவள் தந்தையும் அவளை அன்புடன் அழைத்து அருகில் இருத்தி சுக நலங்கள் விசாரித்துக் கொண்டார்கள். குந்தவை, 'அப்பா உங்கள் கட்டளைப்படி நான் தஞ்சைக்கு வந்திருக்கிறேன். உங்கள் உடல் நிலை பாதிக்கப்படதால் அதனைக் குணப்படுத்த இலங்கைக்கு மூலிகை கொண்டு வர ஆள் அனுப்பி விட்டேன். மூலிகை வந்ததும் நீங்கள் குணம் பெற்றுவிடுவீர்கள் பயப்படாதீர்கள் அப்பா' என்றாள் அதற்கு சுந்தரசோழர், 'மகளே உன் பாசத்தையும், புத்தியையும் நினைத்து பெருமைப் படுகிறேன். ஆனால் எந்த மருந்தினாலும் என்னைக் குணப்படுத்த முடியாது. என் உடல் நிலையைவிட மனநிலைதான் மோசமாக இருக்கிறது' என்றார். குந்தவையோ, 'அப்பா தாங்கள் இந்த நாட்டுக்கு ராஜா, அத்துடன் அன்பு ராணியும் பக்கமிருக்கிறார். உயிர்கள் போல் பிள்ளைகள் நாம் இருக்கின்றோம். இதனைவிட என்ன மனக்கவலை? பழுவேட்டரையர்களும், கொடும்பனார் வேளாளரும் இரு கரங்கள் போல் தாங்கள் கொண்டுள்ளீர்கள். அன்பின் அநிருத்தர் தமது ஆட்சிக்குத் தோள் கொடுத்து, இராஜ்ஜிய பாரத்தை தாங்கள் தலையில் சுமக்காமல் அதை இறக்கி வைத்து விடுகிறார்' என்றாள். அதற்கு அவள் தந்தை 'மகளே சென்ற நூறு வருடகாலமாக இந்த இரு குலத்தவரும் சோழ இராஜ்ஜியத்திற்கு எல்லையற்ற ஊழியம் செய்துள்ளனர். இவர்கள் இல்லாவிட்டால் சோழ ராஜ்ஜியம் இராது' என்றார் குந்தவை தொடர்ந்தாள் 'அப்பா இந்த இரு கட்சிக் காரரும் இப்பொழுது உங்களிற்கு சதி செய்கிறார்கள். தங்கள் புத்திரர்களிற்கு பட்டமில்லாது செய்ய இரகசியமாக சதி செய்கிறார்கள்! சித்தப்பா மதுராந்தகனுக்கு பட்டம் கட்டி ஆட்சியை தங்கள் கையில் வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள்' என்றாள். சுந்தர சோழர் படுக்கையை விட்டு எழுந்து, 'யார் இந்த முயற்சியை செய்கிறார்கள்? அவர்கள் முயற்சி கை கூடினால் எனக்கு எத்தனை சந்தோஷம்!' என்றவுடன் குந்தவை திகைப்புடன், 'அப்பா இது என்ன வார்த்தை சொல்லுகிறீர்கள்' என்றாள். 'ஆம் அம்மா என் பிள்ளைகளுக்கு நன்மை செய்யவே விரும்புகிறேன்.

*(தொடரும்...)*

---

Jenita.Jaffna@gmail.com

**தொகுப்பு, எழுத்தாக்கம்:**

**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**

**மாதினி நிமலன**

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 17 – 05 – 1933



மறைவு 03 – 09 – 2021

தோற்றம் 20 – 09 – 1943



மறைவு 07 – 09 – 2021

## கலாநிதி கார்த்திகேசு சித்திரவடிவேலு

இளைப்பாறிய பேராசிரியர் யாழ்ப்பாண பல்கலைக்கழக விலங்கியல்துறை
அச்சுவேலி-இலங்கை

## திருமதி சித்திரவடிவேலு தவமலர்

அச்சுவேலி-இலங்கை

யாழ்ப்பாணம் அச்சுவேலி தம்பாலை சந்நிதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கலாநிதி கார்த்திகேசு சித்திரவடிவேலு அவர்கள் கடந்த 03- 09-2021 அன்று வெள்ளிக்கிழமையும் அன்னாரின் துணைவியார் திருமதி சித்திரவடிவேலு தவமலர் அவர்கள் கடந்த 07-09-2021 செவ்வாய்கிழமையன்றும் இறைவனடி சேர்ந்தார்கள் என்ற தகவலை ஆழ்ந்த கவலையுடன் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் உலகெங்கும் வாழும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகம் சார்ந்த அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.
கலாநிதி கார்த்திகேசு சித்திரவடிவேலு அவர் உயிர் துறந்த நான்காம் நாளே அன்னாரின் அன்புத் துணைவியாரும் உயிர் துறந்த பிரிவானது எமது உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் சூழ்ந்த வட்டாரத்தில் மிகுந்த சோகத்தையும் அதிர்ச்சியையும் தோற்றுவித்துள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

*அமரராகிவிட்ட கலாநிதி கார்த்திகேசு சித்திரவடிவேலு அவர்களின் மறைவு தொடர்பாக யாழ்ப்பாண பல்கலைக் கழக சமூகம் வெளியிட்ட அனுதாபக் குறிப்பு ஒன்றின் தமிழாக்கத்தை கீழே தருகின்றோம்.*

## பேராசிரியர் கார்த்திகேசு சித்திரவடிவேலு

Bsc (London), Msc, Rn Dr (Charles), PhD (Charles, Czech Republic), Dip-in-Ed.(Sri Lanka)

**விலங்கியல் துறையின் ஓய்வுபெற்ற இணைப் பேராசிரியர்**
**விலங்கியல் மற்றும் தாவரவியல் துறையின் முன்னாள் தலைவர்**
**மீன்வள மேம்பாட்டு மையத்தின் முன்னாள் இயக்குனர்**

எங்கள் அன்பான ஆசிரியர் பேராசிரியர் கே. சித்திரவடிவேலு அவர்கள், விலங்கியல் துறையின் ஓய்வுபெற்ற இணைப் பேராசிரியரும், மீன்வள மேம்பாட்டு மையத்தின் முன்னாள் இயக்குனரும் ஆவார், யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகமானது 03.09.2021 அன்று இடம்பெற்ற அவரது மறைவுக்கு இதயப்பூர்வமான துக்கத்தை வெளிப்படுத்த வார்த்தைகள் போதாது என்றே கருதுகின்றது. அன்னார் அவர் ஒரு அழகான ஆன்மா, அன்பும் நம்பிக்கையும் நிறைந்தவர். தற்போது அன்னார் நம்மை விட்டு விலகி, கடவுளுக்கு அருகில் மிகவும் நெருக்கமாகிவிட்டார்.

பேராசிரியர கார்த்திகேசு. சித்திரவடிவேலு அவர்கள் 1980 இல் எமது விலங்கியல் துறையில் விரிவுரையாளராக சேர்ந்தார், 1993 முதல் விலங்கியல் துறை இணை பேராசிரியராக பணியாற்றினார், 1990 முதல் 1991 வரை விலங்கியல் துறையின் தலைவராக பணியாற்றினார், 1992 முதல் 1995 வரை தாவரவியல் துறையின் தலைவராக பணியாற்றினார். 1998 முதல் 2008 வரை யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மீன்வள மேம்பாட்டு மையத்தின் ஒருங்கிணைப்பாளராக தனது சேவைகளை நீடித்தார். மீன் உயிரியல் மற்றும் கலாச்சாரத்தில் நிபுணத்துவம் பெற்ற ஒருவராக அவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களிடையே நம்பமுடியாத அறிவுச் செல்வத்தைப் பரப்பினார், ஆனால் அதே நேரத்தில் எளிமையான மனிதராகவும்,அத்துடன் ஒரு தாழ்மையானவராகவும் மற்றும் இரக்க சுபாவம் உள்ளவராகவும் விளங்கினார். அவர் பலருக்கு பல்வேறு வழிகளில் உதவினார், குறிப்பாக பல முதுநிலை மற்றும் முனைவர் பட்டம் பெறுவதற்காக கற்கை நெறிகளில் இணைந்தவர்களுக்கான வெளி ஆய்வாளராக பணியாற்றி தனது ஆழமான வழிகாட்டுதலுடன் ஆராய்ச்சி தரத்தையும் மேம்படுத்தினார் என்றே கூறவேண்டும்.



அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மீன்வள அறிவியல் கல்விக்கு மகத்தான பாரம்பரியத்தை விட்டுச் செல்கிறார். அவர் மீன்வள மேம்பாட்டு மையத்தின் ஸ்தாபகராகவும், ஒருங்கிணைப்பாளராகவும், பின்னர் இயக்குநராகவும் இருந்தார், இது 2009 ஆம் ஆண்டில் ஒரு துறையாக உருவானது. அவர் மீன்வளத் துறையின் வளர்ச்சிக்கு கணிசமான பங்களிப்பை வழங்கினார் மற்றும் அது ஒரு சர்வகலாசாலையில் ஒரு கலைப்பிரிவாக உயர்த்தப்படும் என்ற கற்பனை நம்பிக்கையை வளர்த்தார்.இறுதியில் அவர் இறக்கும் வரை அது நிறைவேறவில்லை.

அவரது பணி காலத்தில், யாழ்ப்பாணத்தில் மீன்வள மற்றும் மீன் வளர்ப்பில் பல ஆராய்ச்சித் திட்டங்களுக்கு அவர் பங்களித்தார். அவரது ஆராய்ச்சி முடிவுகள் பல தேசிய மற்றும் சர்வதேச இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன. அவர் பல தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளுக்கு ஆலோசகராக தனது சேவைகளை வழங்கினார். பேராசிரியர் கார்த்திகேசு சித்திரவடிவேலு அவர்கள் தனது மாணவர்களின் எதிர்காலத்தில் அவர்களை தயார்படுத்தும் திறன் வளர்ப்பில் தனது ஆற்றலையும் நேரத்தையும் அர்ப்பணித்தார். அவரது மாணவர்கள் இப்போது அரசு நிறுவனங்கள், தொழில் மற்றும் கல்வித்துறையில் உயர் பதவிகளில் உள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சார்பாக, அவரது மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம், மேலும் துயரத்தில் ஆழ்ந்து போயுள்ள அவரது குடும்பத்தினருக்கு அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். பிரிந்த அவரது ஆன்மா நித்திய ஓய்வை அடையட்டும். -
**யாழ் பல்கலைக்கழக சமூகம்.**

தகவல்- ***கார்த்திகேசு யோகராஜா (சகோதரரும் மைத்துனரும்)***
***தொலைபேசி இலக்கம் – 416 451 5774 (கனடா)***
***கந்தசாமி ஸ்ரீகந்தநடராஜா (மைத்துனரும் சகோதரரும்)***
***தொலைபேசி இலக்கம் – 416 287 6777 (கனடா)***

ஜீவன் முக்தி (பகுதி ) 123

# ஞான தீக்ஷை



அது முதன் முறையாக எனக்குள் நடந்த அனுபவம். என்னுடைய வாழ்க்கையிலேயே மறக்க முடியாத அனுபவம் என்றால் இதுதான்.
ஒரு பத்துவயது இருக்கும். அப்போது நடந்த ஆன்மரீதியான அந்த அனுபவம்.
சாதாரணமாக, தர்க்கரீதியான விளக்கம் அளிக்க முடியாது. ரெம்ப ஆழமான அனுபவம் என்பதினாலே, அதைப்பற்றி முதலில் புரிந்து கொண்டீர்களானால் அதன்பிறகு நாம் தொடர்ந்து உள்ளே போகலாம்.
ஒரு சிறிய கதை.
ஓரு இளவரசன் ஊதாரித்தனமாக இருந்ததினாலே, அரசன் அவரை நாடு கடத்தி விடுகிறார். இளவரசன் வேறு நாட்டிற்குச் சென்று ரோடுரோடக அலைந்து பிச்சை எடுத்து சாப்பிடுகிறார். 'தான் ஒரு காலத்தில் இளவரசனாக வாழ்ந்தவன்' என்ற ஒரு நினைப்பையே விட்டுவிட்டு, அதை முற்றிலும் மறந்து பிக்ஷை எடுத்து வாழ்ந்து கொண்டிருந்தார்.
அந்த அரசனுக்கு வயதாகி விட்டது. அடுத்து சாக வேண்டிய நேரமும் எட்டிக்கொண்டிருந்தது. அப்போது ஊரில் இருந்த மந்திரிகள் எல்லோரும் நேர்ந்து 'அரசே உங்களுக்கோ வயதாகிவிட்டது. சாக வேண்டிய தருணம் வந்து விட்டது. இந்த நாட்டை அடுத்து ஆட்சி செய்ய இன்னொரு அரசன் வர வேண்டும். நீங்கள் இருக்கும்போதே. இளவரசனுக்குப் பட்டம் கட்டியாக வேண்டும்' என்றார்கள்.

அதற்கு அந்த அரசர் 'இல்லையில்லை. அவனைக் கூப்பிடக் கூடாது. அவன் போனவன் போனவன்தான்' என்று சொல்கிறார். ஆனால் ஊர்க்காரர்கள் ஒத்துக் கொள்ளவே இல்லை.

'இல்லை வேறு வழியே இல்லை. அரசே எங்களுக்கு ஒரு அரசன் வேண்டும். அதனால் இளவரசனை அழைத்துக் கொண்டு வந்தே ஆகவேண்டும்' என்று அடம் பிடிக்கிறார்கள்.
இறுதியில் இந்த அரசர், 'சரி' என்று ஒப்புக்கொள்கிறார். அமைச்சர்கள் தேர், யானை என்று படைகளைத் திரட்டிக் கொண்டு ஊர் ஊராகச் சென்று தேடுகிறார்கள். பக்கத்து நாட்டிற்குச் சென்று தேடுகிறார்கள். இளவரசன் எங்கு இருக்கிறார்? என்று விடாமல் தேடுகிறார்கள். அப்போது ஓர் இடத்தில் ஒரு கடைக்கு எதிரில் ஒரு பிச்சைக்காரர் நின்று கொண்டிருக்கிறார். அவரைப் பார்த்த உடனேயே மந்திரி கண்டுபிடித்துவிட்டார் அவர் இளவரசர்தான் என்று.

அவரிடம் சென்று 'இளவரசே என்னைத் தெரிகிறதா? உங்களை அரசர் மீண்டும் அழைத்து வந்து அரசராக்கச் சொல்கிறார்' என்று சொல்லிக் காலில் விழுந்தார்.
அந்த மந்திரி, பிச்சைக்காரரின் காலில் விழுந்து காலைத் தொட்டதுதான் தாமதம், உடனே 'அய்யா தருமம் செய்யுங்கள்' என்று கேட்டுக் கொண்டிருந்த பிசசைக்காரன், 'எங்கே என் ரதம்? வந்து விட்டதா?' என்று கேட்டார்.
நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். அந்த வினாடிவரை பிச்சைக்காரனாக இருந்தவர், உடனே அரசனாக மாறிவிட்டார். தன்னுடைய சுயநிலையைத் திரும்பப் பெற்று விட்டார்.

அந்த வினாடியே அவருடைய உடல், மொழி எல்லாமே மாறிவிட்டது. அதன்பிறகு அவரை அரசனாக மாற்றுவதற்கு ஏதாவது பயிற்சி கொடுக்க வேண்டுமா என்ன?
அது மாதிரியே என்னுடைய வாழ்க்கையில், ஒரு வினாடிப் பொழுதில், 'நான் ஒரு அவதாரம்' என்று உணர்ந்தேன்.

அதை அன்று அந்த அவதார புருஷர் நிகழ்த்திவிட்ட கணங்களை நினைத்தால் இப்போது கூட என் உடலே இனிக்கிறது. முதலில் அவதாரம் என்பதை நன்கு ஆழ்ந்து புரிந்து கொள்ளுங்கள். அதாவது மற்றவர்களை விட வித்தியாசமானவன் என்பதை உணர்ந்தேன்.
ஓரு வினாடிப் பொழுதிலேயே அதை உணர்ந்தேன். சொல்லப்போகும் ஆழமான சத்தியங்களை ஆழ்ந்து உள்வாங்குவதே பல வழிகளில் உணர்வுக் கதவுகளைத் திறக்கும். இனி சொல்லப்போகும் ஆழமான சத்தியங்களை ஆழ்ந்து உள்வாங்குவதே பல வழிகளில் உணர்வுக் கதவுகளைத் திறக்கும்.
பயிற்சி கொடுத்து அவதார புருஷர்களை உருவாக்க முடியாது.
நீங்கள் நினைக்கலாம். 'இவருக்கு முதலில் பேச்சுத்திறமை வந்திருக்கும். அதன்பிறகு எழுதுகின்ற திறமை வந்திருக்கும். அதன்பிறகு நிறைய திறமை தெரிய வந்திருக்கும். இப்படி படிப்படியாக வளந்திருப்பார்' என்று.
அவதார புருஷராவதற்குப் பயிற்சி கிடையாது.
அந்தப் பிச்சைக்காரனுக்கு இளவரசராக ஆவதற்கு யாரும் பயறிச்சியளிக்கவில்லை. தான் ஒரு இளவரசன் என்பதை உணர்ந்த உடனேயே அந்தப் பிச்சைக்காரத் தன்மை மறைந்து விட்டது.
இந்த கதை ரொம்ப அழகான கதை... அணிந்திருப்பது பிச்சைக்கார உடையாக இருந்தாலும் அவன் கேட்ட விதம், 'எங்கே என் தேர்? தேர் தயாராக உள்ளதா? என்றான்.
அது போல் இன்னும் ஆழமான பரிமாணத்தில் 'அவதாரம்' என்று உணர்ந்த உடனேயே 'நான் ஒரு மனிதன்' என்ற எண்ணம் அழந்து விட்டது.
இந்தக் கதையை நன்கு ஆழமாக கேளுங்கள். unclutching நிகழ்ந்த பொழுதில்தான் 'ஒரு அவதாரம். அதாவது வேறு ஒரு காரணத்திற்காக மனித உடல் எடுத்திருக்கின்ற ஒரு சக்தி' என்று உணர்ந்தேன்.
அதற்காக நீங்கள் எல்லோரும் சாதாரணமானவர்கள் என்று சொல்லவில்லை. நீங்கள் எல்லோரும் 'கடவுள் சக்தி' தான் அதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. எந்த வினாடிப் பொழுதில் நீங்களொரு அவதாரம் என்று உணர்கிறீர்களோ அதைத்தான், ஞானமடைதல் என்று சொல்கிறோம். அதைத்தான் முழுமை அடைதல் என்று சொல்கிறோம்.

---

*(தொடரும்...)*

## *பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்*

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.

எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080



# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

அன்னையின் மடியில்

21 . 08 . 1942



ஆண்டவன் நிழலில்

10 . 09 . 2020

## அன்னலட்சுமி தங்கவடிவேலு
### (மணி அக்கா)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே நீங்கள் அணைந்த நாளிலிருந்து எங்களின் வாழ்க்கை இருள் அடைந்து விட்டது. எங்களின் பிரகாசமான வாழ்க்கைக்கு முதல்வியாகவும், எங்கள் குடும்பத்தின் ஆணி வேராகவும் இருந்தீர்கள். உங்களை இழந்த பின்பு வேர் அறுந்த மரங்களாக வாடி வதங்குகின்றோம். நீங்கள் இருந்த இடத்தை நிரப்புவதற்கு இங்கு எவரும் இல்லை இனிமேலும் வரப்போவதும் இல்லை. உங்களை நினைத்து ஆறாத் துயரில் கண்ணீர் வடிக்கின்றோம். உங்களின் பெற்றோருக்கு சிறந்த மகளாகவும், உடன் பிறந்தோர்க்கு உண்மையான சகோதரியாகவும், கட்டிய கணவருக்கு அன்பான மனைவியாகவும், பிள்ளைகளிற்கு பாசமான தாயாகவும், மருமக்களிற்கு அன்பான மாமியாகவும், பேரப்பிள்ளைகளிற்கு பாசம் மிகுந்த பாட்டியாகவும், பூட்டப்பிள்ளைகளிற்கு புன்னகை கலந்த, பாசமுள்ள பூட்டியாகவும், மாமன், மாமிக்கு சிறந்ததொரு மருமருகளாகவும், உறவினர் எல்லோருக்கும் அன்பான மச்சாள், மாமி, மணி அக்காவாகவும், விருந்தோம்பலில் சிறந்தவராகவும் வாழ்ந்து காட்டிய உங்களை காலன் கவர்ந்து சென்று ஆண்டு ஒன்று ஓடி மறைந்தது. நாங்களோ உங்களை நினைத்து மனம் உடைந்து கண்ணீர் சிந்திய வண்ணம் இருக்கின்றோம். உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

***எங்கள் துக்கத்தில் பங்கெடுத்த அனைத்து உள்ளங்களிற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.***

**தகவல்:** தங்கவடிவேலு(விநாயகம்)(416 454 3234) கணவர்
பிள்ளைகள், மருக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.


Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE



**Serving the Tamil Community of Greater Toronto**



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



**CHRISTEEN SEEVARATNAM**
**(416) 258-6759**

**இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்**
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
**www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca**

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவகையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழ் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

25ஆவது வெள்ளி விழா
2021
UTHAYAN
உதயன்

JRS AUTO TECH.CA INC
All Mechanical & Electrical Repairs
9 AM TO 9 PM – 7 DAYS A WEEK
ENGINE
TRANSMISSION
RUSTPROOFING
OILCHANGE
TYRES
AUTOGLASS & TINT
416-206-9489 | 416-628-4399
2655 Lawrence Ave, E, Unit 5
Scarborough, ON M1P 2S3

உதயம் 1327 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 10, 2021

# யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் முன்னாள் பேராசிரியர் கார்த்திகேசு சித்திரவடிவேலு அவர்களின் பாரியாரும் காலமானார்



கடந்த 3ம் திகதி காலமான யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் முன்னாள் பேராசிரியர் கார்த்திகேசு சித்திரவடிவேலு அவர்களின் பாரியார் திருமதி சித்திரவடிவேலு தவமலர் அவர்களும் நான்கு நாட்கள் கழிந்து கடந்த 7ம் திகதி காலமானார். இருவரது இறுதிக்கிரியைகள் அச்சுவேலியில் இடம்பெற்றன.

காலஞ்சென்ற பேராசிரியர் கார்த்திகேசு சித்திரவடிவேலு அவர்கள் அச்சுவேலி தம்பாலை ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்த்தான தர்மகர்த்தா சபையின் தலைவராகவும் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது

# கனடா உதயன்' பத்திரிகையின் வெள்ளி விழா சிறப்பிதழின் பிரதிகள் ஊடக நண்பர்களுக்கு வழங்கப்பெற்றன





கனடா உதயன்' "பத்திரிகையின் நூற்று நான்கு பக்கங்கள் கொண்ட வெள்ளி விழா சிறப்பிதழின் சிறப்புப் பிரதிகள் தொடர்ச்சியாக நண்பர்களுக்கும் அன்பர்களுக்கும் வழங்கப்பெற்று வருகின்றன

இந்தவகையில் கனடாவில் தமிழ்சிஎன்என் இணைய ஊடக நிறுவனத்தின் நிறுவனர் திரு அகிலன் மற்றும் "தேடிப்பார்" இணைய ஊடகம் மற்றும் வர்த்தகக் கையேடு நிறுவனர் திரு குமார் ஆகியோருக்கு அண்மையில் பிரதம ஆசிரியர் அவர்களால் வழங்கப்பெற்றன.

# மன்னார் மாவட்டத்தில் அமையவுள்ள மின் தகன நிலைய நிதிக்காக கனடா TORONTO VOICE OF HUMANITY அமைப்பின் ஊடாக 1 இலட்சம் ரூபாய்களை அனுப்பி வைத்த சக்தி ஞானம்மா திருநாவுக்கரசு



Toronto Voice Of Humanity

மன்னார் மாவட்டத்தில் தற்போது கொரோனா மரணங்கள் அதிகரித்துள்ளதால் அங்கு மின்சாரத்தில் இயங்கும் உடல் தகன நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற முயற்சியில் இறங்கியுள்ள மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களின் திட்டத்திற்கு ஆதரவு வழங்க - மின் தகன நிலைய நிதிக்காக கனடா **TORONTO VOICE OF HUMANITY** அமைப்பின் ஊடாக 1 இலட்சம் ரூபாய்களை அனுப்பி வைத்துள்ளார் கனடா ஆதிபராசக்தி குரு மன்றத்தின் ஸ்தாபகர் சக்தி ஞானம்மா திருநாவுக்கரசு அவர்கள்.

அண்மையில் ஸ்காபுறோ வைத்தியசாலை நிதிக்கு 5000 டாலர்களை கனடா ஆதிபராசக்தி குரு மன்றத்தின் சார்பில், ஸ்தாபகர் சக்தி ஞானம்மா திருநாவுக்கரசு அவர்கள் வழங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# "நோய்த் தொற்றுக் காலத்திலும் தெய்வீகத் தன்மை கொண்ட வீணை அரங்கேற்றத்தை நடத்திய ஆசிரியை குகனேஸ்வரியைப் பாராட்ட வேண்டும்'

## துளசி மற்றும் வருணிக்கா ஆகியோரின் வீணை அரங்கேற்றத்தில் சங்கீத வித்துவான் தனதேவி மித்ரதேவா புகழாரம்





"மிகக் கொடிதான கொரோனா நோய்த் தொற்று பரவிக் கிடக்கும் காலம் இது. இவ்வாறான இடர் மிகுந்த காலப் பகுதியில் எல்லோரும் பயத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் நேரத்தில் இன்றைய அரங்கேற்றம் அனைவருக்கும் ஒரு வியப்பூட்டும் ஒரு விழாவாகும். மேலும். தெய்வீகத் தன்மை கொண்ட வீணை அரங்கேற்றத்தை நடத்தியு ஆசிரியை குகனேஸ்வரி அவர்களைப் பாராட்ட வேண்டும், இவ்வாறு அவர் பாராட்டினார்.

இங்கே காணப்படும் படங்களில் அன்றைய அரங்கேற்றச் செல்விகளான துளசி விஜி மற்றும் வருணிக்கா சங்கர் ஆகியோருக்கு பாராட்டுக் கேடயங்களை ஆசிரியை குகனேஸ்வரி சத்தியமூர்த்தி வழங்குவதைக் காணலாம். (படம்: சத்தியன்)

*(உள்ளே விபரமான செய்தி 16ம் பக்கத்தில்)*

# PRIMA DANCE SCHOOL கலைக் கல்லூரி தனது வருடாந்த ஒன்று கூடலை கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தியது



PRIMA DANCE SCHOOL கலைக் கல்லூரி. தனது வருடாந்த ஒன்று கூடலை கடந்த ஞாயிற்றுக்கிழமை 5ம் திகதி சிறப்பாக நடத்தியது.

கொரோனா தொற்று காரணமாக பல மாதங்களாக ஒன்று சேர்ந்து வைபவங்களைக் கொண்டாட முடியாமலும். சந்தித்து உரையாடி மகிழ இயலாமலும் இருந்த நண்பர்கள்- பெற்றோர்கள்- மாணவர்கள்- மற்றும் கல்லூரிக்கு ஆதரவை வழங்கும் வர்த்தக நண்பர்கள் ஊடக நண்பர்கள் என அனைவரும் இணைந்து நின்று மகிழ்ந்தனர்.

# மணமகள் ஜெகேஸ் - மணமகள் செரீனா ஆகியோரின் திருமணம் இனிதே நடைபெற்றது



கனடா"உதயன்" பத்திரிகை நிறுவனத்தின் நீண்ட நாள் நண்பரும் இந்நாள் பாஸ்டருமான சோதி- செல்வி தம்பதியரின் சிரேஸ்ட புதல்வர் மணமகன் ஜெகேஸ் மற்றும் பாஸ்டர் ராஜன்-மஞ்சு தம்பதியரின் சிரேஸ்ட புதல்வி மணமகள் செரீனா ஆகியோரின் அழகிய திருமணம் வைபவம் கடந்த ஆகஸ்ட் 28ம் திகதி சனிக்கிழமை காலை தொடக்கம் பிற்பகல் வரை கனடா ஸ்காபுறொ-வில் தேவாலயம் ஒன்றிலும் பின்னர் திருமண வரவேற்பு மண்டபத்திலும் சிறப்பாக நடைபெற்றது.

அழைக்கப்பெற்ற ஏராளமான விருந்தினர்கள் திருமணத்திலும் வரவேற்பு நிகழ்விலும் கலந்து சிறப்பித்தனர். கனடா உதயன் சார்பிலும் நேரயாக வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பெற்றன. (படம்:- சத்தியன்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan
Broker
Homelife/Future Reality Inc., Brokerage
Joy H-Selvanayagam
Broker